மே 20, 2001 ரூபா 14.00 அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்



## தமிழகத்தில் மீண்டும் எம்.ஜி.ஆர் ஆட்சி!

## கருணாநிதி கதி என்ன?

## சிக்கலில் அரசு: புலிகள் மிரட்டல்; ஐ.தே.க. அதட்டல்; உலகம் உருட்டல்.



தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சீற்றம்!

# குடாநாடு முழுதும் தலைவிரிக்கும் சமூகச் சீரழிவுகள், மோதல்கள்!

## கத்தி, வாள் வெட்டுக்காயங்களுடன் தினமும் பலர் ஆஸ்பத்திரியில் அனுமதி

குடாநாட்டில் இரவு நேர ஊரடங்குச் சட்டத்தை படையினர் மேலும் ஒரு மணிநேரம் தளர்த்தியுள்ளனர்.

இரவு 8 மணிமுதல் காலை 5 மணிவரை அமுல் செய்யப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் தற்போது இரவு 9 மணிமுதல் அமுல் செய்யப்படுகிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா படை அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டதை அடுத்தே ஊரடங்கு தளர்த்தப்பட்டதாக ஈ.பி.டி.பி அமைப்பு தெரிவித்துள்ளது.

ஊரடங்கு இரவு 9 மணிவரை தளர்த்தப்பட்டாலும் கூட யாழ். நகரப் பகுதி இரவு 8 மணியுடனேயே சந்தடியின்றி அடங்கிப் போய் விடுகிறது.

ஆனால் நகருக்கு வெளியே கிராமப் புறங்களில் மக்கள் இரவுவேளைகளில் வீதிகளில் நடமாடுகின்றனர்.

ஊரடங்கு நேரம் மெல்ல மெல்லத் தளர்த்தப்படுவது குடா நாட்டில் இயல்பு நிலை திரும்புவதைக் காட்டினாலும் இந்த 'இயல்புநிலை' பெரும் ஆபத்தான ஒன்றாக மாறிவிடுமோ என்ற அச்சமும் தலைதூக்கியிருக்கிறது.

அண்மைக்காலமாக முன்னிரவு வேளைகளில் இடம் பெற்று வரும் சில சம்பவங்கள் இந்த அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

தனிப்பட்ட பகைமைகளுக்காக ஆட்களை ஆட்கள் தாக்கிக் கொள்ளும் சம்பவங்களும், கோஷ்டி மோதல்களும் திடீரென அதிகரித்திருக்கின்றன.

இருட்டடி, இருளில் மறைந்து நின்று கொட்டன் அடி, உலக்கை அடி, இரும்புக் கம்பியால் தாக்குதல் கத்தி வெட்டு, வாள் வெட்டு என்ற தலைப்புகளில் உள்ளூர் பத்திரிகையில் செய்திகளைத் தாராளமாய்க் காணமுடிகிறது.

ஒரு காலத்தில் ஷெல் மற்றும் குண்டுத் தாக்குதல்களில் காயமடைந்த பெரும் எண்ணிக்கை யான பொதுமக்களுக்குச் சிகிச்சை அளித்து வந்த யாழ். ஆஸ்பத்திரியின் 24 ஆம் வார்ட் தற்போதும் காயக்காரர்களால் நிரம்பி வழிகிறது.

அவர்கள் அனைவருமே மிக மோசமான அடி மற்றும் வெட்டுக் காயங்களுடன் காணப்படுகின்றனர். கடந்த நான்கு மாத காலப் பகுதியில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு மிக மோசமான வெட்டுக் காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. அண்மைய ஆண்டுகளின் தரவுகளில் இது மிகக் கூடிய எண்ணிக்கை ஆகும்.

மிகப் பெரிய சமூகச் சீரழிவின் தொடக்கம் இது என்று சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டிருக்கின்றனர்.

ஊரடங்கு இல்லாத முன்னிரவு வேளை அடிதடிச் சம்பவங்களுக்கும் திருட்டுக்களுக்கும் பெரும் வாய்ப்பாகி இருக்கிறது.

மின்சாரம் இல்லாத இருண்ட வீதிகள், ஆட்களை இனம் காட்டாமல், தாக்கிவிட்டுத் தப்பிச் செல்வதற்கும் வாய்ப்பாகிறது.

கடந்த வாரம் நல்லூர்ப் பகுதியில் முன்னிரவு நேரம் வீதியில் கதைத்துக் கொண்டு நின்ற பல்கலைக்கழக மாணவர் ஒருவர் சைக்கிளில் வந்த சுமார் ஏழுபேரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார். தாக்கியவர்கள் துப்பாக்கிகளை வைத்திருந்ததாக அந்த மாணவர் கூறுகிறார்.

வியாபார நிலையங்களை மூடி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இருவர் அண்மையில் தாக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் மிக நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சாதி அடிப்படையிலான — பிரதேச ரீதியிலான — கோஷ்டி மோதல்களும் மலிந்துள்ளன.

நீர்வேலி தெற்கு மற்றும் வடக்குப் பகுதி இளைஞர் கோஷ்டிகளுக்கு இடையே கடந்த சில வாரங்களாக இரவு பகல் என்று பாராமல் மோதல்கள் தொடர்கின்றன. இந்த மோதல்கள் அப்பிரதேச மக்களிடையே பெரும் விசனத்தைக் கிளப்பியிருக்கிறது.

அங்குள்ள பிரபல ஆலயம் ஒன்றின் மஹோற்சவத்தின் போதும் இந்த மோதல் நீடித்தது. ஆலயப் பகுதியில் ரியூப் லைட்டுகள் அடித்து நொறுக்கப்பட்டன. வாள் வெட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இளைஞர்களின் இத்தகைய அடாவடித்தனங்கள், சமூகவிரோதச் செயல்கள் கட்டுப்பாடின்றித் தொடர்கின்றன.

வடமராட்சியில் நெல்லியடி மற்றும் கரவெட்டிப் பகுதிகளில் இளைஞர் கோஷ்டிகளின் அட்டகாசம் தாங்க முடியாது பொதுமக்கள் கிளர்ந்தெழுந்திருக்கின்றனர்.

அப்பகுதியில் அண்மையில் பெற்றோர்கள் திரண்டு நடத்திய எதிர்ப்பு ஊர்வலம் குடாநாட்டு மக்கள் அனை வருக்குமே பெரும் தலை குனிவை ஏற்படுத்தி விட்டது.

பாடசாலைகளுக்கும், ரியூசன் வகுப்புகளுக்கும் செல்லும் மாணவிகள் மீது இளைஞர்கள் புரியும் சேஷ்டைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. தென்மராட்சி மற்றும் பளைப் பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் வசிக்கும் மக்களே ஊர்வலத்தை நடத்தினர்.

சந்திக்குச் சந்தி நின்று மாணவிகள், இளம் பெண்கள் ஆகியோரிடம் சேஷ்டை புரியும் இளைஞர் குழுக்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் பொலிஸாரிடம் கோரியுள்ளனர். தற்போது அந்தப் பகுதிகளில் பொலிஸ் ரோந்து தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக நெல்லியடிப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.



சந்திக்குச் சந்தி பொலிஸார் காத்து நின்று இளைஞர் களைக் கண்காணிக்கும் நிலைமை வடபுலத்தில் ஏற்பட்டிருப்பது குறித்து வடமராட்சி பிரதேச வாசிகளிடையே கவலை ஏற்பட்டிருக்கிறது.

இளைஞர்களை வழிநடத்தி சமூகத்தை இயக்கத் தக்க சக்திகள் இல்லாமல் போனதே இந்தச் சீரழிவு நிலைக்குக் காரணம் என்று பலரும் பேசிக் கொள்வது காதில் விழுகிறது.

### பிணக்குகளும் நிர்வாகச் சண்டைகளும்

குடாநாட்டில் ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொதுப்பணி மன்றங்கள் சார்ந்த பிணக்குகள், நிர்வாகச்சண்டைகள் அதிகரித்து வருவது குறித்து ஏற்கனவே சில தடவைகள் இப்பத்தியில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது நினைவிருக்கலாம்.

இத்தகைய பிணக்குகள் தீர்வின்றி இழுபறிப்பட்டு நீதிமன்றம் வரை சென்று கொண்டிருக்கின்றன.



கோண்டாவில் பகுதியில் அண்மையில் பட்டப்பகலில் கடை ஒன்றில் கொள்ளை முயற்சி ஒன்று இடம் பெற்றது. இந்தக் கொள்ளையைத் தடுக்க முற்பட்டபோது அங்கு மோதல் ஏற்பட்டது. மோதலில் காயம் அடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருவரையே படத்தில் காண்கிறீர்கள். 16 வயது மட்டுமே நிரம்பிய இவரிடமிருந்து மீட்கப்பட்ட அடையாள அட்டைகள், ஒரு தொகைப்பணம் ஆகியவை ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரில் உள்ள பிரபல அம்மன் ஆலயமான வீரமாகாளி அம்மன் கோவில் தொடர்பான நிர்வாகப் பிணக்கு நீதிமன்றம் வரை சென்றிருக்கிறது.

தற்போது இந்த ஆலயத்தின் நாளாந்தப் பூசைகள் மற்றும் புனருத்தாரணப் பணிகள் அனைத்தும் நீதிமன்றின் அறிவுறுத்தலுக்கு அமையவே இடம்பெற்று வருகின்றன.

சண்டிலிப்பாய் பகுதியில் பிரபல அம்மன் ஆலயம் ஒன்றின் மஹோற்சவத்தின் போது சுவாமி காவுவதில் ஏற்பட்ட பிணக்கு பெரும் அடிதடியாக மாறியிருக்கிறது.

ஆலய நிர்வாகத்துக்கும் மற்றொரு குழுவினருக்கும் இடையே ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாகியது. தீவர்த்திகளை ஆயுதங்களாகப் பயன்படுத்தி தாக்கிக் கொள்ளும் அளவுக்கு நிலைமை சென்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலரும் மானிப்பாய் பொலிஸாரும் தலையிட்டு இரு சாராருக்கும் இடையே இணக்க நிலையை ஏற்படுத்த வேண்டியதாயிற்று.

அதன் பின்னர் ஆலய மஹோற்சவம் ஒருவாறு முறுகல் இன்றி முடிவடைந்தது. ஆனால் இந்தப் பிணக்கின் எதிரொலியாக சண்டிலிப்பாய்ப் பகுதிக்குள் புகுந்த இனந் தெரியாத கும்பல் ஒன்று பலரைத் தாக்கியும், உடமைகளுக்குச் சேதம் விளைவித்தும் பெரும் அட்டகாசம் புரிந்துள்ளது.

கடந்த எட்டாம் திகதி அதிகாலை கத்திகள் பொல்லுகளுடன் புகுந்த கும்பல் ஆலயத்தை அண்டி அமைந்துள்ள சில வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்ததாக சுடர் ஒளிக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

சமய சந்நிதிகளில் இத்தகைய நிர்வாகப் போட்டி வளர்ந்து வருவது குறித்து சமயப் பெரியோர்களிடையே கவலை எழுந்துள்ளது.

சமூக நிறுவனங்கள் பலவற்றின் நிலையும் இப்படித்தான் உள்ளது.

நல்லூரில் உள்ள சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் தாமே என்று இரு சாரார் உரிமை கொண்டாடி வருவதால் கடந்த பல மாதங்களாக அந்த சனசமூக நிலையம் செயற்பாடின்றி மூடிக் கிடக்கிறது.

போரினால் அழிவுண்ட சனசமூக நிலையங்கள் பலவும் புனரமைக்கப்பட்டு கிராம முன்னேற்றச் செயற்பாடுகளில் திறம்பட ஈடுபட்டு வரும் அதேவேளை நகரை அண்டிய பகுதியில் உள்ள இந்த சனசமூக நிலையம் மூடிக் கிடப்பது பலருக்கும் விசனத்தைக் கொடுத்துள்ளது.

இந்த நிலையத்தின் நிர்வாகிகள் எனக் கூறிக் கொள்ளும் இருசாராரும் விட்டுக் கொடுக்காத போக்கில் தீவிரமாக இருப்பதால் சமூக ஒற்றுமை சிதைந்து வருகிறது.

நீண்டு இழுபட்டுத் தொடரும் இந்தப் பிணக்கை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய உள்ளூராட்சி அதிகாரிகள் வாளாவிருப்பதால் நெருக்கடி வலுத்து வருகிறது.

இந்த சனசமூக நிலையத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ளதாகக் கூறும் புதிய நிர்வாகிகள் யாழ். மாநகர சபையின் அங்கீகாரம் தமக்குக் கிடைத்துள்ளதாகக் கூறுகின்றனர்.

அதேவேளை முந்திய நிர்வாக சபையினரோ தமது குழுவுக்கே இன்னமும் சட்டபூர்வ அங்கீகாரத்தை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் வழங்கி இருப்பதாகக் கூறிக் கொள்கின்றனர்.

இந்த சனசமூக நிலையம் யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளேயே அமைந்துள்ளதால் அதனைக் கண்காணிக்கும் பொறுப்பும் அதிகாரமும் யாழ். மாநகர சபையின் சனசமூக நிலையப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கே உண்டு.

ஆனால் இந்த நிர்வாக இழுபறியை சுமுகமாகத் தீர்த்துவைக்க அவர்கள் இதுவரை உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்காதது குறித்து அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது.

சனசமூக நிலையத்தின் பிரதேச எல்லையை நிர்ணயித்து அதன் உறுப்பினர்கள் அனைவரது பங்களிப்புடன் பொதுக் கூட்டத்தைக் கூட்டி புதிய — சட்டபூர்வமான நிர்வாக சபை ஒன்றை அமைக்க முயற்சிகள் எடுக்கப்படுவதாக யாழ். உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி கள் தெரிவித்தனர். ஆனால் இன்ன மும் அது நடந்த பாடாக இல்லை.

அண்மையில் இந்த நிலையத் தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலிக் கூட்டம் ஒன்று இரு தரப்பின் விரோதப் போக்கினாலும் கடைசி நேரத்தில் கை விடப் பட்டது. பொலிஸ் பாதுகாப்புடன் கூட்டத்தை நடத்த எடுக்கப்பட்ட முயற்சியும் கை கூடவில்லை.

குடாநாட்டின் பொலிஸ் நிர்வாகம் இன்னமும் சீராக செயற்படத் தொடங்கவில்லை. பாதுகாப்புத் தொடர்பான சிக்கலுக்கு மத்தியில் ஊர் ஊராக இத்தகைய நிர்வாகச் சண்டைகள், கோஷ்டி மோதல்கள், திருட்டுக்கள் என்று ஏராளமான முறைப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி இருப்பதால் பொலிஸ் தரப்பே குழம்பிப் போய் இருக்கிறது. சங்கிலியன் மன்ற சனசமூக நிலையப் பிணக்கு இங்கு உதாரணத்துக்குக் காட்டப்பட்ட ஒரு விவகாரம் மட்டுமே.

இதுபோன்று ஏராளமான சச்சரவுகள் குறித்த முறைப்பாடுகள் 'சுடர் ஒளி'க்குக் கிடைத்து வருகின்றன. அவை இப்பத்தியில் பின்னர் உரிய வேளை வெளியிடப்படும்.

குடாநாட்டில் இத்தகைய நிர்வாகப் போட்டிகள், சச்சரவுகள், இழுபறிகள், கோஷ்டி மோதல்கள் அதிகரித்து வருவதற்குத் 'தட்டிக் கேட்க ஆளில்லை' என்ற சூழ்நிலையே பெரிதும் வாய்ப்பாகி விட்டதாகப் பொதுமக்கள் கூறிக் கொள்கின்றனர்.

— வலிகாமத்தான்



வாக்களிப்பில் ஜெயலலிதா, கருணாநிதி, மாறன், ஸ்டாலின், மூப்பனார், வைகோ, ராமதாஸ்

# ஜெயலலிதாவின் நண்டுப்பிடி சட்ட திட்டங்கள் தூள் தூள்!

## ஆறு மாத காலக்கெடு அவருக்கு ஒரு பொருட்டல்ல



முதலமைச்சர் ஜெயலலிதா ஆளுநர் பாத்திமாபீபி

தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றி பெற்றதை அடுத்து ஜெயலலிதாவின் நண்டுப் பிடிக்குள் ஆட்சி அதிகாரம் வந்து விட்டது. சட்ட திட்டங்கள் அனைத்தும் தூள் தூளாகி விட்டன. புரட்சித் தலைவி வைத்தது தான் இனிச் சட்டம் என்று அ.தி.மு.க ஆதரவாளர் கள் ஆர்ப்பரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

தேர்தலில் போட்டியிட ஜெயலலிதாவை தேர்தல் ஆணையகம் அனுமதிக்கவில்லை. ஆயினும் தமது கட்சிக்கு அமோக வெற்றியைப் பெற்றுக் கொண்டார் ஜெயலலிதா. சட்டம் அளித்த தீர்ப்பை விட மக்கள் அளித்த தீர்ப்பே சக்தி வாய்ந்தது என்பது ஜெயலலிதாவின் நிலைப்பாடு. அதனை முன்னிலைப்படுத்தி தமிழக ஆளுநர் செல்வி பாத்திமாபீபி எவ்வித எதிர்ப்பும் இன்றி தம்மை முதலமைச்சராக நியமிக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தி விட்டார் செல்வி ஜெயலலிதா. தமிழகத்தை வழி நடத்தும் அதிகாரத்தை இந்த இரு செல்விகளும் சுவீகரித்துக் கொண்டு விட்டார்கள். இதனால் இந்தியாவின் சட்ட நிர்வாகிகள் திகைத்துப் போய் நிற்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

அ.தி.மு.க கூட்டணி அமோக வெற்றி பெற்றதும் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு இன்றியே அ.தி.மு.க ஆட்சியை அமைக்கும் என்று அறிவித்தார் ஜெயலலிதா.

பக்கத்து வீடு

தமது சட்டசபை உறுப்பினர்களை ஒன்று திரட்டி "ஜெயலலிதாவே எமது முதலமைச்சர் வேட்பாளர். வேறு எவரையும் அந்தப் பதவிக்கு நாம் தெரிவு செய்ய மாட்டோம்" என்று தீர்மானம் நிறைவேற்றச் செய்தார். ஆளுநரைச் சந்தித்து இந்தத் தீர்மானம் பற்றித் தெரிவித்தார். உடனயாகவே முதலமைச்சர் பதவியை ஏற்கும் படி ஜெயலலிதாவை ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இந்திய சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கூட ஆளுநர் பெறவில்லை. இது பற்றி சட்டமா அதிபருக்கு மனக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெயலலிதாவின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட விடயத்தை ஆளுநர் பெரிதுபடுத்தாமல் விட்டு விட்டார். ஆறு மாதங்களுக்குள் ஜெயலலிதா ஒரு சட்டசபைத் தொகுதியில் தேர்தலில் நின்று உறுப்பினராகி விட வேண்டும் என்ற நிபந்தனை மட்டுமே விதிக்கப்பட்டிருக்கிறது.

ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை ஏற்க முடியாமல் போய் இருந்தால் தமிழகத்தில் பெரும் கலவரம் ஒன்றே ஏற்பட்டிருக்கும் என்று காவல் துறையினர் எதிர்பார்த்தனர்.

கருணாநிதி ஆட்சியில் ஜெயலலிதாவுக்கு வேட்பு மனு மறுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் ஜெயலலிதாவின் வேட்பு மனுவை மறுக்கும் துணிவு யாருக்கு வரப் போகிறது? — இவ்வாறு கேட்கிறார்கள் அ.தி.மு.க தொண்டர்கள். எனவே ஆறு மாதக் காலக்கெடு ஜெயலலிதாவுக்கு ஒரு பொருட்டல்ல என்றே தெரிகிறது.

ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் மோசடி வழக்குகள் இனிமேல் கிடப்பிலே போடப்படலாம் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

ஜெயலலிதாவுக்கு லோகசபையில் 11 உறுப்பினர்கள் தற்போது இருக்கிறார்கள். கருணாநிதிக்கும் 11 உறுப்பினர்களே இருக்கிறார்கள். எனவே வாஜ்பாய் அரசுக்கு ஜெயலலிதா நட்புக்கரம் வீசலாம். மத்திய அரசிலும் அ.தி.மு.க பங்கு பற்றலாம்.

அதன் மூலம் வாஜ்பாயை ஆட்டிப் படைக்கும் வல்லமையை ஜெயலலிதா பெறக் கூடும். அத்தகைய ஒரு நிலை ஏற்பட்டால் எவராலும் அசைக்க முடியாத நிலைக்கு ஜெயலலிதா உயரக் கூடும்.

முழு இந்தியாவின் அரசியலும் ஒரு மாற்றத்தை எதிர்நோக்கி இருக்கிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

— கதாசி

# தமிழகத்தில் மீண்டும் எம்.ஜி.ஆர். ஆட்சி!

தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றி பெற்றதை அடுத்து தமிழகத்தில் மீண்டும் எம்.ஜி.ஆர் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது.

தேர்தல் பிரசாரத்தின் போது ஜெயலலிதா தன்னை ஒரு அபலையாகச் சித்திரித்து வாக்குக் கேட்டார். அவருடைய தேர்தல் நாடகத்தில் தன்னை ஒரு கதாநாயகியாக ஜெயலலிதா உருவகித்தாரோ தெரியாது. ஆனால் கருணாநிதியை ஒரு பயங்கர வில்லனாக அவர் சித்திரித்தது வெற்றியைத் தந்துள்ளது. தமிழகப் பெண்கள் மனமுருகியதால் ஜெயலலிதாவே எதிர்பார்த்திராத வெற்றி அவரைத் தேடி வந்திருக்கிறது.

அ.தி.மு.க தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழகத்தில் மீண்டும் எம்.ஜி.ஆர் ஆட்சியை ஏற்படுத்தப் போவதாகவும் ஜெயலலிதா கூறியிருந்தார். மிகவும் வார்த்தை ஜாலமாக ஜெயலலிதா தெரிவித்திருந்த அறிவிப்பு இது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

எப்படியோ எம்.ஜி.ஆர் ஆட்சி ஏற்பட்டு விட்டது. ஆனால் ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் எப்படி அமைந்தாலும் எம்.ஜி.ஆரின் செல்வாக்கு சில காலத்திற்கு நீடிக்கவே செய்யும்.

ஆயினும் தமிழகத்தில் மீண்டும் உருவாகிய எம்.ஜி.ஆர் ஆட்சி தங்களை வாட்டி எடுத்து விடாமல் இருக்க வேண்டும் என்பதில் தமிழக மக்கள் உறுதியாகவே இருப்பார்கள்.

# கருணாநிதியின் கதி என்ன?

தமிழக சட்டசபையில் 173 உறுப்பினர்களுடன் அட்டகாசமாக ஆட்சி நடத்தியவர் முதலமைச்சர் கருணாநிதி. அவ்வேளையில் ஜெயலலிதாவுக்கு 4 உறுப்பினர்களே தப்பியிருந்தனர். ஜெயலலிதா தனது சொந்தத் தொகுதியில் தோல்வியைத் தழுவியிருந்தார்.

ஆனால் இன்றோ ஜெயலலிதாவின் கைகளில் 132 உறுப்பினர்கள் இருக்கிறார் கள். கருணாநிதிக்கு 28 உறுப்பினர்கள் தான் எஞ்சினார்கள். ஆனால் ஜெயலலிதாவோ ஒரு உறுப்பினர் தகைமையைப் பெறவில்லை.

அ.தி.மு.க கூட்டணியில் 195 உறுப்பினர்கள் இருந்தாலும் தனது கட்சி உறுப்பினர்களுடனேயே கதாகாலட்சேபம் நடத்த தன்னால் முடியும் என்று ஜெயலலிதா கூறி விட்டார். அவரைப் பொறுத்த மட்டில் "ஆற்றைக் கடக்கும் வரைதான் அண்ணனும், தம்பியும் அதன் பிறகு நீ யாரோ நான் யாரோ!"

தமிழக சட்டசபையில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க 132 உறுப்பினர்களுடன் தனித்து நின்றே தர்பார் நடத்தப் போகிறது. அதற்கு அடுத்ததாக இரண்டாவது பெரிய கட்சியான தி.மு.க 28 உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி வரிசையில் அமரப் போகிறது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் தி.மு.கவுக்கே கிடைக்கும்.

இவ்வேளையில் "கருணாநிதியின் எதிர் காலம் என்ன?" என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

தேர்தலில் இந்நகையதோர் வீழ்ச்சி ஏற்படும் என்று கருணாநிதி எதிர்பார்த்திருக்க மாட்டார்.

ஜெயலலிதாவுக்கு சிறைத்தண்டனை கிடைத்து விட்டது. அதன் காரணமாக அவர் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. எனவே அவருடைய சரித்திரமே முடிந்து விட்டது என்று நினைத்திருப்பார் கருணா நிதி. ஆனால் தலைகீழான முறையில் யாவும் நடந்திருக்கின்றன.

"தேர்தலில் நான் போட்டியிடுவது இதுவே இறுதி முறை." என்று அறிவித்தார் கருணாநிதி. தனது மகன் ஸ்டாலினை முதலமைச்சராக்குவதற்காக கட்சியையே சீரழித்து விட்டார். இருப்பினும் தோல்வியைக் கௌரவத்துடன் ஒத்துக் கொண்டார்.

"ஊழல் குற்றச்சாட்டின் மீது தண்டிக்கப் பட்டார் ஜெயலலிதா. எனவே அவரைத் தேர்தலில் நிற்க முடியாதவாறு தேர்தல் ஆணையகம் தடை விதித்தது. ஆனால் தன்னைத் தேர்தலில் போட்டியிடாமல் தடுத்தது நானே என்று பொய்ப் பிரசாரம் செய்தார். இதனால் ஏற்பட்ட அனுதாப அலை காரணமாகவே தேர்தலில் வெற்றியீட்டினார்" என்று கருணாநிதி தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் தேர்தல் "ஸ்டண்ட்" காரணமாகவே தமிழக மக்கள் இவ்வாறு தீர்ப்பளித்தார்கள் என்பது உண்மையானால் அதன் பிரதிபலன்களை அவர்களே தான் அனுபவிக்க வேண்டியிருக்கும். ஜெயலலிதாவின் ராட்சத எழுச்சி ஒரு பயங்கரத் தாக்கத்தை ஏற்படுத்தத்தான் போகிறது என்று அரசியல் விமர்சகர்கள் வர்ணிக்கிறார்கள்.

ஜெயலலிதாவைப் பொறுத்த மட்டில் கருணாநிதி மீது அவருக்குத் தாங்க முடியாத சீற்றம் இருக்கிறது. ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, விசேஷ நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடர்ந்தவர். சிறைத் தண்டனைகளைப் பெற்றுத் தந்தவர். எனவே கருணாநிதிக்குப் பதிலடி தருவேன் என்று ஏற்கனவே எச்சரித்திருக்கிறார் ஜெயலலிதா.

"நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் கருணாநிதியைப் பிடித்து அவருடைய எஞ்சிய ஆயுட் காலம் முழுவதும் சிறையில் அடைத்து வைப்பேன்" என்று பகிரங்க மேடைகளிலேயே அறிவித்திருக்கிறார் ஜெயலலிதா.

அந்த எச்சரிக்கையை நிறைவேற்றும் காலம் இப்போது வந்து விட்டதா?


தலைநகரில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002

| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
316, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி:075 516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)

மலைநாட்டில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-330 | Sun 10.30-12.30 | Mon / Tue 4.45-5.30 |
| Science | Sat 11.30-130 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-5.30 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
87/1A, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொலைபேசி:072 500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)




ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
டிவி அன்டெனாக்களையும்
டிஷ் அன்டெனாக்களையும்
Digital/Analog, Receiver, Positioner, LNB,LNBF, Actuator, Splitter,Feed Horn, Multi-Switch
UKAAYE
190, Bodhiraja Mawatha, (Gaswork Street)
1st Floor, Colombo - 11.
Tel: 075-370019, 451321 Fax: 075-370018




ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
டி.வி. அன்டெனாக்களையும்
டிஷ் அன்டெனாக்களையும்
Digital/Analog, Receiver, Positioner, LNB,LNBF, Actuator, Splitter,Feed Horn, Multi-Switch
UKAAYE
190, Bodhiraja Mawatha, (Gaswork Street)
1st Floor, Colombo - 11.
Tel: 075-370019, 451321 Fax: 075-370018



என்டெனா பொருத்துதல்


Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk



அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

# சுடர் ஒளி

20 மே, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com


## தடுமாறும் கூட்டணி

அரசாங்கத்தின் மீது பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர இருக்கிறது.

இது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உள்ளந்தரங்கத்தை வெளிக்கொணர்ந்து விட்டது.

''போரை நிறுத்துவேன். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன். நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலைநிறுத்துவேன்.

முக்கியமாக இந்த வாக்குறுதியை அளித்துத்தான் 1994 ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க போட்டியிட்டு வெற்றி பெற்றுப் பதவிக்கு வந்தார்.

இப்போது இரண்டாவது முறையாக அவர் ஜனாதிபதியாக இருக்கிறார்.

வாக்குறுதி அளித்து ஏழு வருடங்கள் கடந்து விட்டன. இன்னமும் அவர் போரை நிறுத்த வில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வில்லை. சமாதானத்தை நிலைநிறுத்தவில்லை.

போரினால் மட்டுமல்லாமல், விலை உயர்வுகள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலையின்மை, பொருளாதாரச் சீர்குலைவு, ரூபாவின் மதிப்புக் குறைவு, லஞ்ச ஊழல், மோசடி, வன் செயல்கள் ஆகியவற்றாலும் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

எனவே தான் ஆட்சி மாற்றம் வேண்டி அரசாங்கத்தின் மீது ஐ.தே.க நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர இருக்கிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவை ஐ.தே.க கோருகிறது.

தமிழ்க் கட்சிகளின் நிலை என்ன? ஈ.பி.டி.பியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஆரம்பத்திலிருந்தே அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர் பதவிகள் பெற்று ஆட்சியில் பங்கேற்று இருக்கின்றன.

மற்றத் தமிழ்க் கட்சிகள் பத்து இணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன. இந்தக் கட்சிகளில் மூன்று மட்டுமே நாடாளுமன்றத்தில் இடம் பிடித்துள்ளவை.

ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணி, இன்னொன்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், மற்றது ரெலோ. இவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முறையே ஐந்து, ஒன்று, மூன்று மொத்தம் ஒன்பது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் ரெலோவும் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கச் சம்மதித்து விட்டன.

சந்திரிகா குமாரதுங்காவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்குப் பதிலாக ஐ.தே.க அரசு வருமானால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் அல்ல.

எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். பின்னர் ஏன் ஆதரவு?

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசித் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சந்திரிகாவின் அரசாங்கம் தவறிவிட்டது. அப்படித் தீர்வு காணும் எண்ணம் அரசுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. சும்மா எல்லோரையும் ஏமாற்றி வருகிறது. அதை உலகம் முழுவதற்கும் எடுத்துக் காட்ட இது நல்ல சந்தர்ப்பம் என்று இந்த இரு கட்சிகளும் கருதுகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலை வேறு. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் புலிகளுடன் பேசுவதற்கான காலம் கனிந்து வருகிறது. இவ்வேளையில் அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து காரியத்தைக் கெடுத்து விடக்கூடாது. இப்படித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் கருதுகிறார்கள்.

தமிழரசுக் கட்சியாக உருவாகி, தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பரிணமித்த பழம்பெரும் கட்சிக்கு மாறி மாறி ஆட்சியில் இருந்த அரசுகளை நம்பி எப்பொழுதுமே ஏமாந்த பரிதாப வரலாறு உண்டு.

கூட்டணியின் தலைமை பழைய தலைமுறையின் பிடியில் இருக்கும் வரை நம்பி ஏமாறும் பாரம்பரியம் தொடரவே செய்யும். அந்த அளவுக்கு அரசுத் தலைமையோடு கூட்டணித் தலைமை உறவு. அதனால்தான் தமிழ் மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அரசைப் பற்றிய உண்மை கூட்டணித் தலைமைக்குப் புலப்படுவதில்லை.

புலிகள் மீதான அரசின் அக்கினிச் சுவாலைத் தாக்குதல் நடவடிக்கை படையினரையே பெரும் எண்ணிக்கையில் பலி கொண்டு படுதோல்வியில் முடிந்தது.

அதுபோதாதென்று ஐ.தே.க நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருகிறது.

இவற்றினாலேயே அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதில் பேரார்வம் கொண்டுள்ளது போலக் காட்டி இக்கட்டான நிலையில் இருந்து விடுபட முயல்கிறது.

இதைக் கண்டு தமிழ்க் காங்கிரஸும் ரெலோவும் தடுமாறவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிதான் தடுமாறுகிறது.

# மும்முனைகளில் சிக்கலில் மாட்டித் தவிக்கிறது அரசு

மும்முனைகளில் சிக்கலில் மாட்டித் தவிக்கிறது அரசு

அரசாங்கம் இப்போது அரசியல் அரங்கிலும் போர்க்களத்திலும் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது.

சிக்கலில் மாட்டிக்கொண்டு மீளமுடியாமல் தவிக்கிறது.

அரசியல் அரங்கில் பிரதம எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பார்த்து பதவி விலகுகிறாயா இல்லையா என்று அதட்டிக் கேட்கிறது.

நீயாக விலகாவிட்டால் உன்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து உன்னை விலக்கிவிடுவேன் என்று அரசாங்கத்தை ஐ.தே.க மிரட்டவும் செய்கிறது.

போர்க்களத்தைப் பொறுத்த வரையில் அங்கே தமிழீழ விடுதலைப் புலிகளின் மிரட்டல்.

ஆழம் அறியாமல் காலை வைத்த மாதிரி புலிகளின் பலம் தெரியாமல் அக்கினிச் சுவாலைத் தாக்குதல் நடவடிக்கையைப் படையினர் ஆரம்பித்து வாங்கிக் கட்டிவிட்டார்கள்.

கடந்த மாதம் 24ஆம் திகதி அதிகாலை முதல் 27 ஆம் திகதி வரை நடைபெற்ற அக்கினிச் சுவாலைத் தாக்குதலுக்குப் பின்னர் பெரிதாகப் புதிய தாக்குதல் எதுவும் இதுவரை இல்லை.

எந்த நேரத்திலும் புலிகள் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கலாம் என்று படைத்தரப்பு விழிப்புடன் இருக்கிறது.

அக்கினிச் சுவாலைத் தாக்குதல் நடவடிக்கையின் தோல்விக்கு ஈடுசெய்யும் விதமாக படையினர் தாம் மற்றுமொரு நடவடிக்கையில் இறங்குவார்கள் என்பது புலிகளின் கணிப்பு.

படையினர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அரசாங்கம் தனது கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள படையினரை நடவடிக்கையில் இறங்க வைத்தே தீரும் என்று புலிகள் நம்புகின்றார்கள்.

அப்படித் தாக்குதல் ஏதும் புதிதாக நடக்குமானால் அதிலும் தமது அதீத பலத்தைக் காட்ட புலிகள் தயாராகவே இருக்கிறார்கள்.

புலிகள் மீது புதிதாக தாக்குதல் நடத்துவதற்கு படையினரின் இன்றைய ஆட்பலமும் ஆயுத பலமும் போதுமா? அது ஒருபுறம் இருக்க புதிதாக தாக்குதலைத் தொடங்கி விட்டு சர்வதேச சமூகத்துக்கு என்ன பதில் கூறுவது?

அக்கினிச் சுவாலைத் தாக்குதல் நடவடிக்கைக்குப் பின்னர் இதுதானா அரசின் சமாதான முயற்சி என்று கேட்டு அரசை சர்வதேச சமூகம் உருட்டிப் புரட்டி வருகிறது.

முன்னர் எல்லாம் புலிகள்தான் யுத்த வெறி பிடித்து ஆடுகிறார்கள் என்று அரசு பிரசாரம் செய்ததை நம்பியது சர்வதேச சமூகம். அதனால்தான் புலிகளை யுத்தத்தை நிறுத்தி விட்டு பேச்சுவார்த்தை மேசைக்குப் போகுமாறு சர்வதேச சமூகம் கேட்டுக்கொண்டது.

அதற்கு இணங்கவும் தமிழ் மக்களின் நலனில் உள்ள அக்கறை காரணமாகவுமே புலிகள் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 24 முதல் 2001 ஏப்ரல் 24 வரை 4 மாதங்கள் ஒருதலைப் பட்சமாக யுத்த நிறுத்தம் அனுஷ்டித்து வந்தார்கள். அதன் மூலம் சமாதானத் தீர்வில் தமக்குள்ள பற்றுறுதியையும் அவர்கள் அகில உலகிற்கும் எடுத்துக் காட்டினார்கள்.

ஆனால் அரசாங்கமோ யுத்த நிறுத்தம் செய்யக் கண்டிப்பாக மறுத்துவிட்டது. புலிகள் யுத்தநிறுத்தம் செய்த காலத்தில் அவர்கள் மீது தாக்குதல்களை நடத்தி அவர்களுக்கு இழப்புக்களை ஏற்படுத்தியது. அவர்களின் பொறுமையைச் சோதிக்கவும் செய்தது.

இவற்றை எல்லாம் அவதானித்த சர்வதேச சமூகம் அரசின் அக்கினிச் சுவாலை தாக்குதல் நடவடிக்கையோடு தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டுவிட்டது.

அரசின் சமாதான வேஷம் புரிந்ததும் அரசுக்கு நெருக்குதல் கொடுக்க ஆரம்பித்து விட்டது.

அதாவது யுத்தத்தை நிறுத்திப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குப் போகுமாறு சர்வதேச சமூகம் அரசை வற்புறுத்தி வருகிறது.

சர்வதேச சமூகத்தைப் பகைத்துக் கொண்டு அரசினால் எதையும் செய்ய முடியாது.

அதனாலேயே அரசு சற்றுப் படியிறங்கி இருக்கிறது.

### காண்டீபம்

நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்மைக் கொழும்புக்கு வருமாறு பச்சைக்கொடி காட்டியது. அவரும் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தார்.

இலங்கை அரசைப் படியிறங்க வைப்பதில் அரசியல் நெருக்கடியும் பெரும் பங்கு வகித்தது.

அரசின்மீது ஐ.தே.க கொண்டுவர இருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகத் தமிழ் எம்.பிக்கள் வாக்களிப்பார்களேயானால் அரசாங்கம் நிச்சயமாகப் பதவியிலிருந்து விரட்டப்படும்.

அரசாங்கத்தோடு இணைந்திருக்கும் ஈ.பி.டி.பி எம்.பிக்களும், இ.தொ.கா எம்.பிக்களும் சரி வெளியில் இருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மற்றும் ரெலோ எம்.பிக்களும் சரி எல்லோருமே பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

அவர்கள் எல்லோரையும் திருப்திப் படுத்தும் வகையில் நடந்துகொண்டால் தான் நாடாளுமன்றத்தில் அரசின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோல்வியடையச் செய்யலாம். அரசு தப்பிப் பிழைத்து தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு அதுதான் ஒரே வழி.

எனவேதான் அரசு தேவை கருதி படியிறங்கி பேச்சுவார்த்தை—சமாதானத் தீர்வு விஷயத்தில் பேரார்வம் கொண்டு இருப்பதாகக் காட்டுகிறது. எரிக் சொல்ஹெய்ம்மையும் கொழும்புக்கு வரவழைத்தது.

எரிக் சொல்ஹெய்முடனான பேச்சுவார்த்தையில் இம்முறை அரசு முந்திய சந்தர்ப்பங்களில் போல் இறுக்கமான நிலையில் இருக்கவில்லை.

அரசும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கிறது என்று சொல்ஹெய்மை நம்ப வைக்கும் விதத்திலேயே அரசு நடந்து கொண்டது.

பேச்சுவார்த்தை மேசைக்குப் போனால் அங்கே என்ன நடக்கும் என்பது வேறு விஷயம்.

ஆனால் அரசின் இன்றைய தேவை அதாவது நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கு வேண்டியதெல்லாம் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு கங்கணம் கட்டி நிற்கிறது என்ற நல்லெண்ணம் தான். அதை அரசு குறிப்பிடத்தக்க அளவில் பெற்று விட்டது.

அரசாங்கம் புலிகளோடு பேசக் கூடாது. போரில் அவர்களை அழித்தொழிக்க வேண்டும். அதன் பின்னரே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பது மகாசங்கத்தின் கருத்து.

பேரினவாத சக்திகளும் அதே கருத்துடையவைதாம். அவை இன்னொருபடி மேலே சென்று தமிழ் மக்களுக்கு உரிமையா? சிங்கள மக்களின் உரிமைகளையல்லவா பாதுகாக்க வேண்டியிருக்கின்றது என்கின்றனர்.

அரசாங்கத்துக்குள்ளேயே புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பதிலாக அவர்களைப் போரில் ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கருத்தே மேலோங்கி நிற்கிறது.

இவற்றையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு சாதனை படைப்பார் என்று சிலர் நம்புகிறார்கள். அது பகற்கனவே என்பது பலரின் கருத்து.

# இக்கட்டான நிலையில் முஸ்லிம் காங்கிரஸ்!

மாவனல்லை விவகாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாஸ்டர் பிளான்" Master Plan தான் அதற்குக் காரணம்.

மாவனல்லையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற கலவரங்களில் இரண்டு முஸ்லிம்கள் உயிர் இழந்து விட்டார்கள்.

முஸ்லிம்களின் எத்தனையோ வீடுகளும் கடைகளும் கொள்ளையடிக்கப்பட்டன; பின்னர் அவை எரிக்கப்பட்டன.

மாவனல்லையில் முஸ்லிம்களின் பொருளாதார பலம் நிர்மூலமாக்கப்பட்டு விட்டது.

இது திட்டமிட்ட ஓர் அழிவுச் செயல் இதற்குப் பின்னணியில் இருந்தவர் அமைச்சர் மகிபாலஹேரத் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

அவர் மீது ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருகிறது.

முழு அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு முன்னர் அமைச்சர் மகிபாலஹேரத் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகிறது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸின் அமைச்சர்களும்; பிரதி அமைச்சர்களும் எம்.பிக்களும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்தா அல்லது ஆதரித்தா வாக்களிப்பார்கள்?

அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் என்ற காரணத்தால் அரசாங்கத்தோடு சேர்ந்து, எதிர்த்து வாக்களிக்க அவர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

அப்படி எதிர்த்து வாக்களித்தால் மாவனல்லையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் இலங்கை முழுவதிலும் உள்ள முஸ்லிம் மக்களுக்கும் என்ன பதில் சொல்லுவார்கள்.

மாவனல்லை முஸ்லிம்களுக்காகப் பலமாகக்குரல் கொடுத்தவர்கள் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள், குறிப்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் மாவனல்லை சம்பவங்கள் தொடர்பாக அரசுக்கு எத்தனையோ கோரிக்கைகளை விடுத்தார்.

பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு முழு அளவில் நட்ட ஈடு வழங்க வேண்டும் என்பது ஒரு கோரிக்கை.

ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தி குற்றவாளிகளைக் கண்டு பிடித்து அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்பது இன்னொரு கோரிக்கை.

முன்னைய கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்கிறது. ஆனால் பின்னைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராசா தலைமையிலான ஒரு குழுவே விசாரணை நிகழ்த்தி வருகிறது.

பொலிஸார் மீதும் பாரிய குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அந்த நிலையில் ஒரு பொலிஸ் அதிகாரி தலைமையில் விசாரணை நடந்தால் நியாயம் கிடைக்குமா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

மாவனல்லை விவகாரம் அரசைப் பொறுத்த வரையில் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத ஒன்று.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு இல்லையேல் அரசு ஒரு கணமேனும் பதவியில் இருக்க முடியாது. அதனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையை தாஜா பண்ண வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது.

மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கேட்ட ஒலுவில் துறைமுகம், தென்கிழக்குக் கரையோர மாவட்டம் முதலான பலவற்றையும் வழங்க அரசு உறுதி அளித்திருக்கிறது.

இவற்றோடு இன்னும் கேட்டுப் பெற வேண்டிய விஷயங்கள் பல இருப்பதால் மாவனல்லை விஷயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அடக்கி வாசித்தால் அதில் ஆச்சரியப் படுவதற்கு இல்லை.

மாவனல்லைச் சம்பவம் பொறாமை கொண்ட தீய சக்திகளின் நாசகாரச் செயல் என்றும் அதில் வேண்டுமென்றே அமைச்சர் மகிபாலஹேரத்தின் பெயர் இழுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லலாம் அல்லவா? விசாரணைகள் அதற்கு ஆதாரமாக அமையுமானால் பலே ஜோர்! நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பது நியாயமானதாகத் தெரியும் அல்லவா?

முஸ்லிம் காங்கிரஸ் என்ன சொல்லப் போகிறது, எதைச் செய்யப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# தொழிலாளர்களைச் சுரண்டும் தோட்ட கூட்டுறவுக் கடைகள்

## தடுக்கத் திட்டம் வேண்டும் என பிரதமரிடம் வேண்டுகோள்

மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

"தோட்டத்தொழிலாளர்களுக்குத்தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை தோட்ட நிர்வாகங்களின் மூலம் நேரடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவுக்கடைகள் என்ற பெயரில் இடம் பெற்றுவரும் சுரண்டல்களையும் மோசடிகளையும் தடுக்க கண்காணிப்புக் குழுக்களையும் திடீர் பரிசோதனைகளையும் மேற் கொள்ள வேண்டும்."

இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நுவரெலியா மாவட்ட எம்.பியுமான பெ.சந்திரசேகரன் பெருந்தோட்டத்துறைக்குப் பொறுப்பான பிரதமர் ரட்னசிறி விக்கிரம நாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவிவரும் யுத்த சூழ்நிலையைக் காரணம் காட்டி அனைத்துப் பொருட்களின் விலைகளும் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. மா, சீனி, பாலுணவுகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வால் தோட்டத்தொழிலாளர்கள் நேரடியாகவே பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர்.

தோட்டங்களில் இருந்து நகர்ப்புறங்களுக்குப் பொருட்களை வாங்க வரும் தொழிலாளர்கள் தமது ஒரு நாள் ஊதியத்தை இழந்தே வரவேண்டி உள்ளது. கடைக்காரர்களிடம் ஒரு மாத தவணைக் கடன் முறையில் பொருட்களை வாங்கும் போது பொருட்களின் விலை வட்டியுடன் குட்டியும் போட்டு விடுகிறது. கடன் அடிப்படையில் வாங்குவதால் பேரம் பேசவும் முடியவில்லை. ஏனைய கடைகளில் தரமான பொருட்களைத் தெரிவு செய்து வாங்கவும் முடிவதில்லை. இதனால் பாதிப்படைவது தொழிலாளர்களே.

முன்பு அவசர நிலைமை ஏற்படும் போது அரிசி, சீனி, மா, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை தோட்ட நிர்வாகங்களே நியாய விலையில் விநியோகித்தன. இதற்கான பணம் தொழிலாளர்களின் சம்பளத்தில் கழிக்கப்படும். இது தொழிலாளர்களுக்கு வசதியாக இருந்ததோடு தரமான பொருட்களும் கிடைத்தன.

ஆனால் இப்போது நிலைமை மாறி விட்டது. தோட்டத் தொழிலாளர்களின் சொந்தப் பணத்தில் (பங்குகள்) கூட்டுறவுக் கடைகள் இயங்குகின்றன. கூட்டுறவுக் கடைகள் தொழிலாளர்களின் நன்மைகளுக்காகவே அமைக்கப்பட்டவை. இப்போது இக்கடைகளினால் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கின்றதா என்பதே கேள்வி.

அங்கே சுரண்டல்களும், மோசடிகளும் இடம் பெறுகின்றன. தொழிலாளர்களின் சொந்தப் பணத்தில் இயங்கும் இக்கடைகளின் ஆதாயம் வருடாவருடம் பங்குதாரர்களான தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். ஆனால் எந்த ஒரு தோட்டத்திலும் பங்குக்கான ஆதாயம் வழங்கப்பட்டதாகவே இல்லை. பெரும்பாலான கடைகள் நட்டத்தில் இயங்குவதாகவே கணக்குக் காட்டப்படுகிறது.

இக்கடைகளில் விநியோகிக்கப்படும் பொருட்களின் விலையையும் நகர்ப்புறங்களில் அப்பொருட்களின் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நகர்ப்புறங்களையும் விட கூடுதல் விலைக்கே விற்கப்படுகின்றன. பொருட் களின் தரமும் குறைந்ததாகவே இருக்கின்றது. குறைந்த விலைக்கு வாங்கி கூடுதலான விலைக்கு விற்கப்படுகின்றன. இப்படி இருக்க நட்டம் ஏற்படுவது எப்படி?

இவ்விடயம் தொடர்பாக தோட்டக் கூட்டுறவுக் கடைகளுக்கு பொருட்களை விநியோகிக்கும் சில மொத்த விற்பனை நிலைய முகவர்களுடன் தொடர்பு கொண்டபோது அதிர்ச்சியான தகவல்களை அறிய முடிந்தது.

தோட்டக் கூட்டுறவுக்கடைகளுக்குப் பொருட்களை விநியோகிக்க ஆர்டர் கொடுக்கும் போதே தோட்ட பெரிய கிளார்க்கிற்கு 'சம்திங்' கொடுக்க வேண்டும். 25வீதம் கமிஷன் தரவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே ஆர்டர் கொடுக்கின்றார்கள்.

பொருட்களை கொள்முதல் செய்யவரும் கூட்டுறவுக் கடை முகாமையாளர்களுக்கு பொருட்களின் தரம் பற்றி அக்கறை இல்லை. 'எனக்கு 25வீதம் கமிஷன் வேண்டும் இல்லாவிட்டால் உங்கள் கடையில் சாமான் சரி இல்லை என்று கூறி ஆர்டரை ரத்து செய்துவிடுவேன்' என அச்சுறுத்துகின்றனர். மண்ணைக் கொடுத்தாலும் பரவாயில்லை. இவர்களுக்கு கமிஷன்தான் வேண்டும்.

இது மட்டுமல்ல, சில வேளைகளில் பொருட்களின் விவரத்தை மட்டும் சிட்டையில் எழுதித்தரும்படி கேட்பார்கள். எத்தனை (மூடை) கிலோ என்றும் எழுதக் கூடாது, எவ்வளவு விலை என்றும் எழுதக் கூடாது அவர்களுக்கு வேண்டியபடி எழுதிக் கொள்வார்கள். நாங்கள் அப்படி கடை விலாசமிட்ட சிட்டைகளை கொடுக்காவிட்டால் அடுத்த மாத ஆர்டர் எங்களுக்குக் கிடைக்காது.

இந்தக் கூட்டுறவுக் கடை முகாமையாளர்களும், பெரிய கிளார்க்மாரும் இதோடு நின்று விடுவதில்லை. தங்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்களையும் வாங்கிக் கொள்வார்கள்.



பெ.சந்திரசேகரன்

எங்கள் கடையில் இல்லா விட்டால் வேறு கடையிலாவது வாங்கிக் கொடுக்க வேண்டும். இந்த பொருட்களுக்கான விலையும் கடைக்கு கொள்முதல் செய்த பொருட்களிலேயே திணிக்கப்படுகின்றன.

நாங்கள் செய்வது வியாபாரம். எங்களுக்குத்தேவை ஆதாயம். இதுதான் உண்மை என்கிறார்கள் மொத்தவியாபாரிகள்.

தோட்ட நிர்வாகம் ஒரு புறம் தொழிலாளர்களை அடக்கி ஆள்கின்றது. மறுபக்கம் கூட்டுறவுக்கடைகள் சுரண்டி வாழ்கின்றன. இடையில் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களே சிக்கித்தவிக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் பிரதமரிடம் விடுத்துள்ள கோரிக்கை நியாயமானது. இதனை நடைமுறைப் படுத்தினால் இப்பாரிய சுரண்டலில் இருந்து தொழிலாளர்களைக் காப்பாற்ற முடியும். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட இதர தொழிற்சங்கத் தலைவர்களும் இதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுவே பெரிய சேவையாக அமையும்.

# தொழிலாளர்கள் இடிந்த வீடுகளில் மற்றோருக்கு தேயிலைக் காணி

மண்சரிவினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து அகதிகளாக இருக்கிறார்கள் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களுக்கு காணிவழங்க மறுக்கின்றன தோட்ட நிர்வாகங்கள். ஆனால் கிராம அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் பெரும்பான்மை இனத்தவர்களுக்குப் பெறுமதிமிக்க தேயிலைக் காணிகள் வழங்கப்படவிருக்கின்றன. இதனை வன்மையாக எதிர்க்கின்றோம். அமைதியாக வாழும் தமிழ்த் தொழிலாளர்கள் மத்தியில் கிராமத்தவர்களைக் குடியமர்த்துவது பிரதேச அமைதிக்கு கேடு விளைவிக்கும் ஒரு திட்டமிட்ட செயலாகும்.

என மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.சிவலிங்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி வட்டகொடை ஒக்ஸ்போர்ட் தோட்டத்தில் கிராமத்தவர்களுக்கு காணி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்திற்கு தோட்டக்கம்பெனியும் ஐந்து ஏக்கர் காணியை வழங்கும்படி தோட்ட அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளது. இதன் அடிப்படையில் (எல்.ஆர்.சி) காணி சீர்திருத்த ஆணைக்குழுவினரும் பூர்வாங்க ஏற்பாடுகளை செய்தனர். இதனை ஆட்சேபித்து தோட்டத் தொழிலாளர்கள் அமைதியான ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டதோடு வேலைகளையும் பகிஷ்கரித்துள்ளனர்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.சிவலிங்கமும் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் பாலகிருஷ்ணனும் நேரடியாக தோட்டத்திற்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

1993 ஆம் ஆண்டு இத்தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் 150 குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டன. வீடுகளும், பாடசாலைக் கட்டடங்களும், கோயில்களும் வெடித்துப் பிளந்த நிலையில் இருக்கின்றன.

இத்தோட்டத்திலேயே காலம்காலமாக வாழ்ந்து வருபவர்களுக்கும், தோட்டத்திற்காகவே உழைப்பவர் களுக்கும் மாற்றுக் காணிகளை வழங்க தோட்ட நிர்வாகம் மறுத்துவிட்டது.

தொழிற் சங்கங்களின் தலையீட்டால் சிறு துண்டு காணிகள் கிடைத்தன. அவையும் கூட மனித குடியிருப்புக்கு உதவாத பாறைநிலங்கள். குடிநீர் வசதியோ, போக்குவரத்து வசதிகளோ இல்லாத இடம்.

இன்றும்கூட 16 குடும்பங்கள் வெடித்துப் பிளந்த வீடுகளிலேயே இருக்கின்றன. எப்பொழுது இவை இடிந்து விழுந்து இவர்களைப் பலி கொண்டு விடுமோ என்ற ஆபத்தான நிலை.

மேலும் 35 குடும்பத்தவர்கள் தற்காலிகமாக அமைக்கப் பட்ட குடிசைகளிலேயே வாழ்கின்றனர். இவற்றுள் சிறு குடில்களில் இரட்டைக் குடும்பங்களும் இருக்கின்றன.

இப்படியான நிலையில் வெளியாட்களுக்கு ஐந்து ஏக்கர் காணியை பிரித்துக் கொடுக்க முயற்சிப்பதால் இத்தோட்டத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

மலையகத்தில் குறிப்பாக தலவாக்கலை பிரதேசத்தில் வருடத்தின் ஒவ்வொரு மே மாதம் 11 ஆம் திகதி சிவனுலெட்சுமனின் நினைவு தினத்தைக் கொண்டாடுகின்றனர். டெவன் தோட்டத்தை எல்.ஆர்.சி சுவீகரிப்பதை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் தன் உயிரைத் தியாகம் செய்து தோட்டக் காணியைக் காப்பாற்றியவர் சிவனு லெட்சுமன்

மேற்படி நிலைமை இப்போது வட்டகொடை ஒக்ஸ்போர்ட் தோட்டத்திலும் ஏற்படக்கூடிய சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனை அரசாங்கமும் தோட்டக் கம்பெனிகளும் மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும் என எம். சிவலிங்கம் கேட்டுள்ளார்.

ஒன்றுபடுவோம், ஐக்கியப்படுவோம் எனக் கூறும் தொழிற்சங்கத் தலைவர்கள் இவ்விடயத்தில் ஒன்றுபட்டு செயற்பட்டால் பல அநியாயங்களைத் தடுக்க முடியும். அனர்த்தங்களையும் தவிர்க்க முடியும்.

# தொழிலாளர்களின் அவல நிலைகள் வெளிப்படுத்தப்படாத உலக மாநாடுகள்

சர்வதேச கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும் கலந்து கொள்ளும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இலங்கை வாழ் தொழிலாளர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்துவதில்லை. இதனால் மலையகத் தொழிலாளர்களின் அவல நிலையை சர்வதேச சமூகம் தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது.

மேற்கண்டவாறு இலங்கையில் உள்ள சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

இலங்கையில் குறிப்பாக மலையகத் தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்கும் பிரதான தொழிற்சங்கங்கள் யாவும் சர்வதேச தொழிற்சங்க அமைப்புகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளன.

ஜெனிவாவில் தலைமை செயலகத்தை கொண்ட இந்த அமைப்புகள் வருடாந்தம் சர்வதேச மட்டத்தில் மாநாடுகளை நடத்தி பலநாட்டுப் பிரதிநிதிகளின் அறிக்கைகளையும், விவரங்களையும் திரட்டி இறுதி அறிக்கைகளைத் தயாரிக்கின்றன. இந்த அறிக்கைகளை மாநாட்டின் சிபார்சுகளுடன் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

இந்த சர்வதேச கருத்தரங்குகளில் அரசாங்கம், தொழில் வழங்குவோர், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என மூன்று தரப்பினரும் பங்குபற்றுகின்றனர். அங்கு மூன்று தரப்பினரும் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை வைத்தே இறுதி அறிக்கைகள் தயாராகின்றன. இது COUNTRY REPORT என அழைக்கப்படுகிறது.

தொழில் வழங்குவோர் (நிர்வாக தரப்பில்) தமது தோட்ட அமைப்புகள், தொழிலாளர்களுக்காக வழங்கும் வசதிகள், நலன்புரித் திட்டங்களுக்காக செலவிடும் தொகைகள் பற்றிய விவரங்களை அறிக்கையில் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இந்தத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என்ன செய்கின்றனர்?

மாநாடு நடத்துகின்றோம், கருத்தரங்கு வைக்கின்றோம் என அறிக்கை சமர்ப்பிக்கின்றனர்.

எந்த ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதியும் இங்கு தொழிலாளர்கள் பெறும் சம்பளம், அவர்களுடைய குடியிருப்புக்களின் நிலை, அவர்களின் வாழ்க்கைத்தரம், வறுமை நிலை, அரசியல் புறக்கணிப்பு ஆகியவை பற்றியோ தொழிலாளர்களிடம் இருந்து வருமானமாகக் கிடைக்கும் சந்தா பற்றியோ தமது அறிக்கைகளில் குறிப்பிடுவதில்லை.


இதன் மூலம் உலக நாடுகளில் இருந்து வரும், அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உண்மை நிலை மூடி மறைக்கப்படுகிறது.

இதற்கு உடந்தையாகவும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளே இருக்கிறார்கள்.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் "மலையகத்தில் வாழும் இந்தியத் தமிழர்கள் இவ்வளவு துன்பப்படுவது எனக்குத் தெரியாது" என்று கூறி உள்ளார்.

மலையகத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தொழிற்சங்கப் பிரச்சினைகள் என்று தொழிற்சங்க அலுவலகங்களுக்குள் மூடி வைக்காமல் முழு உலகுமே அறியச் செய்ய வேண்டும்.


மலையக அரசியல் வாதிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் சுய நன்மைகளுக்காக உண்மை நிலையை மூடி மறைக்காமல் அவற்றை வெளிப்படுத்த வேண்டும். சர்வதேச சமூகம் இலங்கைத் தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய வகையில் பிரச்சினைகளை வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் மலையக அரசியல் வாதிகளையும் தலைவர்களையும் நம்பி இருக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கையில் விடிவு ஏற்படும்.



## போராட்டக் களத்தில் பெண்ணுக்கு சம உரிமை


தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெறும் வேளைகளில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாகப் போற்றப்படுவது வழக்கமாக இருக்கிறது. ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், மறியல் போராட்டங்கள் ஆகியன நடைபெறும் வேளைகளில் பெண்களுக்கு முக்கிய இடம் வழங்கப்படுகிறது. இந்தியாவில் புதுடில்லி வீதி ஒன்றில் நடைபெற்ற ஒரு தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தின்போது கண்களைக் கவர்ந்த காட்சி இது. தனது வீட்டுத் தலைவி மறியல் போராட்டத்தில் களம் இறங்கியிருக்கும் வேளையில் தங்கள் குழந்தையை மடியில் வைத்துத் தாலாட்டுகிறார் ஒரு வீட்டுத் தலைவர். பெண்ணுக்கு சம உரிமை தந்த வீரத் தலைவர் அல்லவா இவர்!

## பனிச்சறுக்கல் நடனம் ஆடியதில் சாதனை



பனிச் சறுக்கல் விளையாட்டு மேல்நாட்டவர்களுக்கு மிகவும் பிடித்தமான கலை. மலை முகட்டில் உறைந்து போயிருக்கும் பனிப்பாதைகளில் சறுக்கிச் செல்வது வீர விளையாட்டு ஆகும். பனி உறைந்த மேடையில் ஜோடியாகப் பிணைந்து ஆடுவது சிறந்த கலை. பிரான்ஸ் நாட்டின் நடனக்காரர்களான மரினா அனிவினாவும் பெய் செராட்டும் ஜோடியாகச் சேர்ந்து ஜப்பானில் நடைபெற்ற போட்டி ஒன்றில் பனிச்சறுக்கல் நடனமாடி சாதனை புரிந்திருக்கிறார்கள். அவர்களின் நடனத்தில் ஒரு நயமான சரசக்காட்சி இது.

## கடை வீதியில் இறங்கி காலாற நடந்தால்




எந்நேரமும் வீட்டுக்குள் முடங்கிப் போய் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் மேல்நாடுகளில் குளிர்ப் பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு ஏற்படுவதுண்டு. இதன் காரணமாக அங்குள்ளவர்கள் பகற் பொழுதில் கடை வீதியில் இறங்கி காலாற நடக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். அட்லாந்திக் நகரில் புரூன்ஸ்விக்கடை வீதியில் ஒரு வீட்டுத் தலைவர் தனது குழந்தையைத் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளியபடியே காலாற நடக்கும் காட்சி இது. செல்ல நாயும் இவர்களுடன் உலா வந்து விட்டது. கண் கொள்ளாக் காட்சிதானே.

## மலைப் பிரதேசத்தில் கேபிள்கார் சவாரி



மலைப் பிரதேசங்களில் வீதிப் போக்குவரத்து சுமுகமாக இருப்பது இல்லை. அத்துடன் வீதிப் பயணங்கள் ஆபத்தாகவும் இருக்கும். மலைப் பிரதேசங்களில் கம்பியில் பிணைக்கப்பட்ட கேபிள் கார்களில் பிரயாணம் செய்வது ரம்மியமானது. சிங்கப்பூரில் பாபர் மலைப் பிராந்தியத்தில் கேபிள் கார் சவாரியே பிரபலம் பெற்றிருக்கிறது. எத்தனை கேபிள் கார்கள் தான் இங்கு கடுகி விரைகின்றன.

## ஒளிந்திருக்கும் முகம் எது?



மே 06, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் அப்பாஸினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:—

1. பாயிஸ் மஜீத், கம்பிரிகஸ்வேவ.
2. சி. கமலேஸ்வரி, பண்டாரவளை.
3. ஐ.நேசராணி, வவுனியா.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (13.05.2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரியவர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? குழந்தை நடிகையாக இருந்து கதாநாயகியாகி விண் மீன்போல ஜொலிப்பவர்.


இந்த முகத்திற்குரியவரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி,
கொழும்பு — 06.



## முடிவில்லாக் காதலுக்கு நடுவீதியில் நினைவுக்கல்

ஆண்டுக்கு ஒரு தடவை காதலர் தினம் வரும் போது தான் காதலின் பெருமையை அனைவரும் போற்றுவது வழக்கம். ஆயினும் அமெரிக்காவின் புரோட்வே நகரில் நட்ட நடு வீதியிலேயே முடிவில்லாத நித்திய காதலுக்கு நினைவுக்கல் நிறுவியிருக்கிறார்கள். இரவும் பகலும் ஒரு வினாடி கூட வாகனப் போக்குவரத்து இன்றி ஓய்ந்திருக்காத பகுதி இது. வீதிக்கு நடுவிலுள்ள நடைபாதையில் "நிச்சயதார்த்தம்" என்னும் பெயரில் நிறுவப்பட்டுள்ள இந்த நினைவுச் சின்னம் அனைவரையும் கவர்ந்து இழுத்து விடுகிறது.



# ரயில் கொள்ளைக் காரன் பிறந்த மண்ணில் சாக வந்தான்



பொலிஸ் காவலில் ரொனி பிக்ஸ்

கடந்த நூற்றாண்டின் பயங்கரக் கொள்ளைக்காரன் அவன். 1963ஆம் ஆண்டு லண்டன் தபால் ரயிலை வழிமறித்து 25 லட்சம் பவுண் ஸ்ரேலிங் பணத்தைக் கொள்ளையிட்டவன். வெளிநாட்டுக்குத் தப்பியோடி ராஜ வாழ்க்கை வாழ்ந்தவன். இன்று தனது 71ஆவது வயதில் பிறந்த மண்ணில் சாக வேண்டும் என்ற ஆசையில் லண்டனுக்கு வந்தான். மாட்டிக் கொண்டான்.

''கிரேட் ட்ரெய்ன் ரொபெறி'' என்று பிரிட்டிஷ் சரித்திரத்தில் பெயர் பெற்ற ரயில் கொள்ளை உலக மக்களை அதிர வைத்தது ஒரு காலத்தில். அந்தக் கொள்ளைச் சம்பவம் பற்றி பிற்காலத்தில் ஓர் ஆங்கிலப் படம் அதே பெயரில் வந்து அனைவரையும் கதிகலங்க வைத்தது. அந்தக் கொள்ளையைத் தனது கூட்டாளிகளுடன் நடத்தி அனைவரையும் கலக்கியெடுத்த ரொனிபிக்ஸ் இன்று பிரிட்டிஷ் சிறையில் இருக்கிறான்.

ரொனி பிக்ஸ் மிகவும் பாதுகாப்பு நிறைந்த கிளாஸ்கோ — லண்டன் தபால் ரயிலை தனது கொள்ளைக் கோஷ்டியினருடன் வழிமறித்துக் கொள்ளையடித்தான். கட்டுக்கட்டாக 25 லட்சம் ஸ்ரேலிங் பவுண் பண நோட்டுகளைச் சுருட்டிக் கொண்டான். பிரிட்டிஷ் அரசாங்கமே அதிர்ந்தது.

கொள்ளையர்கள் தாம் கொள்ளையடித்த பணத்தைப் பங்கு போட்டுக் கொண்டனர். கொள்ளைத் தலைவன் ரொனி பிக்ஸுக்கு 1 லட்சத்து 47 ஆயிரம் ஸ்ரேலிங் பணம் கிடைத்தது. ஆயினும் ரொனிபிக்ஸ் பொலிஸாரிடம் சிக்கினான்.

வழக்கு விசாரணை நடந்து பிக்ஸ் ஆயுள் சிறைத் தண்டனை பெற்றான். தபால் ரயிலை நிறுத்தச் சதி செய்த குற்றத்திற்கு 25 வருட காலச்சிறை. 25 லட்சம் ஸ்ரேலிங் பணம் கொள்ளையடித்ததற்கு 30 வருட காலச் சிறை என்று 55 வருட காலம் அவன் சிறையில் வாட வேண்டியிருந்தது.

ஆயினும் மிகவும் பாதுகாப்பு நிறைந்த லண்டன் சிறைச்சாலையிலிருந்து 1965ஆம் ஆண்டு தப்பியோடினான் பிக்ஸ். அவனுடைய ரயில் கொள்ளையைவிட மிகவும் கொடூரம் நிறைந்தது அவனுடைய சிறை உடைப்பு. பிரிட்டிஷ் காவல் அதிகாரிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தான் ரொனி பிக்ஸ்.

ஆயினும் கொள்ளையடித்து கோடீஸ்வரனான பிக்ஸ் இன்று ஒரு பட்டினிப் பட்டாளம். அடுத்த வேளை உணவுக்கு வழி தெரியாதவன்.

லண்டன் சிறையிலிருந்து தப்பியோடிய பிக்ஸ் திருடிப் புதைத்து வைத்திருந்த பணத்துடன் ஆஸ்திரேலியாவுக்கு எப்படியோ போய்ச் சேர்ந்தான். அவனிடம் இருந்த பெருமளவு பணம் அதற்குப் பேருதவி புரிந்திருக்கிறது. ஆஸ்திரேலியாவிலிருந்து பிரேஸில் நாட்டுக்கு ஓடினான் பிக்ஸ். அங்கு தினம் ஒரு பெண் என்று ராஜ வாழ்க்கை நடத்தினான்.

பிரேஸில் நாட்டிலிருந்து பிக்ஸ்ஸை பிரிட்டனுக்கு நாடு கடத்தும்படி பிரிட்டிஷ் அதிகாரிகள் கேட்டனர். ஆனால் பிரேஸில் நாட்டு சட்டத்தை அடியொற்றி பிக்ஸ் வாழ்ந்ததால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு வெளிநாட்டுப் பிரஜை பிரேஸில் நாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து ஒரு குழந்தைக்கு தந்தையாகி விட்டால் அவனை நாடு கடத்த முடியாது. பிக்ஸ் அதற்கு ஏற்ற விதத்தில் ஒரு பிரேஸில் குழந்தைக்குத் தந்தையாகி விட்டான். எஞ்சிய 35 வருட காலத்தையும் அங்கேயே கழித்தான்.

35 வருட கால வெளிநாட்டு வாசம் ரொனி பிக்ஸைப் பெருமளவில் மாற்றி விட்டது. கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு குபேர வாழ்க்கை நடத்தியதியவன் இன்று ஒரு குசேலன். 77 வயது முதுமையினால் அவனால் நடக்க முடியவில்லை. பேச முடியவில்லை.

ரொனி பிக்ஸ் பிரேஸில் நாட்டில் வாழ்ந்த போது மதுவிலும் மாதுவிலுமே தனது நேரத்தைச் செலவிட்டான். அவனிடமிருந்த திருட்டுப் பணம் மிகவிரைவில் கரைந்து போய்விட்டது.

கையில் காசு இல்லாத வேளைகளில் உல்லாசப் பிரயாணிகள் கூடும் இடங்களுக்குச் செல்வான். ''நான் தான் ரயில் கொள்ளையன் பிக்ஸ்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வான்.

உல்லாசப் பிரயாணிகள் அவனிடம் ''நீங்கள் எப்படி ரயில் கொள்ளை நடத்தினீர்கள்?'' என்று கேட்பார்கள். அவனும் அதனை விவரிப்பான். அதற்கு பணம் வசூல் செய்வான்.

இரு தடவைகள் பிக்ஸ் இரத்தக் கொதிப்புக்குள்ளானான். பக்கவாதம் ஏற்பட்டது. படுக்கையில் காலம் தள்ள வேண்டியிருந்தது. எனவே தான் பிறந்த மண்ணுக்குத் தாவி விட வேண்டும் என்று ஆவல் அவனுக்கு ஏற்பட்டது.

தனது இறுதி நாட்கள் வந்துவிட்டன என்பதை உணர்ந்து கொண்டான். இருப்பினும் சாதாரண மனித உணர்வு அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

''நான் என்னத்தைச் செய்து என்னத்தைக் கண்டேன்! நான் பிறந்த மண்ணிலேயே சாக வேண்டும். அதுவே எனது இறுதி ஆசை'' என்று கூறத்தொடங்கினான் பிக்ஸ்.

'பிரிட்டனுக்குத் திரும்பிவிடுவோம். பொலிஸார் பிடித்தால் நான் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக்குக் கேட்போம்' என்று எண்ணினான். அதற்கு உதவக் கூடியவர்களை அணுகினான்.

பிரிட்டனிலுள்ள புகழ்பெற்ற பத்திரிகை 'சன்' பிக்ஸ் விடயத்தில் தலையிட்டது. பிக்ஸை விசேட விமானம் ஒன்றில் லண்டனுக்கு அனுப்பியது. பிக்ஸ் தனது வாழ்க்கை வரலாற்றை 'சன்' பத்திரிகையில் எழுதுவான். அதற்குக் கோடி கோடியாகப் பணம் கிடைக்கும்.

ஓட்டாண்டியாகிவிட்ட பிக்ஸ் தனது இறுதி நாட்களை மிகவும் கலகலப்பாக கழிக்கலாம் என்று கற்பனை செய்தான். ஆனால் எல்லாம் ஏமாற்றமாகிவிட்டது.

லண்டன் விமான நிலையத்தில் பிக்ஸ் காலடி வைத்ததுமே அவனைப் பொலிஸார் கைது செய்தனர். நீதிமன்றத்தில் அவனைப் பொலிஸார் பாரப்படுத்தினர்.

பிக்ஸ் தனது 55 வருட கால சிறை வாசத்தை ஒரே நேரத்தில் 30 வருடங்களாக சிறையில் கழித்திருக்க வேண்டும். ஆனால் 1 வருடம் மூன்று மாதங்களுக்குள் சிறையை உடைத்துத் தப்பிச் சென்றுவிட்டான். எஞ்சிய நாட்களைச் சிறையில் கழிக்க வேண்டும். ஆயினும் அனுதாபம் கருதி 14 வருடகாலம் சிறையில் கழித்தே ஆக வேண்டும் என்று நீதிமன்றம் கூறிவிட்டது.

விடுதலையை எதிர்பார்த்து வந்த பிக்ஸ் சிறைப் பறவையாகிவிட்டான். பிறந்த மண்ணில் சாக வேண்டும் என்று வந்தவன் சிறையில் தற்கொலை செய்து விடுவானோ! —இந்தப் பயம் ஏற்பட்டதால் சிறை அதிகாரிகள் கண்ணுங்கருத்துமாக அவனைக் காவல்காத்து வருகின்றனர்.

— சிகுநா

# இணையத்தளத் தொடர்புக் கமெரா



இணையம் என்னும் போர்வையில் உலகம் கைக்குள் வந்திருக்கிறது.

அறிவியல் வளர்ச்சியின் ஏற்றம் மனிதனுக்குப் பல பயன்பாடுகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. இதற்கு படப்பிடிப்புக்கலையும் விதிவிலக்கு அல்ல.

கைக்கு அடக்கமான கமெராக்கள், தூக்கிச் செல்வதற்கு இலகுவான கமெராக்கள் வந்த காலம் போய்விட்டது.

இப்போது பட்டனில் பொருத்திக் கொள்ளக்கூடிய— மறைத்து வைத்து படம் எடுக்கக் கூடிய மிகச்சிறிய இரகசியக் கமெராக்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பெண்களின் கூந்தலில் செருகி வைத்துக் கொள்ளுவதற்கு ஏற்ற வகையிலும் இத்தகைய கமெராக்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தக் கமெராக்களினால் ஒரு பக்கம் நின்றவாறுதான் படம் எடுக்க வேண்டும் என்பது அல்ல. நாம் சாதாரணமாகவே நடமாடுவது போன்று பாவனை காட்டிப் படத்தை எடுத்துக் கொள்ளலாம்.

உலகம் முழுவதும் தீவிரவாதம் பரவி வருவதால் இந்த வகைக் கமெராக்களின் பயன்பாடு காவல் துறையினருக்கும் புலனாய்வுப் பிரிவினருக்கும் பெரும் வரப்பிரசாதமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

இத்தகைய இரகசிய கமெரா ஒன்றை உடையில் மறைத்துக்கொண்டு போய் ஒளிப்பதிவும் செய்யலாம். இதற்கு கம்பி இல்லாமல் ஒளி பரப்பும் சிறிய டிரான்ஸ்மீட்டரை அதனுடன் இணைத்து வைத்திருக்க வேண்டும். ஒளிபரப்பாகும் இடத்தில் வி.சி. ஆர் இருந்தால் காட்சியைப் பதிவு செய்து கொள்ளவும் முடியும். வங்கிகளிலும் இந்த வகைக் கமெராக்களை பயன்படுத்திக் கொண்டால் பாதுகாப்பைப் பலப்படுத்த முடியும் என்று வங்கி உயர்அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விமான விபத்தை ஆராய அந்த விமானத்தின் கறுப்புப்பெட்டி பயன்படுவது போன்று வங்கிகளில் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்களின் போது குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இந்த வகைக் கமெராக்களைப் பயன்படுத்த முடியும்.




இந்தக் கமெராக்களுள் கையடக்கமான அளவில் இணையத்தளத்தோடு தொடர்புடைய (Internet view Camera) கமெராக்களும் அடங்குகின்றன.

இவற்றைப் பயன்படுத்தி இணையத்தளச் செய்திகளைப் பெற்று வணிகத்துக்கும் பொழுது போக்குக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இணையக்கமெரா மூலம் படம்பிடித்து புகைப்படங்களையும் ஈமெயில் முறையில் தேவையான தளத்துக்கு அனுப்பிவைக்க முடியும்.

—ஷர்மிலா.



## கண்ணைக் கவர்ந்த பீரங்கி

நாட்டில் யுத்தம் மிகவும் உச்சக் கட்டத்தை அடைந்த வேளையில் யுத்த முனைகளில் மிகவும் நவீனமான ஆயுதங்களும், தளவாடங்களும் பயன்படுத்தப்பட்டன.

படத்தில் காணப்படும் இந்த இராணுவ தாங்கியும் ஒரு நவீன போர்த்தளவாடமா?

தாண்டிக்குளம் இராணுவ முகாம் அருகில் இந்த இராணுவ தாங்கியைக் கண்ட பொது மக்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

ஆனால் இது ஒரு நிஜமான தாங்கி அல்ல. வெசாக் பண்டிகையின் போது இராணுவத்தினர் பீரங்கி உருவில் வெசாக்கூடு ஒன்றை உருவாக்கியிருந்தனர்.







# அரசைக் கவிழ்க்க சிறுபான்மை கட்சிகளைத் தேடும் ஐ.தே.க!



ரணில்

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் அவசரகால நிலை நீடிப்புப் பிரேரணை மீது நடைபெற்ற வாக்கெடுப்பில் அரசுக்குக் கிடைத்த வாக்குகள் 110. எதிர்க்கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் 101. இருதரப்பிலும் சில உறுப்பினர்கள் அவ்வேளை சபையில் இருக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தனிப்பலம் 107 ஆகும். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கு 4 உறுப்பினர்கள் உள்ளனர். ஈ.பி.டி.பி. ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதனால் அரசின் மொத்த பலம் 116.

எதிர்க்கட்சி வரிசையில் 109 உறுப்பினர்கள் உள்ளனர்.

ஐ.தே.க – 89, ஜே.வி.பி – 10, ரெலோ – 3, தமிழர் விடுதலைக்கூட்டணி – 5, தமிழ் காங்கிரஸும், சிஹல உறுமயவும் தலா ஒன்று.

அரசுக்கு எதிர்க்கட்சியைவிட மேலதிகமாக ஏழு உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் நடவடிக்கையில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. தீவிரமாக இறங்கியுள்ளது.

அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் சிலரை தன் பக்கம் இழுத்து அரசைக் கவிழ்க்க முடியும் என ஐ.தே.க கூறி வருகிறது.

ஐ.தே.க.வுக்குள் சமீபத்தில் மூண்ட உட்பூசலை அடுத்தே அரசாங்கத்தை நாடாளுமன்றத்தில் கவிழ்க்கும் முயற்சிக்கு முன்னுரிமை கொடுத்துத் தலைவர் ரணில் செயற்படத் தொடங்கியுள்ளார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் அரசின் முயற்சி வெற்றி பெறுமா?

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் இரண்டாவது நாடாளுமன்றத்துக்கு இன்னமும் ஓராண்டு பூர்த்தியாகவில்லை. எதிர்வரும் அக்டோபர் மாதம் 10ஆம் திகதியே ஓராண்டு பூர்த்தியடையும்.

ஓராண்டு பூர்த்தியாவதற்கு முன் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கும் தேவை ஏற்படாது என அரசியல் சட்டம் கூறுகிறது.

அதனால் அதுவரை நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஆபத்து ஏற்படப்போவதில்லை என்றே அரசியல் அவதானிகள் கூறி வருகின்றனர்.

இருந்தாலும் பொ.ஐ.மு அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி சில தினங்களுக்கு முன் அறிவித்து கல்லைத் தூக்கிப் போட்டுள்ளது. அரசின் புதிய வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது வரவு – செலவுத் திட்டத்தை தோற்கடிக்க ஐ.தே.க திட்டமிடுவதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அதில் உண்மையும் இருந்தது.

''ஆனால், ஓராண்டுக்கு முன்னர் அரசைக் கவிழ்ப்பதால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நோக்கம் நிறைவேறாது. அதனால் ஐ.தே.கவுக்கு அரசியல் லாபம் கிட்டாது'' என்று ஐ.தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அப்பொழுது அந்த முயற்சிக்கு ஆதரவளிக்க மறுத்தார். அவரது இந்த போக்கே கட்சிக்குள் அவருக்கு எதிராக ஒரு குழு உருவாகவும் காரணமாக அமைந்தது.

ஐ.தே.க.வுக்குள் மாற்றத்தைக் கோரும் குழு தொடர்ந்து செயற்பட்டு வரும் நிலையில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது என்பதில் ஐ.தே.க. இப்பொழுது ஒன்றுபட்டு செயற்பட ஆரம்பித்துள்ளது. அரசுக்கு எதிராக ஐ.தே.க. தனித்து நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதா அல்லது சகல எதிர்க்கட்சிகளினதும் ஒத்துழைப்போடு அதனைக் கொண்டுவருவதா என்பது ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. சகல எதிர்க்கட்சிகளினதும் ஒத்துழைப்போடு நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ரணில் தீர்மானித்துள்ளார்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் ஐ.தே.கவின் எல்லா நடவடிக்கைகளுக்கும் சகல எதிர்க்கட்சிகளும் தலையாட்டுவதில்லை. குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகள் பிரச்சினையின் அடிப்படையிலேயே ஐ.தே.கவுக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்றன. இந்த வகையில் அவசரகாலநிலை நீடிப்பை எதிர்த்து எதிர்க்கட்சியில் உள்ள தமிழ்க் கட்சிகள் வாக்களித்து வருகின்றன.

அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு தான் பதவிக்கு வர வேண்டும் என்று ஐ.தே.க நினைப்பது நியாயமே. ஆனால் தான் மட்டும் தனித்து நின்று அந்த காரியத்தைச் செய்ய ஐ.தே.கவுக்குப் பலம் இல்லை. அதனால் ஜே.வி.பி. தமிழ்க் கட்சிகள் ஆகியவற்றின் ஆதரவைக் கேட்கிறது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றையும் தனக்கு ஆதரவளிக்குமாறு கோருகிறது.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர ஐ.தே.க. முயன்று வருகையில் அதை எதிர்கொள்ள அரசும் தயாராகி வருகிறது. சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரும் சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளருமான எஸ்.பி. திசாநாயகா ஐ.தே.க.வின் இச் சவாலை எதிர் கொள் நாம் தயார் எனக் கூறியுள்ளார்.



எஸ்.பி.திசாநாயகா

''நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் ஐ.தே.க. வில் ஒரு பிரிவினர் எமக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்பது எமக்குத் தெரியும். ஐ.தே.க. வில் உள்ள இரண்டு குழுவினரையும் குறித்து அதிருப்தி கொண்டுள்ள அப்பிரிவினரை எமக்கு ஆதரவளிக்கச் செய்ய முடியும். எம்மை எதிர்க்கும் ஐ.தே.க. வையும் ஜே.வி.பி.யையும் தவிர சிலவேளைகளில் எம்மை எதிர்க்காத த.வி. கூட்டணி போன்ற கட்சிகள் அனைத்தையும் எதிரணியில் ஒன்று சேர்ந்தாலும் எமக்கு 8 மேலதிக வாக்குகள் உண்டு.

''அதனால் மிகத் தீர்க்கமான ஒரு வாக்களிப்பு வருமேயானால் எதிரணியில் இருக்கும் உறுப்பினர்களின் ஆதரவை எவ்வாறு பெறுவது என்பது எமக்குத் தெரியும்''

இவ்வாறு அமைச்சர் திசாநாயகா பத்திரிகைப் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அரசை ஒருவேளை கவிழ்த்துவிட்டு ஐ.தே.க பதவிக்கு வந்தால் ஐ.தே.கவின் உடனடிப் பிரச்சினைகள் தீரலாம். ஐ.தே.க. பதவிக்கு வருவதால் தமிழ்க்கட்சிகளுக்கு ஏற்படும் இலாபம் என்ன? தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் என்ன? என்ற கேள்விகள் இச்சமயத்தில் எழாமல் இருக்கமுடியாது. கடந்த இரு தசாப்தங்களாக நீடிக்கும் தமிழர் பிரச்சினைகள் தொடர்ந்து மோசமடைந்து வருகின்றன. தீர்க்கப்படும் அறிகுறிகள் இன்றைய ஆட்சியிலும் இன்னும் இல்லை.

ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? பொ.ஐ.மு. அரசை விரைவில் கவிழ்ப்போம் எனக் கூறிவரும் ஐ.தே.க. இக்கேள்விக்கு பதிலளிக்கவேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்கும் திட்டங்கள் எவை என்பதை எடுத்துக்கூறவும் வேண்டும். தீர்வுத்திட்டங்களை முன்வைத்து விட்டு சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவை ஐ.தே.க. கோரினால் அது நியாயமாகும்.

– அவதானி


LINK-Salt to taste LINK-Salt to taste LINK-Salt to taste

சிறந்த தரத்திற்கான சர்வதேச விருதுபெற்ற லிங்க் அயடீன் கலந்த உப்பு

Link Imports & Exports (Pvt)Ltd.

86/1, Chatham Street, Colombo - 01.

Tel : 321085 TeleFax : 435959E-Mail :link@scienceland.lk

161


## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடிஒளிபரப்பு) குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரைவிமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

# தோல்விக்கான காரணத்தை தேடி நிற்கும் படைத் தரப்பு!

## சர்வதேச கடற்பரப்பு ஊடாக புலிகளுக்கு பெருமளவு ஆயுதங்கள் வந்தனவா?

படையினர் பெருமெடுப்பில் மேற்கொண்ட 'அக்கினிச் சுவாலை—1' இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்து இரண்டு வாரங்களுக்கு மேல் ஆகியும் இராணுவ—அரசியல் தலைமைப்பீடங்கள் தோல்வியின் அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை போலத் தெரிகிறது.

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடந்த தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் வாராந்த அமர்வின் போது கூட இது பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

தோல்விக்கான காரணங்களைத் துருவிக் கொண்ட இராணுவ உயர் மட்ட அதிகாரிகள் தற்போது, விடுதலைப்புலிகள் சர்வதேசக் கடற்பரப்பினூடாக பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தமையே முக்கிய காரணம் என்று கூற முற்படுகின்றனர்.

புலிகள் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை வாங்கி, சர்வதேச கடற்பரப்பினூடாக அவற்றை முல்லைத்தீவிலுள்ள தமது ஆயுதக் களஞ்சியங்களுக்கு உள்வாங்குவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இது முதற்தடவையும் அல்ல. அது இப்போதுதான் இராணுவத்துக்குத் தெரிய வந்த விடயமும் அல்ல.

தமது ஊகங்களை உரசிப்பார்க்க அவ்வப்போது, முல்லைக் கடலில் புலிகளுடன் கடற்சமரிட்டு புலிகளின் ஆயுதப்படகுகளைத் தாம் நிர்மூலமாக்கி விட்டதாக படையினர் மார்தட்டிக் கொள்வது சகலரும் அறிந்ததே.

சர்வதேசக் கடற்பரப்பினூடாகப் புலிகள் மேற்கொள்ளும் ஆயுதக் கொள்வனவை முறியடிக்கவென அதி நவீன யுத்தக் கப்பல் ஒன்றையும் கடற்படை கொள்வனவு செய்தது.

''யுத்த நிறுத்தம் மேற் கொள்ளப்பட்டிருக்கும் காலப்பகுதியில் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வது வழக்கம். இந்த முறையும், அப்படிப்பட்ட ஒரு நோக்கத்துடனேயே புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர்.

''அதனை நீடித்தும் வந்தார்கள்.

''பல கட்டங்களாக தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்ட கினிஹிர படை நடவடிக்கைகள் புலிகளைப் பலவீனமாக்கிவிட்டன. இந்த நிலையில் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளவே இந்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தனர்.

''இந்த நிலையில் ஓரிரு 'கறாரான'' படை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் மூலம் ஆனையிறவை மீண்டும் அமுக்கி விடலாம். புலிகளை வலியச் சண்டைக்கு இழுத்து அவர்களின் முதுகெலும்பை முறித்து விடலாம்.



செக்குடியரசிடமிருந்து படையினர் அண்மையில் கொள்வனவு செய்த நவீன ரி 55 ரக டாங்கிகள்.

''இராணுவ ரீதியிலான இந்தத் தோல்வி பேச்சு வார்த்தை மேசையில் புலிகளின் கைகளை ஒடித்து விடும்.

''இந்த நிலையில் யுத்தநிறுத்தம் கோரி புலிகள் சர்வதேச ஆதரவுடன் அரசுக்குக் கொடுக்கும் அழுத்தத்தைப் போக்கி விடலாம்.''

இப்படி இராணுவ உயர்நிலை அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

அரசை அடி வருடும் முன்னாள் போராளிக் குழுக்களும் அரசுக்கு இவ்வாறே மந்திரித்தன.

அதனை முழுமையாக நம்பியது அரசு. சண்டை செய்து கொண்டே சமாதானம் பேசலாம் என்று அரசு அறிக்கை விடுத்தது.

எது எப்படியிருப்பினும், புலிகள் உள்ளூரத் தம்மைத் தொடர்ச்சியாக வலுப்படுத்திக் கொண்டது ஏதோ உண்மையே.

புலனாய்வு அறிக்கைகளின் படி — கடந்த நான்கு மாதங்களில் சர்வதேசக் கடற்பரப்பினூடாக ஆயுதக் கப்பல் மூலம் மூன்றுக்கும் மேற்பட்ட தடவைகள், பல்வேறு கட்டங்களாக ஆயுதங்களைப் புலிகள் கொள்வனவு செய்துள்ளனர்.

இந்த ஆயுத விநியோகம் குறித்து கடற்படையினர் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

இந்த ஆயுதங்களில் புதிய ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள், நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய 'றேஸர்' (Rezer)ரக துப்பாக்கிகள் ஆகியவற்றைப் புலிகள் கொள்முதல் செய்திருப்பதாகத் தெரிகிறது. மற்றும்படி நவீன ரக ஆயுதங்கள் எதனையும் கொள்வனவு செய்ததாகத் தகவல் இல்லை.

மாறாக முன்னர் உபயோகப்படுத்திய 120 மி.மீ, 130மி.மீ மற்றும் 152மி.மீ ஆட்லறிகளுக்குத் தேவையான எறிகணை களையும், 81மி.மீ மற்றும் 120மி.மீ மோட்டார்களுக்குத் தேவையான மோட்டார்க் குண்டுகளையும், தாங்கி எதிர்ப்பு ஆர்.பி.ஜி ஏவுகணைகளையும் அதற்கான எறிகணை களையும் மட்டுமே புலிகள் கொண்டு வந்து சேர்த்திருப்பதாக இராணுவ உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

'அக்கினிச் சுவாலை—1'' இராணுவ நடவடிக்கையின் போது புலிகள் இதில் பெருமளவு ஆயுதங்களையும், வெடி பொருட்களையும் படையினருக்கு எதிராகப் விரயப்படுத்தி விட்டனர் என்றும் அந்த வட்டாரங்கள்




மேலும் தெரிவித்தன.

புலிகள் தம்மை வலுப்படுத்தும் போது இராணுவம் என்ன இராவணன் வெட்டையா பார்த்து நின்றது?

புலிகள் இரகசியமாகச் செய்த வேலையை இராணுவமும் அரசும் பகிரங்கமாகவே செய்தன.

செக் குடியரசிடம் இருந்து பாரிய கப்பல் ஒன்றில் T-55 ரக தாங்கிகள் உட்பட பல்வேறு இராணுவ தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன என்பதை இராணுவம் பகிரங்கமாகவே அறிவித்தது.

அத்துடன் நான்கு மாத காலத்தில் 4500 பேர் இராணுவத்தில புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். படையில் இருந்து தப்பி ஓடி மறைந்திருக்கும் 15,000 பேரில் 3500 பேர் இராணுவத்தில் மீள இணைந்து கொண்டனர்.

மொத்தத்தில் இரண்டு தரப்பினருமே தங்கள் ஆற்றலுக்கேற்ப தங்களை வலுப்படுத்திக் கொண்டனர்.

புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்றைத் தவிர்ப்பதற்காகவே இந்தப் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறுகிறது படைத்தரப்பு.

ஏப்ரல் 25ஆம் திகதி அதிகாலை தாம் நடவடிக்கை மேற்கொண்டிராவிட்டால் அடுத்தநாள் அதிகாலை கிளாலி — நாகர்கோயில் — எழுதுமட்டுவாள் — இராணுவ கடற்படை கூட்டுமுகாம் மீது பாரிய அழித்தொழிப்புப் போர் ஒன்றைப் புலிகள் தொடுத்திருப்பார்கள்.

அவ்வாறு மேற்கொண்டிருந்தால் படையினரை தற்போதைய நிலையிலிருந்து பல மைல்களுக்குப் பின்தள்ளியிருப்பார்கள்.

இப்படிக் கூறினார் கூட்டுப் படைத் தலைமை அதிகாரி.

அந்த வகையில் இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட இழப்புகளிலும் ஒரு வெற்றி கண்டுள்ளோம் என்றார் அவர்.

'அக்கினிச் சுவாலை — 1 படை நடவடிக்கை தற்காப்பு நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்றால் வலிந்து தொடுக்கப்பட்ட தாக்குதலில் இவ்வாறு பெருமளவு இழப்புகளையும் ஒட்டுமொத்த தோல்வியையும் படைத்தரப்புச் சந்தித்துக்கொண்டது இதுவே முதல் தடவை.

புலிகள் யுத்தநிறுத்தம் அறிவித்திருந்த காலப்பகுதியில் புலிகள் மீது படையினர் பல தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

அப்போதெல்லாம் புலிகள் தற்காப்பு யுத்தத்தையே மேற்கொண்டனர். அக்கினிச் சுவாலை — 1 உண்மையில் ஒரு தற்காப்பு போர் என்றால் படைத்தரப்புக்கு தற்காப்புப் போரின் தாற்பரியம் தற்போதுதான் விளங்கியிருக்கும்.

மறுபுறத்தில் படைத்தரப்பு புலிகளின் தாக்குதல் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தும் அதை முறியடிக்க முடியாத ஒரு நிலையில் இருந்திருப்பதையும் இந்தப் படை நடவடிக்கையின் தோல்வி வெளிக்கொணர்ந்துள்ளது.

அப்படியானால் படைத்தரப்புக்கு ஏற்பட்ட தோல்விக்கும், இழப்புகளுக்கும் யார் பொறுப்பு?

ஏற்கனவே கினிஹிர மற்றும் ரிவிகிரண இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக புலிகளின் ஆட்லறி மற்றும் மோட்டார் போன்ற மறைமுக சுடுகலன்களினால் பலத்த இழப்புக்களை படைத்தரப்பு சந்தித்திருந்தது.

அப்படியானால் இந்தத் தடவை புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் முன்புபோல புலிகளின் மறைமுக சுடுகலன்களின் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள படைத்தளபதிகள் மேற்கொண்ட முறைகள் என்ன?

தாக்குதல் ஒன்று திட்டமிடப்படுகையில் அதில் மூன்று கட்டங்கள் மிக முக்கியமானவை.

திட்டமிடும் கட்டம்

தாக்குதல் கட்டம்

தந்திரோபாயக் கட்டம்

இலங்கை இராணுவத்தின் தற்போதைய கட்டமைப் பின்படி முப்படைத் தளபதிகளுடன் கலந்தாலோசித்து விட்டு கூட்டுப் படைத் தலைமையகமே தாக்குதல் ஒன்றை திட்டமிடுவதற்குப் பொறுப்பு வகிக்கின்றது.

தாக்குதல் திட்டம் எனும்போது அதை அவ்வப்போது பிராந்தியத் தளபதியே ஏற்று நடத்துவார். யாழ் மாவட்டமானால் மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா பொறுப்பேற்பார்.

இறுதியில் தந்திரோபாயக் கட்டம் எனும்போது அதனை களத்தில் படையணிகளுக்குப் பொறுப்பாக இருக்கும் பிரதான கட்டளையிடும் அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

'அக்கினிச் சுவாலை—1' இல் ஈடுபடுத்தப்பட்ட 55ஆவது டிவிஷன் படையணிக்கு மேஜர் ஜெனரல் சுனில் தென்னகோனும் 53ஆவது டிவிஷன் படையணிக்கு மேஜர். ஜெனரல் சீவலி வணிகசேகரவும் பிரதான கட்டளையிடும் அதிகாரிகள் ஆவர்.

அப்படியானால், இந்த இராணுவ நடவடிக்கையின் தோல்விக்கு இந்த மூன்று கட்டங்களில் எந்தக் கட்டத்தில் தவறு நடந்தது? அதற்குப் பொறுப்பு யார்? என்ற கேள்விகளுக்கான உள்ளார்ந்த இராணுவ விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு மேல் விசாரணை செய்ய முடியாது.

இந்த முறியடிப்பு யுத்தம் புலிகளுக்கு ஓர் அழித்தொழிப்புச்சமரின் சாதகமான விளைவுகளைக் காட்டிலும், அதிக பயனை அளித்திருப்பதாகவே கருதப்படுகிறது.

அத்துடன் பாரிய அளவில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் தமது முழுப் பலத்துடன் முன்னேறிய போதும் வெட்டவெளியில் வைத்து அவர்களை முறியடிக்கக் கூடிய உளவியல் பலத்தையும் நம்பிக்கையையும் புலிகளின் தாக்குதல் அணியினருக்கு இந்தச் சமர் வழங்கியுள்ளது.

இனிமேல் என்ன யுக்தியை பிரயோகிப்பது என்று இராணுவ தலைமைகள் ஆழமாகச் சிந்திப்பதற்கும் இந்தத் தாக்குதல் வழிவகுப்பதோடு உளரீதியாக படையினரை சற்றுத்தளர்வடையவும் செய்துள்ளது.

இதுவரை இராணுவ யோசனைகளுக்கும், வெற்றிகளுக்கும் ஏற்ப அரசியல் தீர்மானங்களை எடுத்து வந்த அரசு இனிமேல் தொடர்ந்தும் அவற்றை நம்ப முடியாது. அவற்றில் தங்கியிருக்கவும் முடியாது. அந்த அளவுக்கு அக்கினிச் சுவாலை தோல்வி சுட்டுக் கொண்டது.

இதன் காரணமாகவோ என்னவோ, இராணுவ பலத்தின் மூலம் புலிகளை வழிக்குள் கொண்டு வரலாம் என்று இறுமாப்புடன் சமாதான முயற்சிகளைத் தட்டிக் கழித்த அரசு தற்போது தனது இராணுவக் கடும் போக்குகளால் தடம் மாறி புலிகளுடன் சமாதானம் குறித்த முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய நிலைப்பாட்டுக்குத் தானாகத் தள்ளப்பட்டுள்ளது.

சுடர் ஒளி சிறுவர் வாசகர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி!

மாஸ்டர் சிவலிங்கத்தின்




சிறுவர் சித்திரத் தொடர்கதை விரைவில் எதிர்பாருங்கள்

படிக்கத் தவறாதீர்கள்!

# வீடியோ டெக்கில் கசற் சிக்கிய பின்னணி என்ன?

''அடுத்தவை மேலை நாக்கூசாமல் பழி போட எப்படித்தான் மனம் வருகுதோ...?'' தேரடியில் அரட்டையை ஆரம்பித்து வைத்த மாஸ்டர் கேட்டார்.

''ஏன் மாஸ்டர்....?'' வினாவினான் டானியல்.

''யாழ்ப்பாணத்திலை பெயர் பெற்ற உயர்தர பெண்கள் பாடசாலையில் மாணவிகளுக்குத் தலைமைத் தலைவியாக இருக்கிற பிள்ளை படிப்பை மேலே தொடர முடியாத நிலைமையிலை இருக்குதாம்...''

''மாஸ்டர் இன்று ஒரு விஷயத்தையும் உடனே சொல்வதில்லை என்று விரதம் போல'' சிரிப்புடன் குறுக்கிட்டான் லோகன்.

உடனடியாக விஷயத்துக்கு வந்தார் மாஸ்டர்...!

''நான் சொல்லும் பிள்ளை படிப்பிலே கெட்டிக்காரி, குணத்திலையும் நல்லவ, மாணவிகளின் தலைமைத் தலைவியாகப் பாடசாலையில் நியமிக்கப்பட்டிருக்கிறா என்றால் பாருங்கோவன். அந்தப்பிள்ளை படிக்கிற பாடசாலையின் சகோதரப் பாடசாலையாக இருக்கிற ஆண்கள் பாடசாலையும் படிப்புக்கும் ஒழுக்கத்துக்கும் பெயர் பெற்றதுதான்.

''அங்கு படிக்கிற பொடியன் ஒன்று நான் சொன்ன பிள்ளைக்குப் பின்னாலை அலைஞ்சிருக்கிறான். அந்தத் தொல்லை பொறுக்கமுடியாமல் ஒரு நாள் பிள்ளை ஏசிப்போட்டுதாம். உடனே அந்தப் பொடியன் திட்டம் போட்டு தனது நண்பர்கள் மூலமாக, ஒரு பொய்க் கதையை அவிழ்த்து விட்டானாம்.

''அந்தப் பிள்ளை, தனது சினேகிதிகள் சிலருடன் சேர்ந்து பார்க்கக்கூடாத படத்தைப் பார்த்ததாகவும், படம் பார்த்துக் கொண்டிருந்த சமயம், கசற் டெக்குக்குள் சிக்கிவிட்டதாகவும் அதனை எடுக்க வீடியோக் கடைக்கு டெக்கை அந்த பிள்ளைகள் கொண்டு போனதாகவும்.... அந்த தறுதலை வதந்தியைப் பத்தவைச்சு விட்டிருக்கு.

''இப்ப பாவம், அந்தப் பிள்ளை, அது றோட்டாலை போகும் போதும், வரும் போதும் காவாலிப் பெடியள் இந்த விஷயத்தைச் சொல்லி நக்கல் அடிக்குதுகளாம். இப்ப அந்தப் பிள்ளை படிப்பில் கவனம் செலுத்த முடியாத அளவுக்கு கவலை அடைஞ்சிருக்காம்'' என்றார் மாஸ்டர்.

''ஏன் மாஸ்டர், இந்தக் காலத்தில சின்னக் குழந்தைப்பிள்ளை கூட டெக்கைக் கழற்றி உள்ளே சிக்கியிருந்த கசற்றை எடுக்குது. அப்படியிருக்கும் போது அந்தப் பிள்ளைகள் கசற்றை எடுக்க வீடியோக் கடைக்கு கொண்டு போகுங்களே. விசரன் ஒருத்தன் சொன்னால், அதை நம்பிறவைக்கு புத்தி இல்லையோ?'' கொந்தளித்தான் லோகன்.

'' இதே மாதிரி யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தம்பி, கொழும்பு தொடக்கம் எல்லா இடத்திலையும், இருக்கிற பிள்ளைகளைக் கேவலப்படுத்த அங்கை இருக்கிற பெடியள் இந்த மாதிரி கதைகளை அவிழ்த்து விடுகுதுகள்.

''ஆனால் எல்லா இடத்திலையும், படம் பார்த்து டெக்கில கசற் சிக்கி , வீடியோ கடையிலை கொடுத்து எடுத்தது தான் கதை. உந்தக் கதை எல்லா ஊரிலையும் ஒரே மாதிரிக் கற்பனையாக எப்படி உருவானது என்பதுதான் ஆச்சரியம்'' என்றார் மாஸ்டர்.

'' இதிலை என்ன மாஸ்டர் ஆச்சரியம்? இங்கே தெருப் பொறுக்கினது ஒன்று கொழும்புக்குப் போனால், அங்கை இருக்கிற பிள்ளை ஒன்றை வைத்து இந்தக் கதை அவிழ்படும். இப்படி ஊர் ஊராகப்பரவும்'' விளக்கினான் டானியல்.

''அது சரி, அந்தப் பிள்ளையின் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடங்கள் இரண்டும் நடவடிக்கை எடுக்கவில்லையோ?'' ஒரு தந்தைக்குரிய கரிசனத்தோடு கேட்டார், அது வரை அமைதியாக இருந்த விநாசியர்.

''இரண்டு பள்ளிக்கூடங்களும், ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டும் வழியைப் பின்பற்றுகினம். அதனால்தான் பேசாமல் இருக்கினம் போலை. அல்லது பெடியன் பெரிய இடம் என்பதால் நடவடிக்கை தாமதமாகுதோ தெரியவில்லை'' — முடித்தார் மாஸ்டர்.

''ஒரு நாளைக்கு 'டோர்ச்லைட் மூடி' யாலை அடிவாங்கேக்கை தெரியும், பொடிப்பிள்ளைக்கு....'' என்றபடி சின்னாச்சி அரட்டையில் கலந்து கொண்டாள்.

'டோர்ச்லைட் மூடி' பற்றி ஏற்கனவே சின்னாச்சி கூறியிருந்ததால் அனைவரும் புரிந்து கொண்டனர்.

''என்ன தமிழகத்தில் ஜெயலலிதா கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருகிறது போல'' பேச்சை மாற்றினான் லோகன்.

''மோதகமும் கொழுக்கட்டையும் வடிவம்தான் வேறு . ஆனால் உள்ளீடு ஒன்றுதான். அதுபோல எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மக்களுக்கு நன்மை செய்வதை விடத் தங்களை வளப்படுத்துவதில்தான் கரிசனம் காட்டுவினம்''என்றார் விநாசியர்.

''இந்தமுறை அங்கு வாக்களித்தவை ஆக 59.05 வீதமாம். இதுவரை இவ்வளவு குறைவாக வாக்குப் பதிவு அங்கு நடந்ததில்லையாம். பெரும்பாலான மக்கள் தேர்தலில் ஈடுபாடு காட்டாமல் இருந்திட்டினமாம். கட்சிகளின் நிரந்தர ஆதரவாளர்கள் மட்டும் வாக்களிச்சிருக்கினம். அதனால் அதிக கட்சிகள் அங்கம் வகித்த அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெற்று விட்டதாம்'' கேள்விப்பட்டதைக் கூறினார் மாஸ்டர்.

''ஊழல் புரிந்ததாகத் தண்டனை வழங்கப்பட்ட ஒருவர் மீண்டும் முதல்வரானால் தன் மீதான தண்டனைகளையும் வழக்குகளையும் அகற்றுவதற்கு சாதகமான நிலை ஏற்படாதோ'' கேட்டான் டானியல்.

''இதுதான் தம்பி ஜனநாயகத்தின் விசித்திரம்''. என்ன தவறு செய்தாலும், மீண்டும் பதவியைப் பிடித்துத் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று எல்லா அரசியல்வாதிகளும் நினைக்கினம்'' என்றார் விநாசியர்.

''இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்ந்து இங்கு நேர்மையான, நிலையான நல்லாட்சி ஏற்பட்டால்,



## தேரடி அரட்டை

தங்கடை பித்தலாட்டப் பருப்புகள் தமிழக மக்களிடம் அவியாமல் போய்விடும் அங்கிருக்கும் இளைஞர்களும் எங்கட வழியைப் பின்பற்றினால் தங்களுக்கு ஆபத்து என்று நினைத்துத்தான் எங்கட முதுகில குத்துற வேலைகளை அவை பாக்கினம்'' கூறினாள் சின்னாச்சி.

''அங்க மட்டுமே, இங்க இருக்கிறவையும் அந்த நாள் தொடக்கம் தமிழக அரசியல்வாதிகளின் வழியிலைதானே நடை போட்டவை''நடந்ததை நினைவு படுத்தினார் மாஸ்டர்.

''மாஸ்டர், எங்களுக்கு விளங்கிற மாதிரிச் சொல்லுங் கோவன்''ஆவலாகக் கேட்டான் டானியல்.

''இந்திய சுதந்திரத்துக்குப் பின்பு தமிழகத்தில் தமிழ் இன உணர்வுகளைத் தூண்டிவிட்டு அரசியல் நடத்தப்பட்டது. ஆனால் இந்தியைப் படிக்கவேண்டாம் என்று சொன்ன தலைவர்களின் பிள்ளைகள் ஆங்கிலப் பாடசாலைகளில் இந்தியும் படித்தார்கள்.''

''ஒரு கட்டத்தில் ஆட்சியைப் பிடிப்பதற்காக தமிழகத் தலைவர்கள் தனிநாட்டுக் கோஷத்தை எழுப்பினார்கள். பின்னர் ஆட்சியைப் பிடித்தவுடன் நைஸாக தனிநாட்டைக் கைவிட்டார்கள். தொண்டர்களும் தலைவர்களின் சொல்லை வேதமாக ஏற்று மௌனம் காத்தார்கள்.''

''அதன் பிறகு மத்தியில் ஆட்சி நடத்தும் தேசியக் கட்சிக்கு முண்டு கொடுத்தார்கள். தங்களது சுயநலத்தை மறைக்க நல்ல தமிழில் போலிச் சாட்டுகள் கூறி, பிறகு, பற்பொடி தொடக்கம் சோறு வரை ஓசியில் கொடுத்து மக்களை ஏமாற்றினார்கள். ''

''போதாக்குறைக்கு திரைப்படங்களையும் மதுவகையையும் காட்டி மக்களை மயக்கத்திலேயே இருத்தியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் ஊழல் செய்து சம்பாதிக்கிறவைதான் மாறி மாறி ஆட்சி அமைப்பினம்''

மூச்சு வாங்கப் பேசிய மாஸ்டர் சிறிது நிறுத்திக் கொண்டார்.

அதை வாய்ப்பாகப் பயன்படுத்தி இடையில் நுழைந்த லோகன் ''நீங்கள் சொல்வது தமிழகத்துக்கு சரி மாஸ்டர். இங்கே நாங்கள் அப்படியோ''எனக் கேட்டான்.

மாஸ்டரும் விநாசியரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர். பின்னர் விநாசியர் பேசத் தொடங்கினார்....

''தமிழ் நாட்டில நடந்ததில ஒன்றே ஒன்றுதான் இங்கே நடக்கவில்லை. மற்றதெல்லாம் இங்கே இப்பவும் நடக்குது''

''முதலில் நடக்காதது என்ன என்று சொல்லுங்கோ அண்ணை''லோகன் கேட்டான்.

''தனிநாடு கோரிக்கையைத் தமிழக அரசியல் வாதிகள் பதவி கிடைத்தவுடன் கைவிட்டினம். அதற்கு மக்களும் தலையாட்டிச்சினம். ஆனால் நாங்கள் செய்த புண்ணியம், அந்தக் கோரிக்கையை தாகமாகக் கொண்டவை எங்களுக்குள்ள இருந்திச்சினம்'' நிம்மதி மூச்செறிந்தார் விநாசியர்.

அவரைத் தொடர்ந்து மாஸ்டர் ஆரம்பித்தார்.

''இதைத் தவிர மற்றதெல்லாம் இங்கே நடந்தது; இப்ப நடக்குது. தமிழ், தமிழர் என்று மக்களை உசுப்பி விட்டு நாடாளுமன்றம் போனதும், தங்களுக்குள்ள பிரிந்து நின்று ஒருவரையொருவர் காலை வாரிவிட்டதும், தேர்தலில் தோற்றுவிடுவோம் என்று பயம் வந்ததும் தோளில் கைபோட்டபடி தனிநாடு கோரிக்கையை முன் வைத்ததும், தமிழகம் போலவே இங்கும் நடந்தது. அது போகட்டும் ஒழுங்கான தலைமை கிடைச்சு தமிழ் மக்கள் நல்ல பாதையில போகும் போதாவது இவை திருந்தி நடக்கலாமெல்லே. உயிரைக் கொடுத்து தமிழருக்கு நல்லது நடக்கவேணும் என்று போராட்டம் நடக்கிற வேளையில் ' பழைய குருடி கதவைத் திறடி 'என்று தமிழகம் போல மத்தியில இருக்கிறவைக்கு முட்டுக்கொடுத்து, வால் பிடிச்சு, தங்களைக் காப்பாற்றப் பார்க்கிற வேலையைத் தொடர்வதுதான் கவலையாக இருக்குது''

''ஜெயலலிதா மாதிரி, காசு தாறம், வேலை தாறம், அது தாறம், இது தாறம், என்று அரசியல் நடத்திறவை ஒரு புறம், தி.மு.க மாதிரி மத்திய அரசாங்கம் கவிழாமல் முட்டுக்கொடுத்து அதற்கு பிரதி உபகாரமாக தங்கட பதவிகளைக் காப்பாற்ற முயற்சிக்கிறவை மறுபுறம், இப்படி தமிழகத்தின் நிலைதான் இங்கும். அங்கு தமிழக விடுதலைப் படை போன்ற தமிழுணர்வு அமைப்புகள் அடக்கி ஒடுக்கப்பட்டன. ஆனால் அந்த ஒரு விசயத்தில்தான் நாங்கள் தலை நிமிர்ந்து நிற்கிறோம்.''

பேசி முடித்த பின்னர் மெதுவாக எழுந்தார் மாஸ்டர்.

அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் எழுந்தபோது சின்னாச்சியின் குரல் கவனத்தை ஈர்த்தது.

''கருணாநிதியும் ஜெயலலிதாவும் சொல்வது அங்கு வேதவாக்காக இருக்கலாம். ஆனால் இங்கு அவை மாதிரி ஆயிரம் பேரை ஒரு சொல்லால் கட்டுப்படுத்த ஆளிருக்கு. ஒன்றுக்கும் கவலைப்படாதேங்கோ''

கடலைக் கடையைக் கட்டினாள் சின்னாச்சி.

அந்த நேரத்தில் ஐஸ்கிறீம் வான் ஒன்று கோயிலடியால் பாட்டுப்போட்டபடி சென்றது .

''வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும் இப்படை தோற்கின் எப்படை வெல்லும்.''

—ஏகலைவன்

## எக்ஸ்ரே இயந்திரம் எங்கே?

வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சு கிளிநொச்சி வைத்திய சாலைக்கு வழங்கவென 11 லட்சத்து 53 ஆயிரம் ரூபா பெறுமதியான எக்ஸ்ரே இயந்திரம் மற்றும் ஸ்கானர் ஆகியவற்றையும் கொள்வனவு செய்திருந்தது.

1999 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப் பட்ட இந்த இரு பொருள்களையும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சிக்குக் கொண்டு செல்வதற்காக பாதுகாப்பு அமைச் சின் அனுமதி கோரப்பட்டிருந்தது.

அதுவரை அப்பொருட்கள் வவுனியா சுகாதார சேவைகள் திணைக்களத்தில் வைக்கப்பட்டிருந்தன.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்று வரும், நாளைவரும் என்று எதிர்பார்த்திருந்த வர்களுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது.

சென்றவருடம் எதிர்பாராத விதமாக அந்தப் பொருட்கள் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டு விட்டன என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அமைச்சு ஊடாகத்தான் படையினர் இவற்றை எடுத்ததாக இப்போது கூறுகின்றார்கள். இது விடயமாக பல உயர்மட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிய எந்தக் கடிதத்துக்கும் இதுவரை பதில் இல்லை என வடக்கு—கிழக்கு மாகாண அமைச்சு அலுவலகம் கூறுகின்றது.

''விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக அதற்கான பெறுமதி அல்லது புதிய பொருட்கள் மீண்டும் கிடைக்கும் என்று அரசதரப்பு கூறியிருக்கிறதாம்.

கொழும்பில் நடைபெற்ற அரச தரப்புக் கூட்டங்களில் இது பற்றி தெரிவித்தும் இதுவரை எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்று தெரியவருகிறது.

''பேய்க் கதைகள் நல்லா எழுதிறியள். அதெப்பிடித் தத்ருபமாக எழுதிறியள்?''

''எல்லாம் என்ரை குடும்பத்துக்குள் நடக்கிற விசயங்கள்தான்!''



# தந்தையின் தற்கொலை

மொண்டானா நகரின் பொலிஸ் நிலையம். குலினன் என்பவரின் கொலை வழக்குச் சம்பந்தமான தகவல்களை சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் தொகுத்துக் கொண்டிருக்கிறார்.

கொலைகாரன் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள டொட்சனை நீதிமன்றம் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையில் அவர் ஈடுபட்டிருந்தார்.

டொட்சனைகைது செய்வதற்கு இன்ஸ்பெக்டர் பெரும் பாடுபட்டார். அந்தக் கண்டுபிடிப்பிற்காகதனக்கு பதவி உயர்வும், சம்பள அதிகரிப்பும் கிடைக்கும் என்ற நப்பாசை வேறு இன்ஸ்பெக்டரை போட்டு ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. அந்த குதூகலத்துடன் தகவல்களை செம்மையாகத் தொகுத்துக் கொண்டிருக்கிறார்.

அப்பொழுது இரவு மணி 10.00.

கிரிங்! கிரிங்! கிரிங்!

தொலைபேசி அலறித் தொலைக்கிறது.

'சடக்'கென அதனை தூக்கிய இன்ஸ்பெக்டர் 'ஹலோ!' என்றார்.

அவர் குரலில் கம்பீரம் கொடி கட்டிப் பறக்கிறது.

''இன்ஸ்பெக்டர் மத்தீவ் இருக்கிறாரா?''

''ஆமாம். நான் தான் மத்தீவ் பேசுகிறேன். நீங்கள்?''

''சார், நான் அட்லண்டா ரெஸ்டோரண்ட் மனேஜர் பேசுகிறேன். எங்கள் ஹோட்டலின் பின்பக்கமாகவுள்ள மதிலின் அருகில் ஒருவன் செத்துக் கிடக்கிறான்....''

இன்ஸ்பெக்டரின் கண்களில் மகிழ்ச்சி. ஒரு கேஸ் முடிவதற்கு முன்னர் இன்னொரு கேஸ் என்று மனதிற்குள் கொண்டாட்டம் கும்மாளமிடுகிறது.

கேஸ்பைலை மூட்டை கட்டி வைத்துவிட்டு ஜீப்பை நோக்கி ஒரே தாவாகத் தாவினார். இருளைக் கிழித்துக் கொண்டு ஜீப் பறந்தது. பாவம் ஓர் இடி அவர் தலையில் விழுவதற்காக அங்கே காத்துக் கொண்டிருக்கிறது என்பதை இன்ஸ்பெக்டர் மத்தீவ் அறியவில்லை.

***

அட்லண்டா ரெஸ்டோரண்ட், இருளுக்கு மத்தியில் ஒரு மின்மினிப் பூச்சியைப் போல் காட்சியளிக்கிறது. அதன் பின்புற சுவர் ஓரமாக அந்த மனிதன் விழுந்து கிடக்கிறான்.

நெற்றியில் துப்பாக்கி சூடு விழுந்திருக்கிறது. ஒரு புறத்தில் சூடு விழ, நெற்றி முழுவதும் ஊடுருவிச் சென்ற துப்பாக்கி ரவை மறுபுறத்தை கிழித்துக் கொண்டு சென்று சுவரில் இரத்தத்தை சிதறியடித்துள்ளது.

இன்ஸ்பெக்டரின் நெற்றி சுருங்கியது. தற்கொலை போல் தெரிகிறதே. ஆசாமி யாராகவிருப்பான்: அவர் உதடுகள் முணுமுணுத்துக் கொள்கின்றன.

அது தற்கொலையே தான். சடலத்தின் பாக்கெட்டில் நீட்டிக் கொண்டிருந்த கடிதம் அதனை உறுதி செய்தது.

கடிதத்தை உருவி எடுத்தார் இன்ஸ்பெக்டர். அதற்குள் தான் அவர் தலையில் விழுந்த இடி ஒழிந்து கொண்டிருந்தது.

எந்த நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று நிறுத்த வேண்டும் என்று இன்ஸ்பெக்டர் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாரோ அந்தக் குற்றவாளியின் தந்தை தான் இறந்து கிடக்கிறார்.

அவர் எழுதி வைத்திருந்த கடிதம் இன்ஸ்பெக்டரின் தலையில் இடியை விழச் செய்ததுடன் 'ஐயோ பரமோஷனும் போச்சே' என்று தலைக்கேசத்தையும் பிய்த்துக் கொள்ள வைத்தது.

''குலினனைக் கொன்றது நான்தான். அங்கே கொள்ளை அடித்தது என் மகனின் நண்பர்கள். என் மகன் மீது உயிரையே வைத்திருந்தேன். அவனை கொலைகாரனாக்கி விட்டார்கள். அந்த வேதனையை என்னால் பொறுக்க முடியவில்லை. நன்றாகக் குடித்து விட்டு என்னையே நான் சுட்டுக் கொள்கிறேன். என் சாவுக்கு எவரும் பொறுப்பு இல்லை....!''

கடிதம் இவ்வாறு எழுதப் பட்டுள்ளது.

இன்ஸ்பெக்டர் மத்தீவ் திக்பிரமை பிடித்தவர் போல மூச்சுவிட மறந்து நின்றார்.

***

நீதிமன்றத்தில் குலினன் கொலை வழக்கு விசாரணை நடைபெற்றது. கொலை செய்த குற்றத்தை டொட்சனின் தந்தை ஏற்றுக் கொண்டார் என்ற காரணத்தினால் டொட்சன் விடுதலை செய்யப்பட்டான். எனினும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான பவுண் பணத்தைக் கொள்ளையடித்த குற்றத்திற்காக ஒலிவர் பென்சன், ஹெலிஸ் பெசிங்கர் ஆகிய அவனுடைய நண்பர்கள் சிறை செல்ல நேர்ந்தது.

இன்ஸ்பெக்டர் இடிந்து போனார்.

டொட்சன் முரட்டு ஆசாமி. ஒரு கடற்கொள்ளைக் காரனைப் போல ஆஜானுபாகுவானவன். விடுதலை செய்யப்பட்டதும் அவன் இன்ஸ்பெக்டரைப் பார்த்த பார்வை 'இருடா உன்னை கவனித்துக் கொள்கிறேன்' என்பது போல் வெறித் தனமாக விருந்தது. அது இன்ஸ் பெக்டரின் அடிவயிற்றில் புளியைக்கரைத்தது.

'டொட்சனின் தந்தையின் தற்கொலைக்குள் ஏதோ மர்மம் இருக்கிறது' என்ற சந்தேகம் இன்ஸ்பெக்டர் மனத்தை புழுவாய் குடைந்து கொண்டிருந்தது.

தற்கொலைக்குப் பயன்படுத் தப்பட்ட துப்பாக்கியை எடுத்து இன்ஸ்பெக்டர் பரிசோதனை செய்தார்.

டொட்சனின் வீட்டு வாசலில் பொலீஸ் ஜீப் வந்து நின்றதும் அவனுடைய விதவை அம்மா நடு நடுங்கிப் போனாள்.

''டொட்சன் எங்கே?'' என்று இன்ஸ்பெக்டர் கேட்டதும் பயந்துபோன அவள்.

டொட்சன் இங்கே இல்லை.

''எங்கே இருக்கிறான்''

'' பிளிமிங் வீட்டில்''

''அது யார்?''

''அவனுடைய நண்பன்''

''அது சரி, உங்க ளுடைய கணவன் எவ்வளவு காலமாக துப் பாக்கி பாவித்து வந்திருக்கிறார்''.

''ஐய்யய்யோ அவர் துப்பாக்கியே பாவிப்ப தில்லை'' அவள் பத

> அட்லண்டா ரெஸ்டோரண்டின் பின்புறச் சுவர் ஓரமாக அந்த மனிதன் விழுந்து கிடக்கிறான். நெற்றியில் துப்பாக்கிச் சூடு விழுந்திருக்கிறது. ஒருபுறத்தில் சூடு விழ, நெற்றி முழுவதும் ஊடுருவிச் சென்ற துப்பாக்கி ரவை மறுபுறத்தைக் கிழித்துக்கொண்டு சென்று சுவரில் இரத்தத்தைச் சிதறியடித்துள்ளது. இன்ஸ்பெக்டரின் நெற்றி சுருங்கியது. தற்கொலை போல் தெரிகிறதே...! ஆசாமி யாராகவிருப்பான்? அவர் உதடுகள் முணுமுணுத்துக் கொள்கின்றன.

றிக்கொண்டு சொன்னபோது இன்ஸ்பெக்டர் திகைப் படைந்தார்.


அதன் பிறகு அங்கிருந்து புறப்பட்ட இன்ஸ்பெக்டர் ஏறி இறங்காத துப்பாக்கிக் கடைகளே இல்லை. வியர்த்து விறு விறுத்துப் போன இன்ஸ்பெக் டருக்கு கடைசியாக ஒரு நல்ல செய்தி கிடைத்தது. துப்பாக்கி வாங்கப் பட்ட கடையை அவர் கண்டுபிடித்தார். டொட்சனின் தந்தையின் அங்க அடையாளத்தை அச்சொட்டாக சொன்ன அவன் அவர்தான் வாங்கியவர் என்று சொன்ன துடன் அதற்காக சீது வழங்கப்பட்டதையும் சொல்லி அதனையும் புத்தகத்திலிருந்து எடுத் துக்காட்டினான்.

தற்கொலை செய்து கொண்ட அன்றுதான் துப்பாக்கி வாங்கப்பட்டிருக்கிறது. இன்ஸ்பெக்டருக்கு இதுவும் ஏமாற்றமாகி விட்டது. இந்த விவகா ரத்தில் வேறு எவராவது சம்பந்தப்பட்டிருப்பார்களோ என்ற அவருடைய எண்ணத்தில் மண் விழுந்தது.

அப்பொழுது—

'இன்ஸ்பெக்டர்' என்று கடைக்காரன் அழைத்தான். துப்பாக்கியை வாங்கிய நபருடன் இன்னொருவர் வந்த தாகவும், அவர் கடைக்குள் வர வில்லையென்றும், துப்பாக்கிக்கு கொடுக்கவேண்டிய தொகை போத வில்லை என்றதும் மறுபடியும் வெளியில் சென்று அவரிடம் தான் பணத்தையும் பெற்றுக் கொண்டு வந்தான் என்றும் கடைக்காரர் கூறினார்.

இன்ஸ்பெக்டரின் நெற்றியில் சந்தேக ரேகைகள் நெளிந்தோடின. தற்கொலையின் பின்னால் ஏதோ சதி வலைபின்னப் பட்டிருக்கிறது என அவர் மனம் அடித்துக் கூறியது.



டொட்சனின் நண்பன் பிளிமிங் என்பவன் யார்? என்று அவர் மனம் தீவிரமாக சிந்தித்தது. இந்தப் பெயரை எங்கோ கேள்விப்பட்டிருக்கிறோமே என்று மனம் கூறியது.

குற்றவாளிகளின் பட்டியலை எடுத்து அதில் கண்களை ஓட்டினார். பிளிமிங் என்ற பெயரில் இரண்டு மூன்று பேர் இருந்தார்கள். அவர்களின் படங்களை பரிசோதித்தார்.

அதில் ஒருவன்....

அதை எடுத்துக் கொண்டு துப்பாக்கி வாங்கிய கடைக் குப் பறந்தார். கடைக்காரனிடம் காட்டி கடைக்கு வெளியில் இருந்த மனிதன் இவன் தானா?' என்று கேட்டார்.

படத்தை 'உர்' ரெனப் பார்த்து நாடியையும், தலையையும் 'பரபர' வென சொறிந்து கொண்ட கடைக்காரன் உருப்படியான பதில் எதனையும் சொல்லாமல் எச்சிலை விழுங்கினான். ஏதோ தொல்லை வந்து சேரப்போகிறது என்று பயந்த அவன் எதற்கு இந்த வம்பெல்லாம் என்று கருதி அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இந்த பாசாங்கு நாடகம் போட்டான்.

டொட்சனின் தாய் அந்த படத்தை அடையாளம் கண்டு கொண்டாள். படத்தில் இருப்பவன் தான் டொட்சனின் நண்பன் பிளிமிங் என்று அவள் சொன்னாள்.

சிறைச்சாலைபதிவேட்டிலிருந்துகிடைத்த இன்னொருதகவல் இன்ஸ்பெக்டரைதுள்ளி விழச்செய்தது. டொட்சன் இருந்த அதேசிறைஅறையில் பிளிமிங்கும்சிலநாட்கள் இருந்துவிடுதலை செய்யப்பட்டிருக் கிறான் என்பதே அந்ததகவல்.

***

சிறை அறையில்—

'கொன்ரா கில்லரான' பிளிமிங்கும், டொட்சனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

''இந்தக் கொலை வழக்கிலிருந்து உன்னைத் தப்ப வைக்கிறேன் எனக்கு ஒரு தொகை தருவாயா?''

தருவேன் ஆனால் அது உன்னால் முடியாது. அந்த அள விற்கு இன்ஸ்பெக்டர் ஆதாரங்களை வைத்திருக்கிறார்.

பிளிமிங் சிரித்தான்.

''இதோ பார் செய்வது நான். உன் சம்மதம் மட்டும் தான் தேவை.''

''சரி. எப்படி?''

''உன் தந்தையை கொல்லவேண்டும். குலினன் மேர்டர் பழியை அவர் மீது போடவேண்டும்.''

ஆ! என டொட்சன் பதறிய போதும், பிறகு சம்மதித்தான்.

பிளிமிங் சிறையிலிருந்து வெளியில் வந்ததுமே செய்த முதல் காரியம் டொட்சனின் தந்தையை சந்தித்து அவருடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டதுதான்.

டொட்சனின் தந்தை ஒரு குடிகார மொந்தை. ஒரு விஸ்கி போத்தலுக்காக இந்த உலகையே தாரை வார்த்துக் கொடுக்கக்கூடிய வள்ளல்.

டொட்சன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்கு முதல் நாள்—

போதையில் த டு மா றிக் கொண்டிருந்த டொட்சனின் தந்தையை அட்லண்டா ரெஸ்டோரண்டின் பின்பக்கமாகக் பிளிமிங் கூட்டிச் சென்றான். மயக்கத்திலிருந்த அவரை மதிற் சுவரில் சாய்த்து வைத்து, நெற்றியில் துப்பாக்கியை அழுத்தி விசையை இழுத்து விட்டான்.

டுமீல்!

துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட குண்டு தலையை ஊடுருவிக் கொண்டு மறுபுறமாக 'சளா'ரென வெளி யேறி சுவரில் இரத்தத்தை விசிறியடித்தது. சடலம் கீழே விழுந்ததும் பாக்கெட்டில் 'தற்கொலை' கடிதத்தை வைத்துவிட்டு கொலைகாரன் பறந்துவிட்டான்.

***

1899ஆம் ஆண்டில் மொண்டானோ நகரில் இக் கொலைச் சம்பவம் நடைபெற்றது. கொலைகாரர்களான டொட்சனும், பிளிமிங்கும் கைது செய்யப்பட்டார்கள். மின்சாரக் கதிரைகள் அவர்கள் உயிரைக் குடித்தன.





தமிழ்த் திரையுலக நடிகைகளில் அம்சமானவர் 'ரம்ய' நடிகை. தன்பெயரோடு தந்தை பெயரையும் இணைத்துக் கொண்டு களமிறங்கினார்.

வழக்கம் போலவே அறிமுக படம் எடுபடாததனால் தெலுங்கு தேசம் போய் கவர்ச்சியாக நடித்தார்.

ஆளும் அழகானவர் தாராளமாகவும் நடிக்கத் தயங்காதவர் பிறகென்ன கேட்கவும் வேண்டுமா? அம்மணி காட்டில் அடைமழை. தெலுங்கு ரசிகர்களின் புண்ணியத்தினால் காசு கொட்டோ கொட்டென்று கொட்டியது.

என்னதான் அக்கம் பக்கத்து வீட்டினர் விருந்து வைத்தாலும் சொந்த வீட்டுச் சாப்பாடு தின்பது போல் வருமா? நடிகைக்கு தாய் மொழியில் நடிக்கும் ஆசை துளிர் விட்டது. ஆனால் தமிழ்த் தயாரிப்பாளர்கள் தான் மனம் வைக்கவில்லை.

''தமிழ் சினிமாவே வா!,செல்லாதே வா,எந்நாளும் உன் அடிமை நான் எனை நீதான் பிரிந்தாலும் நினைவாலே அழைப்பேனே என்று தமிழ் சினிமாவில் நடிக்கும் ஆசையைத் தன் மனதிலேயே வளர்த்து வந்தார் நடிகை.

# 'ரம்ய' நடிகையின் மறுபக்கம்

இந்நேரத்தில் தான் 'அம்மன்' மூலம் தமிழ் ரசிகர்களை அம்மனாகவே சந்தித்தார்.

அம்மனுக்கு தமிழ் பேசும் ரசிகர்கள் அதுவும் தாய்க்குலங்களின் ஆதரவு கிட்டத் தொடங்கியது. தொடர்ந்து சூப்பர் ஸ்டாரின் 'படையப்பா' படத்தில் அம்மணி 'நீலாம்பரி' வேடத்தில் நடித்தார். ஆணவம் மிக்க நீலாம்பரியாக 'ரம்ய' நடிகை நடித்து அசத்தியிருந்தார்.

தொடர்ந்து பலபக்திப் படங்கள் கிராபிக்ஸை நம்பி வெளிவந்தன. இதில் பெரும் பாலானவற்றில் நடிகை தான் 'அம்மன்' வேடமேற்றிருந்தார். இவற்றில் நாகேஸ்வரி, நாகத்தம்மன், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி குறிப்பிடத்தக்கவை.

கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு மேலாக திரையுலகில் நடித்துக் கொண்டிருப்பவர் என்ற பெருமை அம்மணிக்குண்டு.

இவரின் இளமையைக் கண்டு தற்போதைய கதாநாயகியரே வாயில் விரலை வைக்கின்றனராம்.

இடையிடையே அம்மணி கவர்ச்சியாக நடித்த தெலுங்குப் படங்களில் தமிழ் பேசி ரசிகர்களை மயக்கவும் தவறவில்லை.

அம்மணியின் கடைக் கண்பார்வை நம்மீது படாதா என்று ஏராளமானவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அம்மணி மனதைக் கொள்ளை கொண்டிருப்பவர், இங்கிலீஷ் பொண்டாட்டி தேவை என்று கேட்ட ஸ்ரீயான காந்த நடிகர் என்று திரையுலக வட்டாரம் கூறுகின்றது.

ஆனால் அம்மணி தரப்பில் இருந்து எந்தப் பதிலுமில்லை. மறுப்புமில்லை.

# மனிஷாவின் அவுஸ்திரேலிய அத்தான்



நிறையைக் குறைத்து ஸ்லிம் ஆகக் காணப்படுகின்றார் மும்பை கன்னி மனிஷா கொய்ராலா. சமீபத்தில் ஆளவந்தானில் முக்கிய கவர்ச்சி பாத்திரமொன்றில் நடிப்பதற்காக சென்னை வந்திருந்தார். அவரைக்கண்ட போது தான் மனிஷா விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்று ஒரு பத்திரிகையில் படித்த செய்தி நினைவுக்கு வந்தது.

அவரிடம் கேட்டபோது, நானும் படித்தேன். அதில் உண்மையில்லை. நான் இன்னும் திருமணம் எனும் உறவு முறைக்குத் தயாராக வில்லை. கடந்த இரண்டு வருடங்களாகவே என் படத்தெரிவுகளில் அசட்டை காட்டிவிட்டேன். ஆனால் இனிமேல் ஊக்கம் காட்டி புதிய சாதனைகளைச் செய்ய வேண்டும்.

ஆனால் என் வாழ்க்கையில் ஒரு 'அவர்' உண்டு. நேபாள அரசின் அவுஸ்திரேலிய தூதுவர். ஒரு ஆண்டுக்கு முன்னர் தான் அவரை (க்ரிஸ்பின்) நேபாளத்தில் சந்தித்தேன். பழகினோம் காதலர்களானோம். அவ்வளவே! திருமணத்துக்கு இப்போது இடமில்லை என்கிறார்.

# நான் தேவலோகக் கன்...

சினிமாவில் அழகும் திறமையும் கொண்டவர்களுக்கு வரவேற்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இவையிரண்டையும் மிஞ்சிய அதிர்ஷ்டம் என்ற ஒன்று இருந்தால் தான் ஒருவரால் இங்கு நிலைத்து நிற்கமுடியும்.

இந்த வகையில் குறிப்பிடத்தக்கவர் ரம்பா. விஜயலட்சுமியாக இருந்தவரை தேவலோக ஆடலரசிகளுள் ஒருவரான ரம்பையின் பெயரை வைத்து ரம்பாவாக தமிழ்த்திரையுலகிற்குக் கொண்டு வந்தனர்.

பிரபுவுடன் 'உழவன்' படத்தில் நடித்தார். படம் எடுபடவில்லை. கவர்ச்சிக் கன்னி ரம்பாவை சேலையால் போர்த்துக் கொண்டு நடிக்க வைத்தார்கள் எடுபடவில்லை.

ஆனால் ரம்பாவின் பெயர் சொல்ல வைத்தது சுந்தர். சியின் இயக்கத்தில் கார்த்திக் ஜோடியாக நடித்த 'உள்ளத்தை அள்ளித் தா' படமே.

இப்படத்தின் மூலம் ரசிகர்களின் உள்ளத்தையும் அள்ளிக் கொண்டு கொடுக்க மறுத்து விட்டார். தொடர்ந்து பல படங்களில் நடித்தார். ரஜினிகாந்துடன் ஜோடி சேர்ந்து நடித்து விட்டவர். கூடவே தெலுங்கு, இந்தி என்று தனது கவனத்தைத் திசை திருப்பினார். ரம்பா பரபரப்பாக நடித்துக் கொண்டிருக்கும் போது புயலெனப்புகுந்தார் சிம்ரன். ரம்பா ரசிகர்களில் சிலர் சிம்ரனுக்கு கொடிபிடிக்க ஆரம்பித்தனர்.

இதனாலோ என்னவோ சிறிய இடைவேளை ரம்பாவை காணவில்லை என்று ரசிகர்கள் தேடிக் கொண்டிருக்க, 'ரம்பா அண்ணனின் பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்' 'ரம்பா நாய் வளர்க்கிறார்' 'ரம்பா ரியல் எஸ்டேட் பிஸினஸ் செய்கிறார்' என பத்திரிகைகள் ஒப்புக்குச் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன. ஆனால்

இப்போது மீண்டும் பரபரப்பாகத் தொடங்கியிருக்... ரம்பா. ஓரங்கட்டியவர்களைப் பார்த்து வெ... சிரிப்புடன் வேகமாக நடித்து வருகி...

இந்தக் கவர்ச்சிப்புயலை இடைநிறுத்தி எம்... பேசவைத்த ...

**கே: புதிய படங்களில் ... ஆரம்பித்திருக்கிறீர்கள். இந்த வாய்ப்புக்கள் ... என்று நினைத்தீ...**

ப: நிச்சயமாக திறமையுள்ளவர்களை... வாய்ப்புக்கள் ...

**கே: சிறிய இடைவேளை ஒன்று ஏற்பட்டுவி...**

ப: ஆமாம். இந்திப் படங்களில் நடிக்கும் வ... கிடைத்தது. புதிய ஒரு மாற்றத்திற்காக நடித்... ஆனால் நான் ஒன்று நினைக்க நடந்தது ... ஒன்றாகி விட்டது. தமிழ்த்திரையுலகில் பே... குறுகிய காலத்தில் படத்தை எடுக்கும் பழக்கம் இ... திரையுலகினருக்கு இல்லை. நான் அங்கு ந... கொண்டிருந்ததனால் தமிழில் ஒரு இடைவே... ஏற்பட்டு வி...

**கே: சிம்ரனுக்கும் உங்களுக்குமிடையில் ஏக... கருத்து வேறுபாடுகள்...**

ப: அப்படி ஒன்றுமில்...

**கே: மிகவும் கவர்ச்சியாக நடிப்பதா... குற்றச்சாட்டு உள்...**


ப: இன்றைய நிலையில் யார்தான் அ... நடிக்கவி...

**கே: 'உழவன்' படத்தில் பிரபுவுடன் நடித்தீ... 'அந்தப்படம் எடுபடவில்லை. ஆனால் இப்... மீண்டும் பிரபுவுடன் 'மாம்ஸ்' பட... இணைந்திருக்கிறீ...**

ப: என்னைப் பொறுத்தவரைக்கும் பிரபு ஒரு ... நடிகர். மற்றப்படி எதுவும் சொ... தெரியவில்லை. படத்தின் ... தோல்வி ரசிகர்க... கையிலேயே தங்கியுள்...

**கே: 'ஆன... படத்தின் ஆ... படப்பிடிப்பின் ... ஒற்றுமையாகிய ந... தேவயானியும் நீங்... 'ஆனந்தம்' ... முடிவடையும் தறுவ... மீண்டும் க... வேறுபாடு ... கொண்டீர்கள...**

ப: ந... தேவயா... எப்போ... நண்...



விஜய் — ரம்பா

# திரை மறைவில்



'லவ் மேரேஜ்' படத்தைத் தயாரித்து தானே நடித்து வருகிறார் காதலர். முன்னாள் காதலி நடிகையோ 'சீனு' நாயகரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறாராம். கைமேல் பலனும் கிடைத்திருக்கிறது. 'லவ்லி' படத்தில் நாயகரோடு ஜோடி சேர்ந்திருக்கிறார்.

**

'பிஷ்' நடிகை கவர்ச்சியாக நடிப்பதை ரசிகர்கள் விரும்புவதில்லையாம். அவர் கவர்ச்சியாக நடித்த படங்கள் வெற்றி பெறுவதில்லை. ஆனால் பிஷ்ஷுக்கோ மாடர்ன் டிரஸ் போட்டு நடிப்பதில் தான் ஆர்வம் அதிகம். இதனால் தான் 'டபிள்ஸ்', 'ரிஷி' போன்ற படங்களில் நடித்தார். அப்படங்கள் இரண்டுமே வெற்றி பெறவில்லை. இப்போது என்னடாவென்றால் மாடர்ன் டிரஸ் போட்டு நடிக்கும் வேடங்கள் என்றாலே காத தூரம் ஓடுகிறாராம்.

'ஸ்நேக' நடிகை விரும்பிய படத்தில் தான் நடிக்க ஆரம்பித்தார். ஆனால் 'என்னவளே'க்கு அதிக ஒத்துழைப்புக் கொடுத்துப் படமும் வெளி வந்து விட்டது. நடிகைக்கு 'தினகரன்' — சிறந்த நடிகைக்கான புதுமுக விருதும் கிடைத்தது.

ஆனால் 'என்னவளே' பெயர் சொல்லும்படியாக இல்லை என்று நடிகையின் அண்ணியான நடன மாஸ்டர் ஃபீல் பண்ணுவதனால் விரும்பிய படத்துக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து நடித்து வருகிறார் நடிகை. பல அசத்தல் காட்சிகளில் கூட மறுப்புக் காட்டாது நடித்திருக்கிறாராம்.

**

நமது திருமணம் தான் குடும்ப பிரச்சினைகளினால் தள்ளிப் போகிறது. காதலித்தாவது மனசைத் தேற்றிக் கொள்வோம் என்று காதலில் தீவிரமாக இறங்கி விட்டார் 'ரோஸ்' நடிகை.

அண்மையில் தனது மனம் கவர்ந்த காதலரான டைரக்டருக்கு தான் ஏன் அவரை விரும்புகிறேன் என்ற காரணத்தை நூறுவரிகளில் கடிதமாகவே எழுதி அனுப்பி வைத்து விட்டாராம்.

**

கமல் — ஜெயசுதா நடித்து வெளி வந்த படம் ராசலீலா. கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்திய படம். மீண்டும் அதே பெயரில் படமாகிறது.

நடிகர்நடிகைகளில் மட்டும் மாற்றம் — இளமையும் இனிமையும் நிறைந்த கிளுகிளுப்பான காதல் கதை இது.

பிருக்கிறார்
து வெற்றிச்
ருகின்றார்.
ரிஎம்முடன்
வத்த போது,
ளில் நடிக்க
க்கள் வரும்
ளத்தீர்களா?
களைத் தேடி
க்கள் வரும்.
டுவிட்டதே.
நம் வாய்ப்பு
நடித்தேன்.
ந்தது வேறு
ல் போன்று
கம் இந்தித்
கு நடித்துக்
டைவேளை
டு விட்டது.
ல் ஏகப்பட்ட
டுகளாமே?
றுமில்லை.
ப்பதாக ஒரு
ம் உள்ளதே?
நான் அப்படி
க்கவில்லை.
நடித்தீர்கள்.
ல் இப்போது
ஸ்' படத்தில்
க்கிறீர்களே?
பு ஒரு நல்ல
சொல்லத்
தின் வெற்றி
ரசிகர்களின்
ங்கியுள்ளது.
'ஆனந்தம்'
தின் ஆரம்ப
பின் போது
கிய நடிகை
ம் நீங்களும்
ந்தம்' படம்
தறுவாயில்
டும் கருத்து
பாடு காட்டி
மோதிக்
ளர்களாமே?
ப: நானும்
வயானியும்
எப்போதுமே
நண்பிகள்.
கே:
ச்சியில்
தாராளமயக்



கொள்கையை எவ்வளவுதான் கடைப்பிடித்து நடந்தாலும் கவர்ச்சிக்கு வயதெல்லை உண்டு. குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் தாக்குப் பிடிக்க முடியாதல்லவா?

ப: அப்படித் தான் எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் ரேகா (இந்தி) மீனா, 'ரம்யா' போன்ற சில மச்சக் கன்னிகளுக்கு (அதிர்ஷ்டக்காரர்) எப்போதுமே நின்று பிடிக்க முடியும். நானும் அந்த வகையைச் சேர்ந்தவள் என்றுதான் நினைக்கிறேன்.

கே: 'தென்றலைத் தூது விட்டு' என்ற படத்தில் நடிக்கிறீர்கள் யார் ஹீரோ?

ப: முரளி.

கே: 'ஆனந்தம்' படத்திலும் முரளி தான் உங்களுக்கு ஜோடியாக நடிக்கிறார் இல்லையா?

ப: ஆமாம்.

கே: வேறுபடங்களில் ஒப்பந்தமாகியுள்ளீர்களா?

ப: ஆம் 'அழகான நாட்கள்', 'மாம்ஸ்'.

கே: சரி திருமணம் எப்போது?

ப: இப்போது தான் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறேன். நிறைய படங்களில் நடிக்க வேண்டும். திருமணத்தைப்பற்றி நினைத்தும் பார்க்க முடியாது.

கே: ரியல் எஸ்டேட் பிஸினஸில் இறங்கி விட்டீர்களாமே? ஏன் நடிப்பை நம்ப வில்லையா?

ப: ரியல் எஸ்டேட் பிஸினஸை எனது சகோதரர் செய்கிறார். நடிப்பே எனது முழுநேர வேலை.

— ஷாம்

## இஷா ஒரே ஜாலி




விஜயகாந்த் – இஷா
படம்: 'நரசிம்மா'

எனக்கு 'நரசிம்மா' முதல்படம் மாதிரித்தான். ஏன்னா நான் ஏற்கனவே நடித்த 'என் சுவாசக் காற்றே' 'காதல் கவிதை' இரண்டிலுமே சரியான இடம் கிடைக்கவில்லை.

விஜயகாந்த் ஸாரோடு நடிப்பதை என்னாலேயே நினைத்துப்பார்க்க முடியவில்லை. முதல் நாள் ஷூட்டிங் போய்வந்ததும் ஒரே ஜாலிமூடில் இருந்தேன்'' என்று கூறுகிறார் இஷா கோபிகர்.

## சம்சாரியாகும் பிரம்மச்சாரி

திருமணம் செய்து கொள்ளக் கூடாது. திருமணம் செய்து கொண்டால் சந்தோஷம் பறிபோய் விடும். சுதந்திரமாக நம்மால் எதையும் செய்ய முடியாது என்பதே 'அசத்தல்' படத்தில் சத்யராஜ், வடிவேலு, ரமேஷ் கண்ணா ஆகிய மூவரதும் கொள்கை. ஆனால் இந்த பிரம்மச் சாரிகளது கொள்கையை உடைத்து இவர்களை சம்சாரிகளாக மாற்றுகிறதாம் ஒரு குழந்தை. நம்ப முடியாத அளவுக்கு எட்டு மாதக் குழந்தையான ஷபியை வைத்து கதையை நகர்த்தியுள்ளார் இயக்குனர் பி.வாசு. நாலுந் தெரிந்தவர் என்பதனால் நாற்பதே நாளில் படத்தை முடித்து விட எண்ணியுள்ளாராம்.



## இனி இவர்கள்..

*''நரசிம்மா'' படத்தை இயக்கும் ப.திருப்பதிசாமி, அடுத்து விஜய்யை வைத்து கிராமியப்படமொன்றை இயக்கப் போகின்றார். படத்திற்கு 'வேலன்' என்று பெயரிட்டுள்ளார்கள்.

*'லவ்லி'யில் விவேக் கார்த்திக்குடன் இணைந்து நடிக்கிறார்.

*சின்னு மூவிஸினரின் அடுத்த படம் 'லைப் ஈஸ் பியூட்டிஃபுல், கதாநாயகனாக மாதவன் நடிக்கிறார்.

*விஜயகாந்தின் அடுத்த படம் 'தவசி'. இதில் தந்தை மகன் – என இரட்டை வேடங்களில் நடிக்கிறார்.

ராஜஸ்ரீ 'சேது' பாலாவைச் சந்தித்து தனது தங்கைக்கு வாய்ப்புக் கேட்டிருக்கிறார். பார்க்கலாம் என்று கூறிய பாலா ராஜஸ்ரீக்கே வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். 'நந்தா' படத்தில் சூர்யாவுக்கு அம்மாவாக மகிழ்ச்சியுடன் நடித்து வருகிறார் ராஜஸ்ரீ.



## ஒத்துழைப்பு திலகம் ரவீனா

சென்ற ஆண்டு தேசிய அளவில் சிறந்த நடிகை விருது ரவீனா டன்டனுக்கு வழங்கப்பட்டது. இது தவறானது. இந்த விருதைப் பெறுவதற்கு ரவீனா தகுதியானவர் அல்ல என்று சிலர் எதிர்ப்புக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். அதை ரவீனா கண்டு கொள்வதேயில்லையாம்.

விருது கிடைத்த ஊக்கத்தில் நடிப்பில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறாராம். 'ஆளவந்தான்' இல் அம்மணி காட்டிய அக்கறையைக் கண்டு கமல் உட்பட யூனிட்டே வியந்து பேசியதாம்.

இந்திப் படங்களுக்குக் கொடுத்த கால்ஷீட்டுகளை எதுவித மறுப்புமில்லாது கொடுத்து நடித்தாராம். சக தமிழ் நடிகர், நடிகைகள், தொழில் நுட்பக் கலைஞர்களிடம் கேட்டுக் கேட்டு தமிழ் கற்றுக் கொண்டாராம். அதன் பலனாக ''சாப்பிட்டாச்சா?'' ''சௌக்கியமா?'', ''தண்ணி வேணும்'' போன்ற சில சொற்களைப் பேசி அசத்தியிருக்கிறார்.



ரவீனா

## பாப்பா விட்ட டூப்பு!

தெலுங்கு தேசத்தில் முன்னணியில் இருந்து வருகிறார் நடிகை சௌந்தர்யா. ஆனாலும் அதில் அவர் திருப்தியடையவில்லை. இடைக்கிடையே சென்னைக்கு வந்து நேரடித் தமிழ்ப்படங்களில் நடிப்பதற்கு முயற்சி செய்து வருகின்றார். ஆனால் கேட்பவர்களுக்கு, தான் சிநேகிதிகளைச் சந்திக்கவே வந்து போவதாக டூப் விட்டிருக்கிறார்.



## சிலருக்குப் பழசு சிலருக்குப் புதுசு காதலே ஒரு தினுசு

டி.ராஜேந்தர் 'ஒரு தலை ராகம்', 'தங்கைக் கோர் கீதம்', 'மைதிலி என்னைக் காதலி' போன்ற மனதில் நிற்கும் வெற்றிப்படங்களைத் தந்தவர். இப்போது நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 'சொன்னால் தான் காதலா' படத்தை எடுத்து வருகிறார். டி.ராஜேந்தரின் படங்கள் இன்றைய நவீன தலைமுறைக்கு ஏற்றவாறு இல்லை. ஏழெட்டு வருஷங்கள் பின்நோக்கி இருக்கிறது. என்ற குற்றச் சாட்டு உண்டு. இதனை அவரிடம் கேட்ட போது, ''சிலருக்குப் பழசு சிலருக்குப் புதுசு. காதலே ஒரு தினுசு. ரோமியோ ஜூலியட் காதல் 35 வயதுடையவருக்குப் பழசு. ஆனால் அதே கதை 16 வயதுப்பையனுக்குப் புதுசு. என்று சுவாரஸ்யமாகப் பதில் கூறுகிறார்




# வாய்ச் சொல்லில் வீரரடி

''குட்மோனிங் மிஸ்டர் அருண்''

''குட்மோனிங் மிஸ்டர் அருண்''

படுக்கையில் புரண்டபடி வலது பக்கம் திரும்பினான். கம்பியூட்டர் அவனை அழைத்தது. றிமோட்டை கையில் எடுத்து ஓகே பண்ணினான்.

"2098ஆம் ஆண்டு. மே மாதம் 26ஆம் திகதி. காலை 6 மணி." அன்றைய அவனது பணிகள், சந்திக்கவேண்டிய மனிதர்கள், கடைப்பிடிக்கவேண்டிய நேர ஒழுங்குகள் என்பவற்றை கம்பியூட்டர் பட்டியல் இட்டுக்கொண்டு வந்தது.

''காலை உணவு — 8 ஏ.எம் — எம் 420 ஹொட்டேல்''

''மதிய உணவு — 12 பி.எம் — எல் 400 ஹொட்டேல்''

''இரவு உணவு — 7 பி.எம் — என் 430 ஹொட்டேல்''

இறுதியாக இன்று நண்பன் ராகுலனின் பிறந்த தினம் என்பதை கம்பியூட்டர் நினைவு படுத்தியது. எழுந்து உட்கார்ந்தான் அருண். உடனடியாக நியூயோர்க்கில் இருக்கும் ராகுலனின் ஈமெயில் விலாசத்தை செலக்ட் பண்ணி, தொடர்புக்காக விண்ணப்பித்தான். பதினைந்து நிமிடம் காத்து இருக்கும்படி அறிவித்தல் வந்தது. அந்த இடைவெளியில் தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு மீண்டும் கம்பியூட்டர் முன்வந்து உட்கார்ந்தான்.

கம்பியூட்டர் திரையில் விநாயகர், முருகன், சிவன் கடவுளை வரவழைத்து தனது காலை வணக்கத்தை நிறைவு செய்தபோது நியூயோர்க் தொடர்பு கிடைத்திருந்தது.

ஸ்கானரை 'ஒன்' செய்து கமெராவுக்கு தனது முகத்தைக் காட்டிக் கொண்டு அவனோடு பேசத் தொடங்கினான். திரையில் சிரித்த முகத்தோடு ராகுலன். தமிழ் மொழியை அழிவிலிருந்து காப்பாற்றியாக வேண்டும். அதனால் தமிழிலே தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டான். அவன் நியூயோர்க்கிலே வேலை செய்தாலும் சனி ஞாயிறு தினங்களில் கொழும்புக்குதாய் தகப்பனிடம் வந்து போவான்.

''டேய். மச்சான் உலகம் எப்படி போகுது? ஏதாவது புதினம்?''

''ஓம் மச்சான் நாளைக்கு செவ்வாய்க்கும், பூமிக்குமிடையிலை முதலாவது கிரிக்கட் மச் நடக்கப் போகுது. நேற்றே செவ்வாயிலை இருந்து ஒரு ரீம் வந்து இறங்கிவிட்டுது.''



''அது சரி. உன்ரை காதல் விவகாரம் எல்லாம் எப்படி'' கேட்டான் அருண்.

''அதை ஏன் கேட்கிறாய். நான் லவ் பண்ணின சாந்தி போன கிழமைதான் தன்ரை சினே கிதி குமுதாவை கலியாணம் முடிச்சிட்டாள். தன்னாலை ஒரு ஆணுடன் கூட வாழ முடியாதாம். அதுசரி உன்ரை பாடு எப்படி மச்சான்'' அவன் கேட்டான்.

''என்னை எல்லாம் யார் மச்சான்? காதலிக்கப் போயினம்? நான் ஒரு விசரன். சரி அதைவிடு நாங்கள் சனிக்கிழமை சந்திப்பம்'' ''பாய்'' தொடர்பை துண்டித்துக் கொண்டான்.

காலை ஒன்பது மணிக்கு அவனுடைய இருபதாவது மாடி பிளாட்டில் இருந்து கேபிள் கார் வழியாக அலுவலகத்துக்குப் போனான். அப்பப்போ ஒரு சில கார்கள் தரையில் போய்க் கொண்டு இருந்தன. சில மனிதர்களும் நடமாடிக் கொண்டு இருந்தார்கள்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் அலுவலகத்தில் இருந்தான். அவன் செய்ய வேண்டிய பணிகள் கம்பியூட்டரில் பட்டியல் இடப்பட்டு இருந்தது. நாளைய 'சலறி' டேற்றை மனதில் கொண்டு 'பேசீற்றை' செலக்ட் பண்ணி ஒவ்வொரு டைய நெட்சலறியை ஓடிற் பண்ணும்படி கம்பியூட்டருக்கு கொமாண்ட் கொடுத்தான்.

தனது நம்பரில் சலறியை பார்த்தான். அந்த மாதம் ஒன்பது லட்சத்து அறுபதாயிரம் என்று காட்டியது. அப்போது அவனுடைய அப்பா தனது சம்பளம் முன்பெல்லாம் ''ஐம்பதாயிரம் ரூபாய் தான்'' என்று சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. சிரிப்பாய் இருந்தது. இங்கு எவ்வளவு பணவீக்கம். ஒரு அமெரிக்க டொலருக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டி இருந்தது.

அந்த வேலை முடிந்த போது நண்பகல் பன்னிரண்டு மணி. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் L 480 ஹொட்டேலில் லஞ்ச் எடுத்துக் கொண்டான். மீண்டும் அலுவலகத்துக்கு வந்தபோது மாலினி அவனை எதிர்பார்த்து இருந்தாள்.

**பரமேஸ்வரன் — இணுவையூர்**

மாலினியின் இருதயம் முற்றாக செயல் இழந்த போது அமெரிக்காவில் உள்ள ஒரு வைத்தியர் உடனடியாக கம்பியூட்டரினால் வடிவமைக்கப்பட்ட ஒரு இருதயத்தை பொருத்திவிட்டார். அவள் முன்னை விட இப்போ திடகாத்திரமாக இருக்கின்றாள். தன்னுடைய காப்புறுதிப் பணமான பத்து மில்லியன் ரூபாவுக்கான ஒரு கிரடிட் காட்டை பெற்றுக் கொண்டாள். அப்பா அடிக்கடி சொல்லுவார் முன்பெல்லாம் ''எயிட்ஸ்'' என்று ஒரு நோய் இருந்ததாம்.... லட்சக் கணக்கானவர்கள் இறந்தும் போச்சினமாம். இப்போ இருக்கிற வைத்திய வசதியெல்லாம் அப்போது இல்லை தான். என்ன செய்ய முடியும்? பல்கலைக் கழகத்தில் உள்ள மாணவர்கள் எல்லாம் கணிதம், மருத்துவம், தொழில் நுட்பம் சம்பந்தமான அறிவைப் பெருக்கும் தகவல்கள் அடங்கிய ஒரு ''கம்பியூட்டர் ஹார்ட் டிஸ்க்கை'' வடிவமைத்து இதைத் தமது மூளை நரம்பு மண்டலத்தில் அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தி தமது எண்ண, ஞாபக சக்தியை அதிகரித்துக் கொண்டு திரிகிறார்களாம். இதெல்லாம் எப்போ இங்கே வரப் போகுதோ? மீண்டும் வேலையை ஆரம்பித்தான்.

அலுவலகம் முடிந்து வீடு திரும்பும் போது கிரிதரனை சந்தித்தான். ஊரிலே இருக்கும் தனது காதலியை நினைத்து, உருகி, மெலிந்து இருந்தான். டென்மார்க்கில் இருக்கும் தனது சகோதரனை வாரத்தில் ஒரு நாளைக்கு போய் சந்திக்கின்றான். ஆனால் பலமாதங்களாகி ஊருக்கு போக முடியவில்லை என்று வருத்தத்துடன் கூறினான். அவனோடு சேர்ந்து ரீ குடித்து இரவு உணவையும் முடித்துக் கொண்டு வந்தபோது இரவு எட்டு மணி.

முன் ஹோலில் அப்பா, அஜித்குமார் சிம்ரன் நடித்த ஒரு பழைய டச்சு காலப் படத்தை பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தார். தனது அறைக்கு வந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டான் அருண்.

பத்திரிகை படிக்க வேண்டும். பத்திரிகைத் துறையில் அவனுக்கு அதிக ஈடுபாடு இருந்தது. மீண்டும் எழுந்து கம்பியூட்டர் முன் உட்கார்ந்தான். முதலில் இன்ரநெட் வழியாக சுடர் ஒளி பத்திரிகையின் குறியீட்டு இலக்கத்தை கொடுத்தான். திரையில் பத்திரிகை. அதில் ஆர்வத்துடன் ஐந்தாவது பக்கத்தை புரட்டினான். அதில் அவன் ஈமெயிலில் அனுப்பிய சிறுகதை இடம் பெற்று இருந்தது. சந்தோஷமாக இருந்தது. அப்பாவுக்கும் காட்ட வேண்டும். அந்தப் பக்கத்தை மட்டும் செலக்ட் பண்ணி பிரிண்டுக்கு அனுப்பினான். மூன்றாம் பக்கத்தில் ''''செவ்வாய் கிரகத்தில் இருக்கும் சரத்துக்களும், சட்டங்களும் பூமிக்கு பொருந்தாது'' அமெரிக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பு'' நடுப்பக்கத்தை கிளிக் பண்ணினான். ''பிரபல கவர்ச்சி நடிகை சினோ தனது இருபத்தைந்தாவது கணவனை சென்னையில் விவாகரத்து செய்து கொண்டாள்'' ஐயோ போதுமடா சாமி.

அடுத்து இந்தியாவில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றை தெரிவு செய்தான். அதன் முதல் பக்கத்தில் ''ரியூ 480 இனமக்கள் தங்களுக்கு சகல துறைகளிலும் இட ஒதுக்கீடு வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார்கள். ரியூ 480 என்ற அடையாள எண் சோதனைக் குழாய் மூலம் பிறந்தவர்களைக் குறிக்கிறது. இவர்கள் இங்குள்ள மொத்த சனத் தொகையில் 16 சதவீதம் ஆகும்.'' கீழே ''செயற்கை ஓசோன் படலம் பூர்த்தியாகும் நிலையில் சுமார் முன்னூறு கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகின்றது''

அடுத்த பக்கத்தில் ''மத்திய கிழக்கில் ஈரான், ஈராக், பலஸ்தீனம், இஸ்ரேல் ஆகிய நாடுகளிடையே வர்த்தக பொருளாதார கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்து இடப்பட்டுள்ளது'' அப்பா அடிக்கடி சொல்லுவார் இவையெல்லாம் ஒருகாலத்தில் ஒன்றோடு ஒன்று சண்டை போட்டுக் கொண்ட நாடுகள் தான் என்று.

அருண் பத்திரிகைகளை படித்துக் கொண்டு இருந்த போது முன் ஹோலில் இருந்து ரீ.வி செய்திகள் ஆரம்பிக்கும் சத்தம் கேட்டது. அவனுடைய அப்பா இந்த நவீன காலத்திலும் ரீ.வியில் இரவு ஒன்பது மணிக்கு செய்திகள் பாராமல் உறங்கவேமாட்டார்.

''செய்திகள்''

''இலங்கை இனப்பிரச்சினைக்கு வெகுவிரைவிலேயே அரசியல் தீர்வு ஒன்று காணப்படும்' என்று அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.''

''கடவுளே!''

தனது காதை இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டு, அப்படியே போய்க் கட்டிலில் சரிந்தான் அருண்.

**சுடர் ஒளி சிறுகதை**

# ராசி பலன்

**20.05.2001 முதல் 26.05.2001 வரை**

**பொ.சந்திரன்.**

**மேடம் : அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

சந்திரன் இராசியைக் கடந்து செல்கிறார். இராசிநாதன் கேதுவோடு தோசம் அடைகிறார். மத்திமபலன். பணப் புழக்கம் இருக்கும். தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். அயலார் அன்பாய் இருப்பர். பிரயாண வாய்ப்பு, திருமணப்பலன் உண்டு. உடல் ஆரோக்கியம் பாதிப்படையலாம். தொழில் செய்யும் இடத்தில் அமைதிக்குறைவு ஏற்படலாம்.

**இடபம் : கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

இராசிநாதன் இலாபத் தானத்தில் உச்சமடைந்து இருப்பது சிறப்பு. இராசியில் சூரியன், புதன், குரு, சனி ஆகியோர் இருப்பதால் அமைதிக் குறைவு ஏற்படும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் மத்திமமாக இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் அன்பாய் இருப்பர். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் விருத்தி, பதவி உயர்வு உண்டு.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இராசிநாதன் செலவுத் தானத்தில். இராசியிலோ ராகு. பக்க உதவிகள் கிடைக்கும். பணத் தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதர உதவி இருக்கும். வீடு. வாகனங்களால் செலவு ஏற்படும். உறவினரின் ஆதரவு இருக்கும். உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் பிரகாசமான எதிர்காலம் உண்டு.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

சூரியன், சனி, செவ்வாய் ஆகிய கிரகங்களின் பார்வை இராசிக்குக் கிடைப்பது மத்திமபலன். பணம் இருக்கும் கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் அன்பாய் இருப்பர். பிரயாண பலன் உண்டு. தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் சில பின்னடைவு வரலாம். வியாபாரத்தில் நட்டம் ஏற்படலாம். இடமாற்றம் வரலாம்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1.**

இராசிநாதன் தசமகேந்திரமான பத்தாம் வீட்டில் மூன்று கிரகங்களோடு சேர்ந்து இருப்பது விசேஷம். சுக்கிர பார்வையும் இராசிக்குக் கிடைப்பது யோகம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. உறவினர் நட்பாய் இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறை பிரகாசமாக இருக்கும். பதவி உயர்வு இருக்கும்.

**கன்னி : உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.**

இராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் இருப்பதும் குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்களின் பார்வை இராசிக்குக் கிடைப்பதும் விசேஷம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் அன்பாய் இருப்பர். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் இருந்த போட்டி விலகும். தொழில் முன்னேற்றம் உண்டு.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**

இராசிநாதன் உச்சம் பெற்று இராசியை நோக்குவது நல்லது. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். பிரயாண வாய்ப்பு உருவாகும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினரால் உதவி இருக்காது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் சில தடை ஏற்படலாம். பொறுமையாக இருந்தால் வெல்லலாம்.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை.**

இராசிநாதன் கேதுவோடு தோசம் அடைவது நல்லதல்ல. நான்கு கிரகங்கள் இராசியை நோக்குவது நல்லது. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறை பிரகாசமாக இருக்கும். பதவி உயர்வு உண்டு.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம்1.**

சுக்கிரனைத் தவிர மற்ற எல்லாக் கிரகங்களும் இராசியோடும் இராசிநாதனோடும் தொடர்புபடுவது நல்லது. கல்வியில் ஆர்வம் இருக்கும். பணம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில்துறையில் முன்னர் இருந்த குறை சரிசெய்யப்படும். பதவி உயர்வு, இடமாற்றம் இருக்கும்.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.**

இராசிக்கு குருவின் பார்வையும் இராசிநாதனோடு குரு இணைவதும் நன்மையே. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உற்றார், உறவினர் சிலசமயம் வேண்டா வெறுப்பாக இருக்கக் கூடும். உடல் நலம் நன்று. தொழில் விருத்தியுண்டு, அமைதியுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**

இராசிநாதன் சுபஸ்தானத்தில் சூரியன், புதன், குருவோடு இருந்து இராசியை பத்தாம் பார்வையால் நோக்குவது சிறப்பான அம்சம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் அன்பாய் இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் சில பின்னடைவுகள் இருக்கும்.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசியில் சுக்கிரன் பூரணபலத்துடன் இருப்பது யோகம். மேலும் அதிஷ்டக்காரன் செவ்வாய் பார்ப்பதும் சிறப்பு. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். அயலாரின் ஆதரவு குறையலாம். தொழில் துறையில் சில எதிர்ப்புக்கள் இருக்கும். ஆனால் புதிய தொழில் முயற்சிக்கு பலன் உண்டு.

# பணிப்பாளர் இன்றி பணியாற்றும் வ.கி. மாகாண கல்வி அமைச்சு!

## வீதியில் வைத்துத் தாக்கப்பட்டவர் இன்னும் வேலைக்குத் திரும்பவில்லை

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக கடமை யாற்றும் கல்விப்பணிப்பாளர் இன்னும் வேலைக்குத் திரும்பமுடியாத நிலையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

மார்ச் 28 ஆம் திகதி இரவு காளி கோயில் பூஜை முடிந்து புனித அந்தோனியார் வீதியில் உள்ள தனது உத்தியோகபூர்வ விடுதிக்குச் சென்று கொண்டிருக்கையில் விடுதிக்கு அண்மையில் வைத்து இவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். ''நீதான் கமலநாதனா?'' என்று கேட்டு கட்டையால் ஒருவர் தாக்கியிருக்கிறார்.

முதல் அடி தலையை நோக்கிவந்ததை உணர்ந்த பணிப்பாளர் சற்றுச் சாய்ந்ததனால் தோள்மூட்டில் அடி விழுந்தது. இரண்டாவது அடிக்கு வலது கையைக் கொடுத்து தடுத்திருக்கிறார். இரு விரல்கள் பாதிக்கப்பட்டன.

மூன்றாவது அடி, இடது பக்க முழங்காலுக்குக் கீழே விழுந்தது.

இரண்டு நாள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவிட்டு வீடு திரும்பினார். ஓய்வு எடுக்கும்படி வைத்தியர் ஆலோசனை கூறியிருக்கிறார்.

ஒரு மாத காலத்துக்கும் மேலாக பணிப்பாளர் வேலைக்குச்செல்ல முடியாமல் இருப்பதால் சில அலுவலகப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்து இருப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கின்றது.

தாக்கியவர் தப்பி ஓட முயன்றபோது திருமதி கமலநாதன் கூச்சலிட்டார். அருகில் நின்றசில முஸ்லிம் இளைஞர்கள் தாக்கிய வரைத் துரத்திச் சென்று சிவன் கோயிலுக்கு அருகாமையிலுள்ள பொலிஸ்சாவடியில் வைத்து மடக்கிப்பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

ஒப்படைக்கப்பட்டபோது அந்தநபர், தான் தமிழ்க்கட்சி ஒன்றின் உறுப்பினர் என்று கூறி தனது இயக்க அடையாள அட்டையை காட்டியதாகத் தெரிய வருகின்றது.

இது தொடர்பான அடையாள அணி வகுப்பின் போது திருமதி கமலநாதன் தாக்கியவரை அடையாளம் காட்டினார்.

திருமலை மஜிஸ்ரேட் நீதிபதி ஆயிரம் ரூபா பிணையில் செல்ல சந்தேக நபரை அனுமதித்தார்.

இப்படி ஒரு சம்பவம் நடப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

கஷ்டப்பிரதேசத்தில்(மூதூர் பிரதேசம்) பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் அப்பிரதேசத்தில் பணியாற்றுவதற்காக சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் 20 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவரை வேறு இடத்துக்கு (கஷ்டப் பிரதேசம் அல்லாத இடத்துக்கு) இடமாற்றம் செய்து தரும்படி பணிப்பாளர் கமலநாதனை அந்த தமிழ்க்கட்சியின் உறுப்பினர் தொலைபேசி யிலும், அதே தினம்நேரிலும்கேட்டிருந்தாராம்.

"இது எனது அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல. அதே வேளை கஷ்டப்பிரதேசத்தில் பணியாற்ற வென்று அவர் விரும்பித் தனது கைப்பட கடிதமும் எழுதித் தந்துள்ளார். அதனால் தான் அவருக்கு அந்த நியமனம் கிடைத்தது."

''அது ஒரு புறமிருக்க அவருக்கு இடமாற்றம் கொடுத்தால் ஏனைய 19 பேரும் வரிசையாக வந்து நின்றால் என்ன செய்வது? ஆளுநர் கேட்டால் என்ன செய்வது? செயலாளர் கேட்டால் என்ன செய்வது? என்னால் இந்தக் காரியத்தைச் செய்து தர முடியாது'' என்று கமலநாதன் பதில் அளித்தாராம்.

பிரஸ்தாப பட்டதாரி ஆசிரியை கஷ்டப்பிரதேசத்துக்குச் சென்று கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் சுமார் ஒரு வருடமாக பாடசாலை செல்லவில்லை என்றும் கூறப்படுகிறது.

''குறிப்பிட்ட ஆசிரியை பிரசவகாலத் துக்காகத்தான் இடமாற்றம் கேட்டதாக அறிந்தோம்'' என்று நாம் கேட்டோம்.

''பிரசவ காலத்தில்எவராவது வந்து இடமாற்றம்கேட்டால்அண்மையில்உள்ள பாடசாலைக்குக் குறிப்பிட்டகாலத்திற்கு (6மாதங்கள்)இடமாற்றம்கொடுப்பது வழக்கம். இதற்கு அரசியல்செல்வாக்கு அவசியம் இல்லை. ஆனால்இங்குநிரந்தரமாகஇடமாற்றம் கேட்டதால்தான் நான் மறுத்தேன்'' எனப் பணிப்பாளர்பதிலளித்தார்.

''ஆயுதப்போராட்டத்தைவிடுத்து ஜனநாயக வழிக்குத் திரும்பியவர்கள் அதிகாரிகளை மிரட்டுவது மக்கள் சேவை ஆகாது'' என சம்பவத்தைக் கேள்வியுற்றோர் கூறுகின்றனர்.

—ரஹ்மான்.

## உப்பு வெளியில் நவீன சந்தை ஆஸ்பத்திரி

உப்புவெளி பிரதேச சபை எல்லைக்குள் நவீன பொதுச்சந்தையும் ஆயுள்வேத வைத்தியசாலையும் அமைக்கப்பட உள்ளன.

திருமலை மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் த.புஷ்பராசா வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.பாலசிங்கத்தை அண்மையில் சந்தித்து வடக்கு—கிழக்குமாகாண உள்ளூராட்சிச் சபைகளின் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

அப்பொழுதே இதற்கான நிதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபார்சின் பேரில் ஒதுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## பரிசளிப்பு

ஆறாவதாண்டு அறநெறிப் போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் சமீபத்தில் திருமலை இந்து இளைஞர் பேரவையின் புதிய பணி மனையில் கா.சிவபாலன் தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலைப் பதில் நீதவான் சட்டத்தரணி மு.கோ.செல்வராஜா பிரதம அதிதியாகவும், மாவட்ட கலாசார அலுவலகர் சி.மகேந்திரராஜா சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் இந்த வருடம் 322 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு கல்விச் சேவைக்குழு அனுமதி வழங்கி யுள்ளது.

இவர்களை இந்த மாதம் 15ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்குமாறு நியமனக் கடிதங்களில் கோரப்பட்டிருந்தது.

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் 400 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கலாம் என்று கடந்த ஜனவரி மாதம் கல்விச் சேவைக்குழு வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அங்கீகாரம் வழங்கியது. அதற்கு வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சு 340 பேரைச் சிபார்சு செய்தது. தற்போது 322 பேருக்கே நிரந்தர நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மீதி 18 பேருக்கும் உரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொடுக்க அனுமதி கோரி வருவதாக உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் உறுதி அளித்தார்.

தற்போது நியமனங்கள் ஒதுக்கப் பட்டுள்ளதன் படி ஆரம்பக்கல்வி, விசேட பாடம் என்ற அடிப்படையில்
திருகோணமலைக்கு—56
மட்டக்களப்புக்கு—67
முல்லைத்தீவுக்கு—78
கிளிநொச்சிக்கு—58
வவுனியாவுக்கு—35
மன்னாருக்கு—31
என்று நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன.

— எஸ்.எஸ். ஆர்.

## பரிசோதனைக் குழுவுக்குக் கிடைத்த வரவேற்பு!

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றுக்கு வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் குழு ஒன்று சமீபத்தில் சென்று பரிசோதனை நடத்தியது.

வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனராம்.

அன்று அவர்களுக்கு வரவேற்பு பிரமாதமாக இருந்தது.

விழா எடுக்காத குறையாக பிரஸ்தாப வைத்தியசாலை அந்த மாதிரி அன்று செயற்பட்டதாம்.

இந்த 'அதிரடி'க் குழுவால் அன்று எந்தக் குறையையும் கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

வினாத்தாள் 'அவுட்டான' பரீட்சை போல இந்தப் பரிசோதனையால் என்ன பயன் என்று விசனப்பட்டுக் கொண்டார் அந்த ஊர் கிராமவாசி ஒருவர்.

இந்தக் குழுவினரின் வருகை பற்றி ஏற்கனவே பிரஸ்தாப வைத்திய சாலையின் நிர்வாகத்துக்குத் தெரியவந்திருந்ததே அதன் இரகசியம் ஆகும்.

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 30 அம்சக் கோரிக்கை

அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரின் நலன்கள் அடங்கிய 30 அம்சக் கோரிக்கைகள் உள்ளிட்ட மகஜர் ஒன்றை கடந்த மாதம் 25 ஆம் திகதி வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் க. பரமேஸ்வரனிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கையளித்தது.

இந்தக் கையளிப்பு வைபவம் வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அங்கு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சார்பில் தலைவர் சி.தண்டாயுதபாணி பொதுச் செயலாளர் த. மாகசிவம் கலாசாரச் செயலர் நா. இராஜநாதன், மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மு. தயானந்தன், குச்சவெளிக்கான செயலர் என். மதிழகன் ஆகியோரும்—

வடக்கு— கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சார்பில் செயலர் க. பரமேஸ்வரன் கல்விப் பணிப்பாளர் எஸ்.நவரட்ணராஜா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி என். கந்தராஜா ஆகியோரும்— இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

30 அம்சக் கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. சிலவற்றுக்கு அமைச்சின் ஆளுனருடன் கலந்தாலோசிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோரிக்கைகளில் முக்கியமானவை வருமாறு:

* ஆசிரியர் நியமனம் வழங்குகையில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு முன்னுரிமை வேண்டும்.
* கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை மாவட்டங்களுக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரை நியமிக்குக.
* இடம் பெயர்ந்து செயற்படும் நாவற்குளி, கைதடி பகுதிகளிலுள்ள பாடசாலைகளை, அரசு யுத்த நிறுத்தம் அறிவிக்கும் வரை பழைய இடங்களுக்கு எடுத்துச்செல்லக்கூடாது.
* யாழ். தீவக பகுதிக்கான ஆசிரிய இடமாற்றங்களை ரத்துச் செய்க.
* தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளிலிருந்து கல்விக் கல்லூரிகளுக்குச் சென்று பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குக.
* பாடசாலையிலுள்ள இராணுவ முகாம்கள், அருகிலுள்ள சோதனைச் சாவடிகள் என்பவை அகற்றப்பட வேண்டும்.
* ஆசிரியர்கள், இளைப்பாறிய ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கான இடங்கள், கொடுப் பனவுகள் வழங்கப்பட வேண்டும்.
* தமிழ் மொழிமூல விசேட கல்விக்கு (புலன் குறைபாடுடையவர்களுக்கு) உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும்

## நோயாளர் படும்பாடு

தமது உடலில் நோய்களைச் சுமந்து கொண்டு மரணத்துடன் போராடுபவர்கள் நோயாளர்கள். ஓர் ஆரோக்கிய சமூகத்தில் இரண்டாம் தரப்பிரஜைகளாகத் தம்மைத் தாமே தாழ்த்தி அவர்கள் வாழ்ந்து வருபவர்கள். உலகிலேயே கருணைக் கண்கொண்டு பார்க்கப்பட வேண்டியவர்கள்.

திருகோணமலையில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் நோயாளர்கள் படும்பாடு பெரும்பாடு என்று தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைச் செயற்பாடுகள் முதல் நோய் தொடர்பான சந்தேகங்கள் வரை எவரும் வாய் திறந்து கேட்க முடியாத நிலையாம்.

அனுபவமில்லாத வைத்தியர்களும், பொறுமையில்லாத தாதியர்களுமே இப்படியான தொடர் பிரச்சினைகளுக்குக் காரணம் என்கின்றனர் நோயாளர்கள்.

பிரச்சினைகள் குறித்துத் தட்டிக் கேட்க முற்பட்டால் வேலைநிறுத்தப் போராட்டம், பொலீஸ் தலையீடு அது இது என்று கடைசியில் அவையும் நோயாளிகளையே திரும்பவும் துயரங்களுக்கு ஆளாக்கி வருகின்றன.

பொல்லுக் கொடுத்து அடிவாங்க வேண்டுமா? என்ற அச்சத்தில் அடங்கிப் போகிறார்கள் பாதிக்கப்பட்டோர்.

ஏதோ ''ஜனநாயக சிகிச்சை'' வழங்கப்படுவது போன்று முறைப்பாட்டுப் பெட்டிகள் மட்டும் வைத்தியசாலையில் ஆங்காங்கே வைக்கப்பட்டு அழகுபார்க்கப் படுகின்றனவாம்.


— சுஜா



# களுவன்கேணி இராணுவ முகாம் பெண்கள் சமூகம் போர்க் கொடி

களுவன்கேணிப் பகுதியில் படையினர் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்ததைத் தொடர்ந்து அப்பகுதிப் பெண்கள் பாலியல் இம்சைகளுக்கு உள்ளாகின்றனர் என்றும் ஆண்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவித்து அப்பகுதி பெண்கள் சமூகம் பொங்கி எழுந்துள்ளது.

படை முகாம் அமைத்ததுக்கு எதிராக அப்பகுதிப் பெண்கள் பலரது கையொப்பங்கள் இடப் பட்ட மகஜரின் பிரதிகள் ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலர் ஊடாக மட்டக்களப்பு அரச அதிபர், மனித உரிமைகள் ஆணைக் குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஆஸ்திரேலிய சமூக வழிகாட்டி நிறுவனம், பொதுஜன அபிவிருத்தி மன்றம், அரங்கச் செயற் பாட்டுக் குழு, நாடாளு மன்ற உறுப்பினர்கள், சர்வதேச மன்னிப்புச் சபை, தொல்லை தவிர்ப்புக் குழு ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளன.



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டம் ஒன்றில், பல்கலைக்கழக மதிலில் ஒட்டப் பட்டிருந்த வாசகங்கள்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

கடந்த மாதம் 16ஆம் திகதி களுவன்கேணி மெதடிஸ்த திருச்சபை தொடக்கம் கடற்கரையில் உள்ள மீன் பதனிடும் தொழிற்சாலைக் கட்டடம் வரை படையினர் முகாம் அமைத்துள்ளனர்.

இந்த முகாமில் நிலைகொண்டுள்ள படையினரால் ஆண்கள், பெண்கள் அனைவரும் தொடர்ச்சியாகப் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடற்றொழிலுக்கு அதிகாலையில் அவ்வழியால் செல்பவர்களை அழைத்து உங்கள் வீட்டில் பெண்கள் இருக்கிறார்களா? என்றும் அவர்கள் ஏன் கடலுக்குச் செல்வதில்லைஎன்றும் படையினர் விசாரிக்கின்றனர்.

இரவு வேளைகளில் குடிசைகளுக்குவந்து கதவைத் தட்டுகிறார்கள்.

பிரதான வீதியில் வரும் பெண்களிடம் கேவலமான முறையில் கதைக்கின்றனர்.

கடலோடு போராடிக் கரைக்குக் கொண்டுவரும் மீன்களில் பெரிய மீன்களை எடுத்துச் சென்றுவிடுகின்றனர்.

இப்படியானவர்கள் புலிகளை அழித்து உங்களைக் காப்பாற்றுவோம் என்று கூறுவது எந்த வகையில் நியாயம்.

எமது மண்ணின் கலாசாரம் என்னவாவது? எமது பிள்ளைகளின் எதிர்காலம் என்ன?

இப்படி அந்த மகஜரில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

— சத்துருக்கன்

# ஜனாதிபதிக்கு வை.எம்.சி.ஏ. மகஜர்

படையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்படும் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றனர் என்று குற்றஞ்சாட்டி மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

படையினரால் கைது செய்யப்பட்டு பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட கிருஷாந்தி, சாரதாம்பாள், கோணேஸ்வரி ஆகியோர் மீதான கொடூரங்கள் மக்கள் மனதிலிருந்து மறைய முன்னரே அடுத்தடுத்து நிகழ்ந்த அநாகரிக சம்பவங்கள் மக்களை ஆழ்ந்த விசனத்துக்கு உள்ளாக்கி இருக்கின்றன.

மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் அண்மையில் இடம்பெற்ற இப்படியான சம்பவங்கள் குறித்து வேதனையடைகிறோம்.

தாங்கள் ஒரு பெண் என்ற வகையிலும், தாய் என்ற ஸ்தானத்திலும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறோம்.

இனிமேல், பெண்கள் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படும் போது அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் பெற்றோர் துண்டுப் பிரசுரம்

'பிரபாகரனின் காலத்தில் பிறந்ததற்காகப் பெருமை கொள்வோம்' என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரம் மட்டக்களப்பில் அண்மையில் மாவீரர்களின் பெற்றோர்களால் வெளியிடப்பட்டது.

அத்துண்டுப்பிரசுரத்தில், ''நிதி என்றால் நிதி அள்ளிக் கொடுத்து, ஆட்பலம் என்றால் ஆட்பலத்தைத் திரட்டிக் கொடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளைத் தளர்ந்து விடாது, தலைநிமிர வைத்த அன்பு உறவுகளே!

''எதிரியின் ஏமாற்று வித்தைகளையும் கருத்துக்களையும் உடைத்தெறிந்து தமிழ் பேசும் மக்களின் நிகரில்லாத் தலைவனின் கரங்களைப் பலப்படுத்துவோம்.''

'' தெற்காசிய வல்லரசாம் இந்தியப் பெரும்படை சுற்றிவளைத்துத் தாக்கி கூண்டோடு அழிக்க முற்பட்ட போதும் வெற்றி அல்லது வீரமரணம் என்று துணிந்து போராடியவர் பிரபாகரன். பாகிஸ்தான், சீனா, இந்தியா, செக் குடியரசு, அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா போன்ற நாடுகள் எதிரிக்கு கோடிக்கணக்கான விலைக்கு ஆயுதங்களை அள்ளிக்கொடுத்த போதும் எதிரியின் கனவைப் பொடிப்பொடியாக்கியவன்.''

''அற்ப சலுகைகளுக்காக வீர சுதந்திரத்தை விலை பேசிடாத ஒப்பற்ற தலைவன் அவன் காலத்தில் பிறந்ததற்காய் பெருமை கொள்வோம்'' என்று அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் கறுப்பு வெசாக்!

புனித நாளாம் வெசாக் தினத்தை இம்முறை மட்டக்களப்பு மக்கள் கறுப்பு வெசாக் தினமாக நினைவுகூர்ந்தனர்.

கடந்த வருடம் வெசாக் தினமான மே 17 ஆம் திகதி மட்டக்களப்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அப்பாவிப் பொதுமக்கள் 17பேர் கொல்லப்பட்டனர். ஐம்பதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர்.

இந்த ஈவிரக்கமற்ற நடவடிக்கையால் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்ததும் காயமடைந்ததும் மட்டக்களப்பு மக்களிடையே மாறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது.

அந்தத் தினத்தை துக்கநாளாக நினைவுகூர்ந்து இம்முறை வெசாக் தினமான 7 ஆம் திகதியும் அதற்கு மறுநாளும் ஹர்த்தால் அனுஷ்டித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

''விடுதலைப்புலிகளே ஹர்த்தால் நடத்தத் தூண்டுகின்றனர்; இதற்கு பொதுமக்கள் ஆதரவு வழங்கக் கூடாது.'' என படையினர் துண்டுப்பிரசுரம் வெளியிட்டும், படையினரின் அறிவித்தலை உதாசீனம் செய்த நிலையில் ஹர்த்தால் வெற்றிகரமாக இரண்டு நாட்களும் நடத்தப்பட்டது.

கடந்தவருடம் மே 17ஆம் திகதி மட்டக்களப்பு மங்களராம விகாரையில் படையினர் கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தனர். இந்த நிகழ்வு இடம்பெறுவதற்கு முன்னதாக மாலை 5.30 மணியளவில் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

இக்குண்டு வெடிப்பில் சிக்கி ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் நான்கு இராணுவத்தினர் பலியாகினர். இதனைத் தொடர்ந்து ஏனைய படையினர் கண்மூடித்தனமான முறையில் சுடத் தொடங்கினர்.

ஆயித்தியமலை அனாதை இல்லத்தைச் சேர்ந்த ஒன்பது பால்மணம்மாறாத பாலகர்கள் பலிக்கடாவாக்கப்பட்டிருந்தனர். அதனைவிட ஏனையவர்களும் இன அழிப்புப் பசிக்கு இரையாகிச் சிதறிக்கிடந்தனர். இந்த துப்பாக்கி சூட்டில் 17 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். 54பேர் காயமடைந்தனர்.

இதே சமயம் கண்பார்வையற்ற நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவனான கரடியனாறு வித்தியாலய மாணவன் அருள்நீதி(13வயது) சில தினங்களில் மரணமடைந்தான்.

இவ்வாறு அரை மணி நேரத்துக்குள் அப்பாவிப் பொதுமக்களை பலி கொண்ட அந்த வெசாக் தினம் தமிழ் மக்களுக்கு கறுப்பு வெசாக் தினமே.

# பிந்திய பதில்கள்

மதன், நல்லூர்.
கே : அரசியல்வாதி ஒருவர் தான் நாடாளுமன்றம் சென்றால் தனது கனவை நனவாக்கப் போவதாகக் கூறுகிறாரே!
ப : தான் பதினாறு வயதில் கண்ட கனவை நனவாக்கப் போகிறாரோ என்னவோ?

கெங்கா, மன்னார்.
கே : ஆணும் பெண்ணும் சமம் என்கிறார்களே! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?
ப : ஆனையும் பாகனும் சமம் என்றால் ஆணும் பெண்ணும் சமம்தான்.

எஸ். ரஜீவ், கம்பளை.
கே : தமிழகத் தேர்தலில் 'அம்மையார்' அசத்தி விட்டாரே?
ப : அன்னையர் தினத்தில் அம்மையாருக்குக் கிடைத்த அபார வெற்றி அது. தனது 'பலத்தை' தேர்தலில் நிரூபித்த அவர் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறாமலிருந்தால் சரி!




ஏ.மஹ்ரூப்கான், கல்முனை.
கே : நோர்வேயின் சமாதான முயற்சியைக் குழப்பும் ஐ.தே.க வின் நடவடிக்கைக்குத் தமிழ்க் கட்சிகள் துணை போகாது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருக்கிறாராமே!
ப : தமிழ்க் கட்சிகளை வேண்டாமென்றால் எட்டி உதைப்பதும் வேண்டும் போது தலையில் தூக்கி வைப்பதும் ஒன்றும் புதிதல்லவே.

த. சுரேஷ், வவுனியா.
கே : சம்சாரியா பிரம்மச்சாரியா சந்தோஷமாக இருக்கிறான்?
ப : இரவிலா பகலிலா என்று சொல்லவில்லையே!

பிரியா, கொள்ளுப் பிட்டி.
கே : அரசியல்வாதியையும் சினிமா நடிகனையும் ஒப்பிடலாமா?
ப : இருவரும் நடிக்கிறார்களே!



ஆர் மல்லிகா, முல்லைத்தீவு.
கே : ஆண்களால் பெண்களை அளவிட முடியுமா?
ப : நரி வாலைக் கொண்டு கடல் ஆழம் காண முடியுமா?

எஸ். சுந்தர குமார், நல்லூர்.
கே : வேட்டியைச் சோட்டி மதிக்காத காலமாக இருக்கிறதே!
ப : ஆனைக்கொரு காலம் பூனைக்கொருகாலம்.

மஞ்சு, கண்டி.
கே : காதல் திருமணங்கள் தோல்வியில் முடிகின்றனவா?
ப : மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

முபீதா, மாளிகாவத்தை.
கே: காதல் மணம் நல்லதா? பெற்றோர் நிச்சயிக்கும் மணம் நல்லதா?
ப : காதல் மணம் ஊசி போன்றது. பெற்றோர் நிச்சயிக்கும் மணம் தமிழ் மருந்து போன்றது.

அருணா, கல்முனை.
கே : சில இளைஞர்கள் சைக்கிள் ஓடிக் கொண்டு காதல் செய்கிறார்களே!
ப : சைக்கிள் ஓடிக் கொண்டே காதலிப்பது பெரும்பாலும் மோதலாகத்தான் முடியும்.



அ.சுமன், நற்பிட்டி முனை.
கே : கல்லிலே தோலுரிக்க மக்களைப் பயன்படுத்தும்இன்றைய அரசியல்வாதிகள் பற்றி?
ப : இரத்தம் உறிஞ்சும் ஒட்டுண்ணிகள்.



கே.உமா, நுவரெலியா.
கே : பித்தனே எந்நேரமும் மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டிருப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப : அவர்கள் குறை குடம் போன்றவர்கள். அதனால்தான் மற்றவர்மேல் குறை கண்டு தளம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இராமலிங்கம், வவுனியா.
கே : அரசாங்கம் சமாதானத்தில் அதிக அக்கறை காட்டுவதாகத் தெரிகிறதே. உமக்கு என்ன தோன்றுகின்றது?
ப : வடபுலப் போரில் பின்னடைவு, ஐ.தே.கவின் நடவடிக்கைகள், தமிழ்க் கட்சிகளின் போக்கு என்பவற்றால் அரசு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது தெரிகிறது.

பார்த்திபன், யாழ்ப்பாணம்.
கே : எனது நண்பன் ஒருவன் தூக்கத்தில் சிரிக்கிறான். அவனை எப்படி அழைக்கலாம்?
ப : 'ரியூப் லைட்' என்று அழைக்கலாம். சக நண்பர்கள் பகலில் விடும் ஜோக் இரவில்தான் அவனுக்குப் புரிகிறது போலும்.



தாமோதரம், திருகோணமலை.
கே : பெண்களுக்கு தாலி ஒரு வேலியா?
ப : பலருக்கு வேலி. ஆனால் சிலருக்கு ஜாலி. லைசென்ஸ் கிடைச்ச மாதிரி.

யசோதா, ஹட்டன்.
கே : எத்தனை அரசியல் கட்சிகள் முளைத்தாலும் பிரதான ஒரு சில கட்சிகளுக்கே எப்போதும் மவுசு இருக்கிறது. காரணமென்ன பித்தா?
ப : தலை இருக்க வால் ஆடாது தானே.

முஹம்மத் ரிபாய்தீன், கம்பிரிகஸ்வெவ.
கே : நான் வேறு மதப் பெண் ஒருத்தியைக் காதலிக்கிறேன். அவளுக்குத் தமிழ் தெரியாது. என்ன செய்வது?
ப : காதலுக்குக் கண் இல்லை என்பார்கள். பிறகு ஏன் கவலை.

ரிச்சர்ட், குண்டுக்குளி.
கே : திருமணம் ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமானதா?
ப : அத்தியாவசியமானதல்ல, ஆனால் திருமணம் மனிதனுக்கு கட்டுக்கோப்பான வாழ்க்கைக்கு அத்திவாரமிடுகிறது.

வி. சண்முகம், திருகோணமலை.
கே : நடிகை ஸ்நேகாவுக்குத்தான் இப்போது அதிக படங்களாமே?
ப : புதுச்சரக்குக்கு எப்போதுமே கிராக்கி இருக்கத்தானே செய்யும்.

சுசீலா, வத்தளை.
கே : சிம்ரன் – மோனல் சகோதரிகள் என்கிறார்கள். ஆனால் உருவ ஒற்றுமையே இல்லையே?
ப : நக்மா — ஜோதிகாவிடம் ஏதாவது உருவ ஒற்றுமையைக் கண்டீரா?

# உள்ளக கிரிக்கெட் இலங்கையில் அறிமுகம்

உள்ளக அரங்க கிரிக்கெட் விளையாட்டு இலங்கையிலும் அறிமுகமாகியுள்ளது.

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் உள்ளக அரங்கில் நடைபெற்றுள் ளன. போட்டி விதிமுறைகளில் மாற்ற மெதுவுமின்றி மூடப்பட்ட அரங்கில் விளையாடப்பட்ட போட்டிகள் அவை.

ஆனால் உள்ளக அரங்கு கிரிக்கெட் என்பது முற்றிலும் வித்தியாசமானது.


களுவிதாரன

இவ்விளையாட்டில் ஒரு அணியில் அதிகபட்சம் எட்டுப்பேர் மாத்திரமே இடம்பெறுவர். ஒரு இன்னிங்ஸில் 16 ஓவர்கள் பந்து வீசப்படும். விக்கட் காப்பாளர் உட் பட எட்டு வீரர்களும் பந்து வீசவேண்டும். ஒரு துடுப்பாட்ட வீரர் இரு ஓவர்களுக்கு மாத்திரமே முகம் கொடுக்கலாம்.

இதற்காகப் பாவிக்கப்படும் பந்தின் நிறை 156 கிராம்களாகும்.

30 மீற்றர் நீளம், 11 மீற்றர் அகலம், 4.5 மீற்றர் உயரம் கொண்ட அரங்கத்தில் இப்போட்டி விளையாடப்படும். ஆண், பெண் இருபாலாரும் இவ்விளையாட்டில் பங்குபற்றலாம்.

இலங்கையின் முதலாவது உள்ளக கிரிக்கெட் அரங்கு தலவத்துகொடவில் அமைக்கப்பட்டுள்ளது. 'ஒஸ்ட் ஏசியா ஸ்போர்ட்ஸ்' எனும் நிறுவனம் இவ் வரங்கை அமைத்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இதைத் திறந்து வைத்தார். இதன் முதலாவது போட்டியாக அன்றைய தினம்' சனத் (ஜயசூரிய) எய்ட்' அணிக்கும் இலங்கை உள்ளக கிரிக்கெட் சங்க அணிக்குமிடையில் கண்காட்சிப் போட்டியொன்று நடைபெற்றது.

தற்போதைய, முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் பலரும் இதில் பங்குபற்றினர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் விக்கட் காப்பாளர் ரொமேஷ் களுவிதாரன ஒஸ்ட் ஏசியா ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் விளையாட்டு இயக்குநராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

''மழை-வெயில், இரவு- பகல் என்பனவற்றை பொருட்படுத்தாமல் இப்போட்டி யில் பங்குபற்றலாம். விடுமுறைக் காலங் களில் குடும்ப அங்கத்தினர் களும் இதில் பங்குபற்றலாம் என்கிறார் களுவித்தாரன.

தலவத்துகொடவில் அமைக்கப்பட்டுள்ள இவ்வரங்கு வலைப்பந்தாட்டம் , உள்ளக அரங்க கால்பந்தாட்டம், ஸ்குவாஸ் போன்ற போட்டிகளையும் நடத்தக் கூடியதாக கட்டப்பட்டுள்ளது. இதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை 12 கோடி ரூபாவாகும்.

அவுஸ்திரேலியாவே இவ்விளையாட்டை அறிமுகப்படுத்தியது. இலங்கையிலுள்ள அரங்கும் அவுஸ்திரேலிய நிபுணர்களினாலேயே அமைக்கப்பட்டது.

சர்வதேச - அவுஸ்திரேலிய உள்ளக கிரிக்கெட் சங்கம் இவ்விளையாட்டுக்கான சர்வதேச சங்கமாக செயற்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் தவிர்ந்த சகல டெஸ்ட் விளையாடும் நாடுகளும் வேறு சில நாடுகளும் இவ்வமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன.

முதலாவது உலகக் கிண்ணத்திற்கான உள்ளக அரங்க கிரிக்கெட் சுற்றுப்போட்டி 2002ஆம் ஆண்டில் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ளது. அதன்பின் இரண்டாவது உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டியை 2004ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்துவதற்கு இலங்கை உள்ளக கிரிக்கெட் சங்கம் முயற்சித்து வருகிறது.

# சனத்தை மெக்ராத் இழிவுபடுத்தினாரா?

அவுஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளரான கிளென் மெக்ராத் இலங்கை வீரர் சனத் ஜயசூரியவை 'பிளக் மங்கி' (கறுங் குரங்கு) என திட்டியதாக ரொஷான் மகாநாம தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் வீரர் ரொஷான் மகாநாம தனது கிரிக்கெட் வாழ்க்கை தொடர்பான நூலொன்றை அண்மையில் வெளயிட்டுள்ளார். 'ரிட்டையர் ஹர்ட்' என அதற்கு பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலிலேயே இச்சம்பவம் பற்றி மகாநாம குறிப்பிட்டுள்ளார்.

''1995ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கிரிக்கெட் தொடரொன்றின் இறுதிப் போட்டியின் போது துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ஜயசூரியவை ஆஸி பந்துவீச்சாளரான மெக்ராத் பிளக் மங்கி எனத் திட்டினார்.


சனத்


மெக்ராத்

இப்போட்டியில் சனத் 30 ஓட்டங்களைப் பெற்ற பின் அறைக்குத் திரும்பியபோது குழம்பிய நிலையில் காணப்பட்டார். மெக்ராத்துடனான மோதல் பற்றி அவர் கூறியதை நானும் ஏனைய வீரர்களும் செவிமடுத்தோம்.

ஆனால் அணித்தலைவர் அர்ஜுனவிடமோ பயிற்றுநர் டேவ் வட்மோரிடமோ இது பற்றி முறையிடவில்லை.

போட்டியின்பின் ஆஸி வீரர்களோடு இலங்கை வீரர்கள் கைகுலுக்க மறுத்தமைக்கு இச்சம்பவமும் முக்கிய காரணம்'' என்கிறார் மகாநாம.

குறித்த போட்டி சிட்னியில் நடைபெற்றது. இதில் மகாநாம பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி புத்தகம் வெளியிடப்படும் முன்னரே அவுஸ்திரேலிய தொலைக்காட்சி சேவையொன்று இவ்விடயம் பற்றி செய்தி வெளியிட்டது.

இதையடுத்து அவுஸ்திரேலிய கிரிக் கெட் சபைத் தலைவர் மல்கம் ஸ்பீட் உடன டியாக விசாரணைகளை ஆரம்பித்தார்.

குறித்த போட்டியில் நடுவராகப் பணியாற்றிய பீட்டர் பார்க்கர், முன்னாள் ஆஸி அணித்தலைவர் மார்க் டெய்லர் ஆகியோரிடம் மல்கம் ஸ்பீட் விசாரித்தார்.

எனினும் தாம் அவ்வாறு எதுவும் கேட்கவில்லை என அவர்கள் கூறியுள்ளனர். மற்றொரு நடுவரான ஸ்ரீவ் ரண்டெல் குற்றமொன்றுக்காக சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.

ஆனால் மெக்ராத் இக்குற்றச்சாட்டை வன்மையாக மறுத்துள்ளார். 100 சதவீதம் இதை மறுப்பதாக மெக்ராத் தன்னிடம் கூறினார் என மல்கம் ஸ்பீட் கூறுகிறார்.

''இனம், மதம் தொடர்பான அவதூறுகளுக்கெதிராக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை கடுமையான நடவடிக்கை எடுக்கும். எனினும் முழுமையான தகவல்கள் கிடைக்கும்வரை இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைத் தொடர முடியாது என மல்கம் ஸ்பீட் கூறியுள்ளார்.

சனத் ஜயசூரிய இவ்விவகாரம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக இதுவரை எது வும் கூறவில்லை.

# ஆஸி கிரிக்கெட் வீரருக்கு மில்லியன் டொலர் ஊதியம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கான ஊதியப் பட்டியல் மீளமைக்கப்படவிருக்கிறது. புதிய திட்டத்தின்கீழ் ஆகக் கூடுதலாக அணியின் முன்னணி வீரர் வருடாந்தம் ஒரு மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை ஊதியமாகப் பெறுவார்.

தற்போது 625,000டொலர்களே ஆஸி கிரிக்கெட் வீரரொருவரின் ஆகக் கூடுதலான வருடாந்த ஊதியமாக உள்ளது.


ஸ்டீவ்வோ

''ஆஸி கிரிக்கெட் சபை 25 வீரர்களுடன் நான்கு வருட ஒப்பந்தமொன்றில் ஈடுபடும். அவர்கள் போட்டிகளில் பெறும் பெறுபேறுகளுக்கேற்ப தரவரிசைக்கு (ரேங்க்) உட்படுத்தப்படுவர்.

இதில் முதலாவது தரத்தில் உள்ள வீரருக்கு வருடாந்தம் ஒரு மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் கள் (சுமார் 46,800,000 ரூபா) ஊதியமாக வழங்கப் படும்.'' இவ்வாறு ஆஸி கிரிக்கெட் சபைத் தலைவர் மல்கம் ஸ்பீட் தெரிவித்துள்ளார்.

இதற்கான 25 வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வுக்குழுத் தலைவர் ட்ரெவோர் ஹோன்ஸ் இவ்வாரம் வீரர்களது தரவரிசை குறித்து அவர்களோடு பேசவுள்ளார்.

''இத்திட்டத்தின்படி மில்லியன் டொலர்களை ஊதியமாகப் பெறும் முதலாவது வீரர் யார் என்பதை எதிர்வுகூற நான் விரும்பவில்லை. தேர்வாளர்களே தரவரிசைகளை தீர்மானிப்பர் என ஸ்பீட் கூறுகிறார். தற்போது ஆஸி அணித் தலைவர் ஸ்டீவ்வோ ஆகக் கூடுதலான ஊதியம் பெறும் வீரராகத் திகழ்கிறார்.

புதிய முறையின் கீழ் அணித் தலைவர், உபதலைவர் ஆகியோருக்கு விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் அவுஸ்திரேலியாவில் அதிக ஊதியம் பெறும் விளையாட்டு அணியாக ஆஸி கிரிக்கெட் அணி திகழும். அத்தோடு உலகில் கூடுதலான ஊதியம் பெறும் கிரிக்கெட் அணியாகவும் அவ்வணி விளங்கும்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களின் சங்கத் தலைவர் ரிம் மே உலகின் சிறந்த அணிக்கு வழங்கப்படும் வெகுமதி இது எனக் கூறியுள்ளார்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# கால்பந்தாட்டக் களத்தில் மற்றொரு அனர்த்தம்

மேற்கு ஆபிரிக்க நாடான கானாவில் கால்பந்தாட்டப் போட்டியொன்றின்போது ஏற்பட்ட அனர்த்தத்தில் 130க்கு மேற்பட்ட ரசிகர்கள் மரணமடைந்துள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி கானாவின் அக்ரா நகரில் நடைபெற்ற போட்டியொன்றில் அந்நாட்டின் பிரபல கழகங்களான ஹேர்ட்ஸ் ஒவ் ஒக் அணியும் அஷன்ரி கொடேகோ அணியும் மோதிக்கொண்டன.

போட்டியின் இறுதி நிமிடங்களில் ஹேர்ட்ஸ் ஒவ் ஒக் அணி இரு கோல்களை அடித்து 2-1 கோல்களால் வெற்றியீட்டியது. இதனால் ஆத்திரமடைந்த அஷன்ரி அணி ஆதாவாளர்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.

இதைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பாவித்துள்ளனர். இதையடுத்து மூச்சுத் திணறலிலும் சனநெரிசலிலும் சிக்கி 130க்கு மேற்பட்டோர் மரணமடைந்ததாகவும் 150க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

50,000க்கு மேற்பட்டடோர் இவ்வரங்கில் கூடியிருந்தனர். இச்சம்பவம் நடைபெறும்போது அரங்கத்தின் வாயில்கள் மூடப்பட்டிருந்தன. இதுவும் அதிகமானோர் நெரிசலுக்குள்ளாவதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க கண்டத்தில் கால் பந்தாட்ட அரங்கொன்றில் ஏற்பட்ட மிக மோசமான நிகழ்வு இதுவாகும்.

கடந்த ஒருமாத காலத்திற்குள் ஏற்பட்ட நான்காவது கால்பந்தாட்ட அரங்க அனர்த்தம் இது. அத்துடன் ஆபிரிக்காவில் ஏற்பட்ட 3ஆவது விபத்துமாகும்.

தென்னாபிரிக்காவில் கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி நடைபெற்ற போட்டியொன்றின் போது அதிகமான பார்வையாளர்கள் அரங்கத்திற்குள் உட்புக முயன்றமையால் ஏற்பட்ட அனர்த்தத்தில் 43பேர் கொல்லப்பட்டனர்.

ஏப்ரல் 29ஆம் திகதி கொங்கோ நாட்டில் நடைபெற்ற போட்டியொன்றின்போது 10 பேர் கொல்லப்பட்டதுடன் 51 பேர் காயமடைந்தனர்.

ஈரானில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற கால்பந்தாட்டப்போட்டியொன்றின்போது பெருமளவு ரசிகர்கள் கூரைமீது ஏறியிருந்தனர். இதனால் பாரம் தாங்காமல் இரும்புத் தூணகள் உடைந்து வீழ்ந்தால் இருவர் மரணமானதோடு 300க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கானாவில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக அந்நாட்டில் 3 நாட்கள் துக்க தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன.

# பாகிஸ்தான் ஏ அணி இலங்கை வருகிறது

இலங்கை ஏ அணிக்கும் பாகிஸ்தான் 'ஏ' அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெறவுள்ளன.

பாகிஸ்தான் 'ஏ' அணி ஜூன் 10ஆம் திகதி இலங்கைக்கு வருகிறது. உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டிகள் மூன்றிலும், ஒருநாள் போட்டிகள் மூன்றிலும் இவ்விரு அணிகளும் மோதவுள்ளன.

இப்போட்டிகளுக்காக 27 பேர் கொண்ட இலங்கை வீரர்கள் குழாம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதில் இடம்பெற்றுள்ளவர்கள் விவரம்:-

அவிஸ்க குணவர்தன, சாந்த கலவிட்டிகொட, ஜெஹான் முபாரக், இயன் டானியல், சுகித் பீரிஸ், ரி.எம். தில்ஷான், சாமர சில்வா, உபேக் பெர்னாண்டோ, லங்கா டி சில்வா, ஜீவந்த குலதுங்க, மலிந்த வர்ணபுர, எம். புஸ்பகுமார, திலான் சமரவீர, சுரேஷ் பெரேரா, ரங்க ஹேரத், எஸ். வீரகோன், எல். லொக்குஆராச்சி, மலிங்க பண்டார, சஜீவ சில்வா, அகலங்க கனேகம, இந்திக காலலகே, தில்ஹார பெர்னாண்டோ, கயான் வீரகோன், பிரசன்ன ஜயவர்தன, தினுஷா பெர்னாண்டோ, சஜிக அபேநாயக்க, எம். வன்டோர்ட்.

### போட்டிகள் நடைபெறும் திகதிகளும் மைதானங்களும்

உத்தியோகபூர்வமற்றடெஸ்ட்போட்டிகள்:

ஜூன் 10-16: என்.ஸி.ஸி. மைதானம்
ஜூன் 19-22: காலி
ஜூன் 25-28: ஆர்.பிரேமதாச

ஒருநாள் போட்டிகள்:

ஜூன் 30: மொரட்டுவ
ஜூலை 02: பி. சரணவணமுத்து
ஜூலை 04: ஆர்.பிரேமதாச

# மண்வாசனையில் மூன்று நாடகங்கள்



நமது பாரம்பரியக் கலைகள் மீண்டும் தழைத்து வளர்ந்திட அரும் பாடுபட்டு வரும் கலைஞர்களில் குறிப்பிடத்தக்க ஒரு சிலரில் செல்லையா மெற்றாஸ்மயிலும் ஒருவர்.

தற்போது இவர் பாரம்பரிய கலை மேம்பாட்டுக் கழகம் அமைத்து முழுமூச்சாய் உழைத்து வருகிறார்.

கலை விழாக்கள், நாட்டுக் கூத்து, இசை நாடக அரங்கேற்றங்கள் என்பன வற்றை யாழ் நகரின் சகல இடங்களிலும் இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றார்.

இன்று மரபுவழிக் கலைக்கு புத்துயிர் அளிக்கும் ஒருவராகத் திகழும் இவரின் 'வெடியரசன்,' 'பூதத்தம்பி,' 'சங்கிலியன்' ஆகிய நாடகங்கள் மிகவும் பிரசித்த மானவை.

வேழம்படுத்த வீராங்கனை நாட்டுக் கூத்து, யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, மானிப்பாய், சுழிபுரம், மருதனார்மடம், கரவெட்டி, பருத்தித்துறை, புத்தூர், கோப்பாய் ஆகிய இடங்களில் அரங்கேறி உள்ளன.

'மண்வாசனையில் மூன்று நாடகங்கள்' என்ற நூல் ஒன்றை இவர் அண்மையில் வெளியிட்டிருந்தார். 'வெடியரசன்,' 'பூதத்தம்பி,' 'சங்கிலியன்' ஆகிய மூன்று நாடகப் பிரதிகள் இதன் உள்ளடக்கம்.

நெடுந்தீவை ஆட்சி செய்த வெடியரசனின் வரலாறு இவரின் கைவண்ணத் தால் நாடகமாகியுள்ளது. வெடியரசன் ஒரு சிற்றரசன். நெடுந்தீவில் கோட்டை கொத்தளங்களை, தீவுப் பற்றுக்களை அடிமைப்படுத்தி ஆண்டு வந்தவன்.

யாழ்ப்பாண அரசின் வரலாற்றிலே வசை, இசை இரண்டுக்கும் உரியவனாய்த் திகழ்ந் தவன் செகராசசேகரன் எனும் பட்டப் பெயர் தாங்கிய சங்கிலியன், அவனுடைய கதை இது. வரலாறு காற்பகுதியாகவும், கற்பனை முக்காற் பகுதியாகவும் சங்கிலியன் நாடகம் எழுதப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த காலத்தில் நல்லூர் முதலியாராக விளங்கிய பூதத்தம்பிக்கும் அவனுடைய நண்பனான யாழ்ப்பாண முதலியார் அந்திராசிக்கும், பூதத்தம்பியின் மனைவி யான அழகவல்லிக்குமிடையில் கணவன்—கயவன்— மனைவி என்ற முக்கோணத்தில் நடந்தேறிய துன்ப வரலாறு பூதத்தம்பி வரலாறாகும்.

யாழ்ப்பாணத்தின் ஒரு கால கட்ட வரலாற்றை நாட்டுக் கூத்துப் பாணியில் எடுத்தியம்பும் இக்கதைகள் எமது பாரம்பரியக் கலைகளை வளர்ப்பன வாக அமைந்துள்ளன. இவை இன்றைய காலகட்டத்தின் அரிய தேவைகளாகும்.

எமது பாரம்பரியக் கலைகளை மேம்படுத்தும் நோக்குடன் இசை நாடகக் கூத்துக்களை ஒழுங்கமைத்து மேடையேற்றுவதுடன் நின்று விடாமல் இளங் கலைஞர்களையும் பயிற்றுவித்து இக்கலைகளின் மீது பற்றுக் கொள்ளும் படியாகவும் அவர் செயற்பட்டு வருகிறார். பல நூல்களை எழுதியுள்ளார். வாழ்ந்து கொண்டிருக்கும் இசை நாடக நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் வரலாறு என்ற நூலுக்கு அரச சாகித்திய பரிசு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

— விஜி

# "ஆச்சி" ஒரு வரலாற்றுப் பதிவு

சட்டத்தரணி சோ.தேவராஜாவின் கவிதைத் தொகுதியான 'ஆச்சி' வெளியீட்டு விழா சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்றது.

வெள்ளவத்தையில் கம்பன் விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடும் மழையும் பெய்து கொண்டிருந்தது. அப்படி இருந்தும் ஏராளமான இலக்கிய ஆர்வலர்களும், எழுத்தாளர்களும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கவிஞரும் இலங்கை வானொலி அறிவிப்பாளருமான இளையதம்பி தயானந்தாவின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கலாசூரி இ.சிவகுருநாதன், பேராசிரியர் சோ.சந்திரசேகரம், டாக்டர் ஜின்னா ஷெரிபுத்தீன், ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், தி.கணேசராஜா ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர்.

வெளியீட்டுரையை இ. தம்பையா நிகழ்த்தினார். கவிஞர் மேமன் கவி ஆய்வுரை செய்தார். எழுத்தாளர் கே.விஜயன் கருத்துரை வழங்கினார். 'ஆச்சி' நூலில் அடக்கமாகியுள்ள கவிதைகள் 1984இல் எழுதப்பட்டவையாகும். அநேகமான கவிதைகள் தாயகம் சஞ்சிகையில் வெளிவந்தவை.

1983ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை இலக்கியத்தில் தமிழ்த் தேசிய வாதம் தலைதூக்கிய காலத்தில் இந்தக் கவிதைகள் பிறந்த போதும், மிக மிகக் கவனமாக அன்றைய நாளில் வடபுலத்து மன உணர்வுகளையும் வெளிப்படுத்துபவைகளாக அமைந்துள்ளன என்ற கருத்துக்கள் பலராலும் முன்வைக்கப்பட்டன.

குறிப்பிட்ட காலகட்டத்தில் வடபுலத்தில் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் மன உணர்வுகளையும், இயல்புகளையும் ஒரு வரலாற்றுப் பதிவாக்குவதே தனது கவிதைகளின் குறிக்கோள் என்று தேவராஜா தனது ஏற்புரையில் கூறினார்.

# சிறுகதை மேம்பாட்டு அரங்கில்....!






தமிழ்த் தேசியப் பத்திரிகைகளில் வாரந்தோறும் பிரசுரமாகும் சிறுகதைகளை மேம்படுத்தும் நோக்குடன் ஆய்வரங்குகளை விபவி மாற்றுக் கலாசார மையம் நடத்தி வருகின்றது.

மூன்று மாதங்களுக்கொருமுறை இக்கருத் தரங்கு நடைபெறுவதுண்டு. 36 கதைகள் கருத்துரைகளுக்காக எடுத்துக்கொள்ளப்படும்.

மூவர் கருத்துரைகளை முன்வைப்பர். தினகரன், தினக்குரல், வீரகேசரி ஆகிய ஞாயிறு மலர்களில் வெளிவரும் சிறுகதை களே ஆயவுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அன்றைய ஆய்வரங்கில் ஓர் இலக்கிய ஆர்வலர், விமர்சகர், மலையகத்தின் புகழ் பெற்ற ஓர் எழுத்தாளர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கூட்டம் ஆரம்பமாகிவிட்டது. இலக்கிய ஆர்வலரும், விமர்சகரும் எப்படியோ சமாளித்து விட்டனர். வளர்ந்து வரும் இளைய தலைமுறை எழுத்தாளர்களே சமகாலத்தில் அதிகமாக எழுதி வருவதினால் கன்னா பின்னாவென கடுமையாக விமர்சனம் செய்தால் அவர்கள் எழுதுவதையே விட்டுவிடுவார்கள் என்ற பீடிகையுடன் ஆரம்பித்த இலக்கிய ஆர்வலரும், விமர்சகரும் மென்மையானதொரு நயவுரை யுடன் கதைகளின் 'தரம்' குறித்து தமது கருத்துக்களை நைசாக முடித்துக் கொண்டார்கள்.

மலையக எழுத்தாளர் காரசாரமானவர். நல்லதொரு விமர்சகராகவும் விளங்கும் இவர், தான் எடுத்துக் கொண்ட கதைகள் சம்பந்தமாக சிறிது கடுமையாகவே விமர்சித்தார். ஆரம்பித்த விதமே 'அடி சக்கை!' என சபையோரை நிமிர வைத்தது.

விமர்சனத்திற்காக பன்னிரெண்டு கதைகளை அவர் எடுத்துக் கொண்டார். அவை 70 வருடகால பழைமை மிக்கதொரு பத்திரிகையில் வெளிவந்த கதைகளாகும்.

கணீரென்ற குரல் படைத்த அந்த எழுத்தாளர் பன்னிரெண்டு கதைகளில் ஒன்றை எடுத்து மேசையில் சளாரென தூக்கியெறிந்து 'இதெல்லாம் ஒரு கதையா?' என சபையோரைப் பார்த்து கர்ஜித்தார்.

''இதென்னடா வம்பு?'' என்று சபையோர் தலை தூக்கி ஒருவரையொருவர் கேள்விக் குறியுடன் பார்த்துக் கொண்டனர்.

''சிறு கதைத் துறைக்கு இந்தப் பத்திரிகை அரும்பெரும் பணியாற்றி யுள்ளது. இந்தப் பத்திரிகையில் கதையொன்று பிரசுரமாவதை பெருமைக்குரிய விசயமாகக் கருதி எழுத்தாளர்கள் மார்தட்டிக் கொள்ளும் ஒரு காலம் இருந்தது. ஆனால் இந்தக் கதையைப் படித்தவுடன் எதுவித தராதரமும் அற்ற இத்தகைய கதைகள் அப்பத்திரிகையில் பிரசுரமாவது துயரமாகவிருக்கிறது. ஒரு பத்திரிகையின் சிறுகதைப் பகுதியை தயாரிக்கும் ஆசிரியர் எப்படி இதனை பிரசுரிப்பதற்கு தகுதியானதாக ஏற்றுக் கொண்டார் என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை'' என்று நிறுத்தினார் அந்த மலையக எழுத்தாளர்.

ஒரு காலத்தில் தரமான சிறுகதை கள் கொடிகட்டிப் பறந்தவொரு பத்திரிகையில் இப்படியான கதைகள் பிரசுரமாகின்றனவே என்றவொரு தார்மீக மன அவஸ்தை அவருக்கு. இருக்காதா பின்னே!

சபையில் சஞ்சாரியின் தலை நிமிர்ந்து உயர்ந்தது. ''என்ன?'' என்பதுபோல் மலையக எழுத்தாளர் விறைப்புடன் பார்த்தார்.

''ஐயா கோவிக்க மாட்டிங்க என்றால் ஒன்று சொல்கிறேன்.''

''சொல்லும்''

''இந்தக் கதை அந்தப் பத்திரிகையில் வெளியானது ஒன்றும் அதிசய மில்லை. அந்தப் பத்திரிகையின் சிறுகதைப் பகுதியைத் தயாரித்து வருபவரே அந்தக் கதையை எழுதியவர்'' என்றார்.

''அடடா அப்படியா விசயம்'' என்று மலையக எழுத்தாளர் மிரட்சியுடன் கேட்டார்.

அவருடைய மிரட்சிக்குக் காரணம் இருக்கின்றது. இதே பத்திரிகைக்கு அவர் பல கதைகளை அனுப்பியிருந்தார். இனிமேல் அவைகளுக்கு என்ன கதி ஏற்படப் போகிறது என்ற எண்ணமே அவரை மிரள வைத்தது. அடப்பாவமே!

## கலையமுதம்

கே.விஜயன்



திருமறைக் கலாமன்றத்தின தமிழ், சிங்கள புத்தாண்டு ஒன்று கூடலில் மன்ற இயக்குநர் அருட்திரு. நீ.மரியசேவியர் அடிகளாரிடம் சிங்களக் கலைஞர் ஒருவர் பண்பாட்டு முறையில் ஆசி பெறுகிறார்.



எழுத்தாளர் வீ.சு. கதிர்காமத்தம்பி மணிவிழா கொண்டாடிய போது முன்னாள் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் சலீம் மாலை அணிவிப்பதையும், எஸ்.எம்.கோபாலரெத்தினம், இரா. நெல்லை நடேசன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். படம்— டைமன்

# சுமை குறைந்த வாழ்க்கைக்குத் தயாராகுங்கள்

திருமண வயதில் உள்ள பெண்களை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோர் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவளை எவராவது ஒருவரின் கையில் கொடுத்தால் தான் நிம்மதி என்று கூறுவார்கள்.

திருமண வயதில் ஆணை வைத்திருக்கும் பெற்றோர் மகனுக்கு இன்னும் ஒரு நல்ல வேலை கிடைக்கவில்லை, கிடைத்தவுடன் ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

ஆண்களுக்குத் திருமணம் செய்து




வைக்கும் போது , அவனுக்கு குடும்பத்தை கவனித்து நடத்தக் கூடிய தகுதி இருக்க வேண்டும் என நினைக்கும் பெற்றோர், பெண்கள் விடயத்தில் அப்படி எண்ணாமல் இருப்பது அவர்கள் விடும் மிகப் பெரிய தவறாகும். அந்த எண்ணம் பெண்களை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளி விடுகிறது என்பதை பெரும்பாலான பெற்றோர் உணர்வதில்லை.

பெண்கள் வேலைக்குப் போய்த்தான் ஆகவேண்டுமா? அவர்கள் சம்பாதிக்க வேண்டுமா? என்று பலர் கிண்டலாகக் கேட்கிறார்கள். இல்லறத்திலே வாழ்க்கைத் துணை உற்ற துணையாக இருந்து விட்டால் பிரச்சினை இல்லை! ஆனால் துணை சரியாக அமையாது விட்டால் பல பிரச்சினைகள் ஏற்படும். அந்த வேளை யில் தனித்து நின்று பிள்ளைகளை காப்பாற்றும் தகுதி பெண்களுக்கு அவசியம். ஆகையால் பெண்கள் வேலைக்குச் செல்வது மிகவும் அவசியம் ஆகும்.

எதிர்பார்த்தபடி, திட்டமிட்டபடி எல்லோருக்கும் வாழ்க்கை அமைவதில்லை. திடீரென்று ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழக்கூடிய வகையில் தம்மைத் தயார்படுத்திக் கொண்டால் எப்படிப்பட்ட சூழ்நிலையையும் எதிர்கொள்ள முடியும். தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றக்கூடிய வலிமை ஒரு பெண்ணுக்கு இருந்தால் அவளது குடும்பம் நன்றாக இருக்கும்.

எமது நாட்டில் தந்தை மகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் சகோதரர்கள் சகோதரிக்கு செய்யவேண்டிய கடமைகளையும் தட்டிக்கழிப்பதில்லை. ஆனால் பெண்ணை வேலைக்கு அனுப்புவது என்று வரும்போது பெற்றோர்கள் சிறிது தயக்கம் காட்டத்தான் செய்கிறார்கள்.

பெற்றோரை இழந்து விட்டால், கணவனை இழந்து விட்டால், தன் பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை பெண்ணுக்கு ஏற்படுகிறது. வீட்டில் பூட்டிவைத்து வளர்க்கப்படுகிற ஒரு பெண்ணுக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் தனித்து நின்று சமாளிக்க முடியாமல் எவரையாவது சார்ந்து நிற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இன்றைய காலத்தில் அடுத்தவர்களை சார்ந்து வாழ்வது எவ்வளவு இழிவான செயல் என்பது எல்லோருக்கும் புரியும். அப்படி வாழும் பெண் தன் சுயமரியாதையை இழந்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஒரு பெண் எந்தச் சந்தர்ப்பத்திலும் தன் சுயமரியாதையை இழந்துவிடாமல் இருக்க வேண்டுமானால், அவளுடைய அடிப்படைத் தேவைகள் என்ன என்பதை ஒரு தந்தையாக, சகோதரனாக இருந்து சிந்தித்துப் பார்த்தால் அவளுக்குக் கல்வியறிவும் தொழிலும் அவசியம் என்பது புரியும்.

ஓர் ஆணுடைய உழைப்பு முழுமையாகக் குடும்பத்துக்குப் போய்ச் சேராமல் இருக்கப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் ஒரு பெண்ணின் உழைப்பு அவள் குடும்பத்துக்கு முழுமையாகப் போய்ச்சேரும். அதேபோல அவளுக்குக் கொடுக்கப்படும் கல்வியறிவு அவள் குழந்தைகளுக்கும் பயன்படும். ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்படும் கல்வியறி வும் தொழிலும் இரண்டு மடங்காக குடும்பத்துக்கு பலன் அளிக்கின்றது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்

ஒரு பெண் முன்னேறுவதற்கு தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும். இல்லறத்தில் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருக்க வேண்டுமே அல்லாது சுமையாக இருக்கக் கூடாது.

எனவே சுமையற்ற, இனிய வாழ்க்கைக்கு ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தயார்படுத்திக்கொள்வது அவசியமாகும்.



## டிப்ஸ்



* எலுமிச்சைச் சாறும், தேங்காய் எண்ணெயும் சம அளவு கலந்து தலையில் தேய்த்தால் பொடுகுத் தொல்லை மறையும்.
* சவர்க்காரத்திற்குப் பதிலாக கடலைமாவை எலுமிச்சைச் சாற்றில் கலந்து குழைத்து உபயோகித்தால் சருமத்தில் உள்ள இறந்த செல்கள் உதிர்ந்து தேகம் புத்துணர்ச்சி அடையும்.
* வாரத்தில் ஒரு தடவை வெந்தயத்தை அரைத்துத் தலையில் தேய்த்து சிறிது நேரம் ஊற வைத்துப் பின் தலையில் குளித்தால் தலைமுடி உதிராமல் அடர்த்தியாக வளரும்.
* ஒரு டம்ளர் நீரில் கால் தேக்கரண்டி பெருங்காயப் பொடி சேர்த்து உப்புப் போட்டு கலக்கிக் குடித்து வந்தால் நாளடைவில் வாயுத் தொல்லை குறையும்.
* பருப்பில் இரண்டு தேக்கரண்டி நல்லெண்ணெய் விட்டால் விரைவில் வேகும்.

## இனிய இல்லறத்துக்கு....

இன்று கணவன் — மனைவியிடையே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவர்களிடையே பிரச்சினைகள் ஏற்படுவதற்கு உணவு, பொருளாதாரம், ஈகோ, செக்ஸ் என்ற நான்குமே அடிப்படைக் காரணங்களாகும்.

கணவன்—மனைவியிடையே பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கப் பின்வரும் ஆலோசனைகளைக் கருத்திற் கொள்ளுங்கள்.

- உணவு விஷயத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துங்கள்.
- அதிக பழங்களையும், பச்சைக் காய்கறிகளையும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- குடும்பச் செலவுகளை இருவரும் முதலிலேயே திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.
- ஆடம்பரச் செலவுகளையும், தேவையற்ற செலவுகளையும், அதிக திருமண நிகழ்வுகளில் கலந்துகொள்வதையும் குறைத்துக் கொள்ளுங்கள்.
- குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை இருவருமாகச் சேர்ந்து வாங்குங்கள்.
- இருவரும் தான் உயர்ந்தவன், தான் உயர்ந்தவள் என்ற ஈகோவை விட்டுவிடுங்கள்.
- எந்தப் பிரச்சினை என்றாலும் செக்ஸ் உறவைத் தவிர்க்கக் கூடாது.

பிரச்சினைகள் அதிகம் இருக்கும் போது செக்ஸ் உறவைத் தொடர வேண்டும் என செக்ஸ் நிபுணர்கள் வலியுறுத்துகிறார்கள். செக்ஸ் உறவு மன இறுக்கத்தைக் குறைக்கின்றது, சிந்தித்து செயற்படுத்த உடலில் புது உத்வேகத்தை அளிப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

படுக்கை அறையில் கணவன் — மனைவி உலக விஷயங்களையும் அன்று நடந்த விஷயங்களையும் பற்றிப் பேசாமல் மாறாக குடும்பப் பிரச்சி னைகளைப் பேசி தமக்கிடையே பிணக்குகளை வளர்த்துக் கொள்வதாக உளவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கணவன் — மனைவி இடையிலே பிரச்சினை ஏற்படுவதற்கு உடல் ஆரோக்கியமின்மையும், சுத்தமின்மையும் காரணங்களாக அமைகின்றன.

எனவே கணவன்—மனைவி இருவரும் உடலை ஆரோக்கியமாகவும், சுத்தமாகவும் வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.



## தூக்கத்தில் நடப்பது நோயல்ல, குறைபாடே!

அனேகமான குழந்தைகள் நித்திரையில் அழுவார்கள், நடப்பார்கள், பயத்தில் அலறுவார்கள். இப்படியான செயற்பாடுகளை நோய் என்று பல பெற்றோர் அஞ்சுகின்றனர்.

உண்மையில் இது நோயல்ல, தீர்வு காணக்கூடிய குறைபாடே ஆகும். குழந்தைகளுக்கு நித்திரையில் ஏற்படும் குறைபாடுகளைத் தீர்க்க சில ஆலோசனைகள்:—

* இரவு ஒன்பது மணிக்கு முன்னதாக குழந்தைகளைப் படுக்கப் பழக்குங்கள்.
* குழந்தைகள் தமது சிந்தனையை வேறு விடயங்களில் திசை திருப்பாதபடி நல்ல கதைகளைச் சொல்லித் தூங்கச் செய்யுங்கள்.
* அதிர்ச்சி, பயம், பரபரப்பு, மிதமிஞ்சிய சந்தோஷம், கவலை போன்ற உணர்ச்சிகள் நித்திரைக்குப் போகு முன் ஏற்படுவதைத் தவிருங்கள்.
* விருந்துகளுக்கு குழந்தைகளை அழைத்துச் சென்று இரவில் தாமதமாக வீடு திரும்புவதைத் தவிருங்கள்.
* குழந்தைகளைத் தனியாக வீட்டில் விட்டுவிட்டு செல்வதைத் தவிருங்கள்.
* நித்திரைக்குப் போகும் முன் தொலைக்காட்சியில் திகில் தொடர்களையோ, வன்முறைக் காட்சிகளையோ குழந்தைகள் பார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டாம்.




* தூங்கப் போகுமுன் குழந்தைகள் இனிமையான இசையைக் கேட்கச் செய்யுங்கள்.
* மாலையில் தேநீர், கோப்பி போன்றவற்றைக் குடிக்கக் கொடுக்க வேண்டாம்.
* குழந்தைகளுக்கு எதிரில் பெற்றோர் சண்டை போடுவதையும், உரக்கப் பேசுவதையும் தவிர்க்கவேண்டும்.
* குழந்தைகளின் அறையில் நல்ல காட்சிகளையுடைய படங்களை ஒட்டி வையுங்கள்.
* குழந்தைகளுக்குத் தூக்கத்தில் நடக்கும் பழக்கம் இருந்தால் அறையின் கதவுத் தாழ்ப்பாள் அவர்களின் கைகளுக்கு எட்டாதபடி இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
* குழந்தைகளின் அறையில் காயங்களை ஏற்படுத்தக்கூடிய கூர்மையான பொருட்கள் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.
* அன்று என்ன நடந்தது என்பதைக் குழந்தைகளோடு பெற்றோர்கதைத்துப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
* இது தீர்வு காணக்கூடிய பிரச்சினை என்பதால் பெற்றோர் கவலைப்படத் தேவையில்லை.

## புதிய தொடர்கதை

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

**இதழ் — 1**

**மு. சிவநேசன்**



படு பிஸியான அந்த போர்ட் நகரத்தில் இரவும் ஓய்வு ஒழிச்சல் கிடையாது. மின் விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. ஆயிரம் சூரியன்கள் போல அவை உயரத்தில் ஒளிவீசிக்கொண்டிருக்க கண்ணில் பட்டதெல்லாம் இரவில்தான் ஜொலிக்கும் அழகு நகரம் அது.

இருபத்து நான்கு மணிநேரமும் சுறுசுறுப்பாக இயங்கும் அலுவலகங்களுக்கோ அங்கே குறைவில்லை. பத்திரிகை அலுவலகங்கள், வங்கிகள், வைத்திய நிலையங்கள், கஸினோக்கள் எனப்படும் சூதாட்ட மையங்கள், இரவுக் கழகங்கள், விடுதிகள் எனப் பற்பலவும் இரவில்தான் சுறுசுறுப்படைகின்றன.

என்னதான் விசாலமாக இருந்தாலும் நகரத்தின் சாலைகளில் நெரிசலுக்கோ குறைவில்லை. அதற்குள்ளும் லாவகமாக தனது நாற்பத்தைந்து அடி நீளமான பிரமாண்டமான சொகுசு பஸ்ஸை பின்புறமாகச் செலுத்தி நுழைத்துக் கொண்டிருந்தான் ஜெபன்.

பஸ் தரிப்பிடத்தில் தீப்பெட்டிகளை அடுக்கியதுபோல நெருக்கமாகவும் ஒழுங்காகவும் பஸ்கள் அணிவகுத்து நிற்கின்றன. இரவுநேர நெடுந்தொலைவுப் பயணத்திற்கான பஸ்களே பெரும்பாலும் அங்கு காத்திருந்தன.

அவை அங்கு வருவதும் போவதும் கணினிகளால் கட்டுப்படுத்தப்படுவதுபோல துல்லியமான நேரத்திற்கே நிகழும். நேரமோ இரவு ஒன்பதை எட்ட இன்னும் இரண்டொரு நிமிடங்களே இருந்தன. ஒன்பது மணிக்கு ஜெபனின் பஸ் புறப்பட்டாக வேண்டும்.

அறுபத்திரண்டு பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய அந்த பஸ்ஸில் அன்று அறுபது ஆசனங்கள் பதியப்பட்டிருந்தன. பயணிகள் அனைவரது நோக்கமும் பெரும்பாலும் சுமார் எண்பது மைல்கள் தொலைவில் உள்ள ஏரிக்கரை ஹொட்டேலுக்கு போவதாகத்தான் இருக்கும். விடியற்காலையில் திரும்பி வருவதற்கான ஆசனப் பதிவையும் அவர்கள் ஏற்கனவே செய்துவிட்டனர்.

எல்லோருமே வசதியானவர்கள்தான். தனிப்பட்ட வாகன வசதிகள் இருந்தும் ஒரு ஓய்வுக்காகவும் உல்லாசத்திற்காகவும் பயணப் பாதுகாப்பிற்காகவுமே பஸ்ஸை நாடுகிறார்கள். அநேகமாக அனைவருமே வழமையாகச் சனிக்கிழமைகளில் வருபவர்கள்தான். ஜெபனின் வாடிக்கைப் பயணிகள்தான்.

இரண்டொரு புதிய முகங்களும் பயணத்தில் இணைவது வழமை. என்றாலும் கடைசி நேரத்தில் அவசரமாக புக் பண்ண வருபவர்களை ஜெபன் ஏற்பது கிடையாது. பயணிகளின் பாதுகாப்பில் குறியாக இருக்கும் அவனுக்கோ இந்தக் கடைசிநேர அவசர புக்கிங்களால் வரும் ஆபத்துக்கள் பற்றியெல்லாம் தெரியும்.

பெரும்பாலும் கஸினோக்களுக்குச் செல்லவே அவனது வாடிக்கையாளர்கள் வருகிறார்கள். சூதாட்ட மையங்களுக்குச் செல்பவர்கள் பொதுவாக பெருமளவு பணத்தை எடுத்து வருகிறார்கள். தனித்துச்செல்வதும் புதியவர்களுடன் செல்வதும் பாதுகாப்பில்லை என்றே அவர்கள் நினைக்கிறார்கள்.

ஏரிக்கரை ஹொட்டேலும் லேக்வியு ரவுணும் கஸினோக்களுக்குப் பெயர் பெற்றவை. பிரசித்தி பெற்ற மதுபான நிலையங்களும், உணவுப் பிரியர்களுக்கான வசதிகளும் அங்கே தாராளம். எனினும் இரவு விடுதிகளோ விபசாரமோ அங்கு மிக மிகக் குறைவு. எய்ட்ஸ் அச்சுறுத்தலும் அங்கு கூடும் பெரிய மனிதர்களின் பண்புகளும் இத்தகையதோர் நவீன நகரத்தை உருவாக்க முயன்றுகொண்டிருந்தன. என்றாலும் ஒன்றிரண்டு விதிவிலக்குகள் இல்லாமலா போகும்?

சனிக்கிழமை இரவு என்றதும் அங்கு கூட்டம் அமோகமாக இருக்கும். ஞாயிறு பகல் ஏரிக்கரை ஓஹோ என்றிருக்கும். குடும்பமாக வந்து குதூகலிக்கவும் அதுதான் பாதுகாப்பான இடம். ஞாயிறு மாலையில் கூட்டம் கலையத் தொடங்கும். வார இறுதி விடுமுறையைக் கண்ணியமாகக் கொண்டாட அதைவிடச் சிறந்த இடம் உலகில் வேறெங்கும் கிடைக்காது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஹொட்டேல்கள் அந்த . ஏரியைச் சுற்றி அமைந்திருந்தன. நகரம் முழுவதுமே ஏரியைப் பார்த்தபடி இருப்பது அதற்குப் பெருமை சேர்க்கிறது. பளிங்கு போல ஏரியில் நீர்ப்பரப்பு பார்ப்பவர் மனங்களை அள்ளும். ஆயுள் முழுவதும் விடுமுறையைக் கழிக்க வேறு எதுவுமே தேவைப்படாது.

நகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதில் அந்த நிர்வாகம் மிகவும் கவனமாகவே இருந்து வருவது அடுத்த சிறப்பம்சம். எத்தனை லட்சம்பேர் கூடினாலும் அங்கு ஒரு கடதாசியைக் கூடப் பொறுக்க முடியாது. ஹொட்டேல்களிலெல்லாம் தலையாக விளங்குவது ஏரிக்கரை ஹொட்டேல்தான். அதன் வசதிகளோ அதி உச்சம். அதன் ஒவ்வொரு அறையும் ஏரியைப் பார்த்தபடிதான் அமைந்திருக்கிறது. ஏரியில் படகு விடும் காட்சிகளையும் படகினில் களிக்கும் காதல் இளஞ் சோடிகளையும் அறைகளில் இருந்தவாறே ரசிக்கலாம்.

ஏரிக்கரை ஹொட்டேலுக்கெனத் தனியான படகுத் துறையொன்றும் அங்கே அமைந்திருக்கின்றது. அத்தனை அறைகளிலும் உள்ளவர்களும் ஒரே நேரத்தில் படகில் புறப்பட வேண்டுமானாலும் அதற்கான வசதிகள் அங்கே இருந்தன. படகுகளிலேயே இரவைக் கழிக்கவும் கஸினோக்களைப் பயன்படுத்தவும் கூட இயலும். தனித்துச் செல்பவர்களுக்கென சிறிய படகுகள் முதல் பலரையும் ஏற்றிச் செல்லவல்ல பாரிய படகுகளும்கூட அங்கே காணப்பட்டன.

சரியாக நேரம் ஒன்பது மணி. போர்ட் பஸ் நிலையத்திலிருந்து ஜெபனின் பஸ் சக்கரங்கள் மெதுவாக உருளத் தொடங்குகின்றன. பாரிய அதன் முகப்புக் கண்ணாடிகள் பஸ்ஸினுள் உள்ள எல்லாவற்றையும் துல்லியமாகக் காட்டிக் கொண்டிருந்தன. அதுவே ஒரு உல்லாச ஹொட்டேல் ஊர்ந்து வருவது போலத் தானிருக்கும்.

பஸ்ஸினுள்ளே பால்போலும் வெண்ணிறமாக ஒளிரும் வரிசையான கூரை மின்விளக்குகள், பக்கங்களில் வெளியே தெரியும் வர்ணமின் குமிழ்கள் என்றெல்லாம் ஒரே ஒளிமயம்தான்.

ஜெபனின் தலைக்கு மேலே இருந்த தொலைக்காட்சித் திரையின் இருண்ட முகப்பில் பஸ்ஸின் உட்புறக் கோலங்கள் காட்சியாக ஓடிக்கொண்டிருந்தன. சற்று நேரத்தில் உட்புற லைட்டுகளை அணைத்துவிட்டான் ஜெபன்.

இப்போது உள்ளே இருள் கௌவிக் கொள்ள நகரத்து மின் விளக்குகள் பலவும் தொலைக்காட்சித் திரைக்குள் நட்சத்திரங்களைப் போலப் புகுந்து ஆழ அமிழ்ந்து மறைந்து கொண்டிருந்தன. அழகுத் தொடராகப் புகும் அவ் ஒளிக் குவியல்களின் காட்சி மறையுமுன்னே தொலைக்காட்சித் திரை விழித்துக் கொண்டது.

திரைப்படத்தின் முக்கிய கட்டங்கள் அன்றைய திரைவிருந்தாக ஓடத் தொடங்கின.

பஸ்ஸும் நகரப்புறத்தைத் தாண்டிப் பிரதான சாலைக்கு ஏறிவிட்டதும் வேகம் பிடித்தது. இதமாக மெதுவாக பரவும் தொலைக்காட்சி ஒலி எவருக்கும் தலைவலியைத்தரவில்லை. சொகுசு இருக்கைகளில் இருந்தவாறே அந்த அறுபது பேரும் பார்க்க வசதியான உயரத்தில் காட்சி தெரிந்தது. கண்களைக் கூசவைக்காத அளவான வெளிச்சம் உறங்குவோரை உறங்க அனுமதித்தது.

சாலையைத் தழுவி அசுர வேகத்தில் சுழலும் சில்லுகளின் இரைச்சலோ எஞ்சின் ஓசையோகூட இதமாகத்தான் இருந்தது. பயணிகள் பலரும் உறங்கி ஓய்வெடுத்துக் கொண்டனர்.

சுமரா என்ற முப்பத்தைந்து வயதுப் பெண் ஒரு சட்டத்தரணி. எப்போதும் கேஸ்களில் படு பிஸியாக செயற்படும் அவள் ஒரு கட்டாய ஓய்வுக்காக சனிக்கிழமைகளில் இப்படி வருவாள். இப்படி வரும்போதும்கூட ஓய்வு என்றில்லாமல் சிலவேளைகளில் புதிய கேஸ்களும் கிடைத்துவிடுவதுண்டு.

சுமராவைக் கண்டால் கோர்ட்டில் நடுங்காத சட்டத்தரணிகளே இல்லை என்று கூறிவிடலாம். அவளது கைக்கு கேஸ் கிடைத்துவிட்டால் எவரும் எதிர்வாதம் செய்யத் தேவையில்லை. அவள் பக்கமே தீர்ப்பை வழங்கிவிட்டால் யாரும் மூக்குடைபடத் தேவையில்லை என்கிற நிலைமைதான்.

தொலைக்காட்சி நாடகத்தை ரசித்தபடி அவள் ஆசனத்தைச் சற்றுப் பின்நோக்கிச் சாய்க்கிறாள். வீட்டில் இருக்கும்போது தொலைக்காட்சி பார்க்க கணமேனும் அவகாசம் கிட்டுவதில்லை. தன்னைப் பட்டியால் ஆசனத்துடன் பிணைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

எல்லாப் பயணிகளும் ஆசனப் பட்டியைப் பயன்படுத்தியே தீரவேண்டும் என்பது ஜெபனின் கண்டிப்பான அன்பு கலந்த எதிர்பார்ப்பு. அவனது வேகம் பயணிகளைத் தாமாகவே பட்டிகளைப் போட வைத்துவிடும். பாதையில் சீராக இயங்கும் வாகனத்தில் உறக்கத்திலிருக்கும் பயணிகள் ஏதாவது இக்கட்டான வேளைகளுக்காக பட்டிகளையே நம்பியிருக்கிறார்கள்.

பஸ்ஸினுள் மங்கலான வெளிச்சம் மட்டுமே இருந்தது. நடமாட்டங்களை உருவ அளவில் அவதானிக்க அது போதுமானது. நெடுஞ்சாலையில் ஆங்காங்கே வெளிச்சம் தென்பட்டாலும் அதுவும் பெரும்பாலும் இருளாகவே இருந்தது. வாகனப் போக்குவரத்து கணிசமாக இருந்தது.

வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு பஸ்ஸினுள் எதுவும் தெரியாது. தொலைக்காட்சித் திரை மட்டும் புலப்படும். உறக்கத்தில் இருந்த சுமரா திடீரென பஸ்ஸின் தொலைக்காட்சித் திரையும் ஓய்ந்து இருண்டது கண்டு திடுக்கிட்டு எழுந்தாள்.

சுற்றும் முற்றும் பார்த்தாள். பலரும் அமைதியாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். இரண்டொருவர் வழமைபோல நடைபாதையில் பின்புறம் போய்வந்து கொண்டிருந்தனர்.

நகர நெரிசலுக்குள்ளிருந்து ப்ஸ்ஸை விடுவித்தபின் ஜெபனின் தோள்களுக்குச் சற்று ஓய்வுதான். ஸ்ரியரிங்கின் மீதான அழுத்தமான பிடி சற்றுத் தளர்ந்திருந்தது. ஓய்வுபெற்ற விமானப்படை கப்டனான அவனுக்கோ வயது நாற்பத்தைந்து தான் இருக்கும். வியட்நாம் யுத்தத்தில் பல சாகஸங்களுக்கான விருதுகளையும் அவன் பெற்றிருந்தான்.

அவனது கற்பனையில் இந்த பஸ்ஸும் ஓடுபாதையில் வேகம் பிடிக்கும் ஒரு விமானம் போலவே இருக்கும். எத்தகைய இக்கட்டான யுத்த நிலைமைகளையெல்லாம் அவன் தாண்டி வந்திருக்கிறான். அவனுக்கோ இது ஒரு விளையாட்டு மாதிரித்தான்.

ஒருமுறை அவனது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. எரிந்து புகையும் தீயும் உமிழும் அதனை அவன் ஒரு அளவான ஆழமுள்ள ஏரிக்குள் தரையிறக்கித் தப்பிக் கொண்டான். அவனது துல்லியமான கணிப்பு பல பெறுமதிமிக்க படையினரின் உயிர்களைக் காத்துவிட்டது. எவருக்கும் உயிர்ச்சேதமோ உரசல்காயங்களோகூட ஏற்படவில்லை. பலருக்கு எரிகாயங்கள் ஏற்பட்டே இருந்தன. அந்த விமானத்திலே பல இராணுவ உயரதிகாரிகள் இருந்தனர்.

அதுவும் ஜெபனுக்கோ கடுமையான எரிகாயங்கள். வலியோடும் தீயோடும் போராடி அவன் நிலைமையைச் சமாளித்திருந்தான். கிடைத்த விருதுகளைவிட உடலில் ஏற்பட்ட தழும்புகளையிட்டே அவன் பெருமைப்படுகிறான்.

தொலைக்காட்சி நின்றுபோனதும் திடுக்கிட்டுத் திரும்பினான் ஜெபன். முன்னாலே ஹெட்லைட் வெளிச்சத்தில் சாலையைப் பார்த்துக் கொண்டே இருந்தவனுக்கோ உள்ளே எல்லாம் இருள்மயமாகத்தான் தெரிந்தது.

உள் லைட்டுகளைப் போடுவதற்கு உரிய சுவிச்சுகளில் கை வைக்கவும் அவனது வலது மணிக்கட்டை இரும்புக் கரங்கள் பிடித்துக் கொண்டன.

''அசைந்தால் சுட்டுப் பொசுக்கிவிடுவேன்'' என்றான் ஒருவன் பின்னால் நின்றபடி.

— அடுத்த வாரம் தொடரும்

# காட்டில் தேடப்படும் வீரப்பன் இன்டர்நெட்டில் புகுந்தது எப்படி?


தனது சகாக்களுடன் வீரப்பன்

கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தை அடுத்து சந்தனமரக் கடத்தல் மன்னன் வீரப்பனைப் பிடிக்கும் முயற்சியில் தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களின் பொலிஸ் படைகள் இறங்கியிருந்தன.

ஒரு மாதத்தில் பிடித்து விடுவோம். ஒரு வாரத்தில் பிடித்து விடுவோம். ஒரு சில நாட்களுக்குள் பிடிப்போம் என்றெல்லாம் அறிவிப்புகள் வெளியாகின. ஆனால் இன்று வரை வீரப்பன் பிடிபடவில்லை.

தமிழ்நாடு—ஆந்திர பிரதேச எல்லைக் காடுகளுக்குள் பதுங்கியிருக்கும் வீரப்பன் இப்பொழுது திடுதிப்பென இன்டர் நெட்டுக்குள் புகுந்து ஆச்சரியத்தைஏற்படுத்தியிருக்கிறான்.

இது நாள் வரை கஸட்டில் மட்டுமே வீரப்பனின் கொள்கை முழக்கங்கள் ஒலித்தன. இப்போது இன்டர்நெட்டிலும் அவனது முழக்கங்கள் எக்காளமிட ஆரம்பித்துள்ளன.

தலித்துக்களின் தேசம் என்று பொருள் கொண்ட முகவரியினுள் நுழைந்தால்.... இன்டர்நெட் வலைத்தளத்தில் வீரப்பன் பிரிகேடியர் என்ற பட்டத் துடன் கம்பீரமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறான்.

இதில் உள்ள தமிழ்நாட்டின் வரைபடம் ஒரு சில மாற்றங்களுடன் காணப்படுகிறது. வரைபடத்தில் தாங்கள் காட்டியுள்ள அகண்ட தமிழ்தேசத்தை அடைவதுதான் தங்கள் இலட்சியம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டைத் தனியாகப் பிரித்தெடுத்து அதனுடன் கேரளா, கோலார் தங்கவயல், லட்சத் தீவுகள், மொரீஷியஸ், மாலைதீவுகள் என்று எல்லாவற்றையும் இணைத்தால் அகண்ட தமிழ் தேசம் உருவாகுமாம். இதை வென்றடையும் தளபதி மாறன் எனவும் போருக்கான தலைவன் பிரிகேடியர் வீரப்பன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முரசறையும் முழக்கங்கள் இருக்கட்டும் இந்த இணையத்தளத்தைத் தொடங்கியது யார்? என்ற கேள்வி பலரையும் குடைய ஆரம்பித்துள்ளது.

இணையத்தளத்தில் காணப்படும் சில அடிப்படைத் தவறுகளை வைத்து TNLA எனப்படும் தமிழ்நாடு விடுதலைப் படையினர் நேரடியாக இதைத் தொடங்கி யிருக்க வாய்ப்பில்லை என்கின்றனர் இந்த அமைப்போடு நெருக்கமானவர்கள். காரணம் அமைப்பின் பெயரே இணையத் தளத்தில் தவறாகக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. TNLA என்பதுதான் அமைப்பின் பெயர். ஆனால் தளத்தின் பல இடங்களில் TNLF என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தமிழ்நாடு விடுதலைப்படையினரின் சார்பில் அகண்ட தமிழ்தேசமே இலட்சியம் என அறைகூவல் விடுத்திருக்கும் நபர் அல்லது நபர்கள் TNLAயின் ஆதரவாளர்களா? என்ற கேள்வியும் எழாமலில்லை.

அது மட்டுமல்ல TNLAயின் சில கொள்கைகளும் தளத்தில் வேறு பட்டிருக்கின்றன.

(1) தனித் தமிழ் நாடு– TNLA கொள்கை. ஆனால் இணையத்தளத்தில் அகண்ட தமிழ் தேசம் என்றிருக்கிறது.

(2) தமிழ்நாடு விடுதலைப்படையில் தலித்துக்களின் பங்கு இல்லை. அப்படியிருக்க, தலித்களின் தேசம் என்று பொருள்படும் பெயரை எப்படி வைப்பார்கள்? சைபர் க்ரைம் எனப்படும் இந்த வகை கம்பியூட்டர் குற்றங்கள் மில்லேனிய வளர்ச்சியில் சாதாரணமானவை. யார் வேண்டுமானாலும் யார் பெயரிலும் பதிவு செய்து இணையத்தளத்தை ஆரம்பிக்கலாம்.

இதுவும் அப்படிப்பட்ட ஒன்றா? அல்லது தமிழ்நாடு விடுதலைப் படையின் ஆதரவாளர்கள் யாராவது அமைப்பின் விவரங்களைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் செய்த வேலையா? அதிகாரிகள் தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.

எது எப்படியோ வீரப்பனின் வீர முழக்கங்கள் இணையத்தளத்திலும் முரசறைந்து விட்டன.

—ஷாம்


வீரப்பன்

# மக்கள் மீது அரசு மேலும் சுமைகளை ஏற்றப்போகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கூறுகிறார்

''சர்வதேச நாணய நிதிச் சபையுடன் ஜனாதிபதி சந்திரிகா கடந்த மார்ச் மாதத்தில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டார். அந்த ஒப்பந்தப்படி நாட்டு மக்கள் மீது மென்மேலும் சுமைகளைச் சுமத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது'' என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

அநுராதபுரம் மாவட்ட ஐ.தே.க. தொழிற்சங்க சம்மேளன கூட்டத்தில் ரணில் உரையாற்றினார். அங்கு அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

''சர்வதேச நாணய நிதிச்சபையுடன் ஜனாதிபதி பல நிபந்தனைகளுக்கு இணங்கியுள்ளார். அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தாதிருத்தல், ஜி.எஸ்.ரி. வரியை அதிகரித்தல், டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் விலைகளை அதிகரித்தல் ஆகியவற்றுக்கு அவர் இணங்கியுள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு ஆகியவற்றை முற்றாக நிறுத்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவும் நேரிடும். அதேவேளை போக்குவரத்துக் கட்டண உயர்வையும் தவிர்க்க முடியாததாகிவிடும். அடுத்து வரும் சில நாட்களில் கோதுமை மாவு விலை அதிகரிக்கப்படலாம் எனத் தெரிகிறது. அத்தோடு தண்ணீர்க் கட்டணத்தையும் அதிகரிக்க அரசு எண்ணியுள்ளது.

டாலரின் பெறுமதி சில தினங்களில் 95 ரூபாவாக உயரலாம் என பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். ரூபாவின் பெறுமதி குறைந்தால் இறக்குமதிப் பொருள்கள் அனைத்தினதும் விலையை உயர்த்த நேரிடும்.

# மாவனல்லை விவகாரம் அரசு ஏமாற்றக்கூடாது

மாவனல்லைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றவன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட பள்ளிவாசல்களைப் புனருத் தாரணம் செய்ய மொத்த சேதங்களில் 40 சதவீதத்தையே அரசு வழங்க அதிகாரம் இருப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அண்மையில் நாடாளுமன்றில் தெரி வித்துள்ளார். ஆனால் உண்மைக்குப் புறம் பாக அரச ஊடகங்கள் இது தொடர்பாகச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இப்படி ஐ.தே.க எம்.பி. யான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவிக்கின்றார்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் அமைச்சினூடாக இந்தப் புனர்நிர்மாணப் பணிகளுக்கு ஒரு லட்சம் ரூபா பணத்தை முற்பணமாக வழங்க அனுமதியளிக் கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

சேதமடைந்த பள்ளிவாசல்கள் முழுமை யாகப் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டும் என்று தமது கட்சி வலியுறுத்துவதாக அஸ்வர் எம்.பி ஊடகங்களுக்கு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:—

முன்பு ஏனைய இடங்களில் இவ்வித அசம்பாவிதங்கள் நடைபெற்ற பொழுது பூரண நஷ்டஈடு வழங்குவதாக அரசாங்க அமைச்சர்கள் கூறியிருந்தனர். அவை இன்று வரை நிறைவேற்றப்படாமலிருக்கும் வாக்குறுதிகளைப் போன்று மாவனல்லை விடயத்திலும் அரசாங்கம் முஸ்லிம்களை ஏமாற்றக்கூடாது.

மாவனல்லை சம்பவங்களை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் குழுவில் ஒரு முஸ்லிம் உயர் பொலிஸ் அதிகாரியையும் சேர்த்துக் கொள்வது மிகவும் முக்கியமான தாகும். இப்படிச் செய்வதன் மூலமே பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தமுடியும்— என்றார்.

# குச்சவெளியில் இருசாரார் மோதல்;

பள்ளிவாசல் பரிபாலனம் சம்பந்தமாக இருசாராரிடம் இருந்து வந்த பகைமை முடிவில் வெட்டுக்குத்தில் முடிந்துள்ளது. இதனால் இரு ஆசிரியர்கள், ஒரு பெண் உட்பட எட்டுப் பேர் பலத்த காயங்களுடன் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கடந்த வெள்ளி விடியற்காலை 5.00 மணியளவில் குச்சவெளிப் பிரதேசத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது. சம்பந்தப்பட்ட நபர்களில் ஒன்பது பேரை திருமலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் வருமாறு:— குச்சவெளிப் பிரதேச பள்ளிவாசல் ஒன்றின் நிருவாக கடமைகளை ஒரு குழுவினர் நீண்டகாலமாக செய்துவந்தனர். புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்யவில்லை. இதை ஆட்சேபித்த அப்பிரதேச மக்களும் இளைஞர்களும் கூட்டாக புதிய நிருவாக சபை ஒன்றைத் தெரிவு செய்தனர். இதுகுறித்து முன்னைய நிருவாகத்தினர் முஸ்லிம் சமய கலாசார அமைச்சில் முறையிட்டனர். பின்னர் இருசாராரும் கலாசார அமைச்சின் விசாரணைக் குழுவினரால் விசாரிக்கப்பட்டு ஜூன் மாதம் அமைச்சின் உத்தியோகத்தர்கள் நேரடியாகச் சமுகமளித்து புதிய நிருவாக சபை தெரிவு செய்யப் படுமென திகதியும் குறித்து அறிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே மேற்படி தகராறு நடந்துள்ளது.

கத்தி, பொல்லு, வாள், சைக்கிள் செயின் போன்ற ஆயுதங்கள் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிரச்சினையில் சம்பந்தப்படாத சிலரும் தாக்கப்பட்டுள்ளனர். நிலாவெளி அல்பற்று மகா வித்தியாலய ஆசிரியர் ஒருவர் காயமடைந்தோரைப் பார்க்கவென்று வைத்தியசாலைக்குச் சென்றவேளை வைத்தியசாலை வளாவினுள் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்த நபர் ஒருவர் சுடர் ஒளிக்குத் தகவல் தருகையில் ''இறை இல்லத்தைப் பரிபாலிப்பவர்களிடம் பொறுமையும் விட்டுக்கொடுப்பும் இருத்தல்வேண்டும். ஆனால் அவர்களிடம் அது இல்லாமல் போய்விட்டது'' என்றார்.

— சுஜா

# ஹெரோயின் வாங்கப் பணம் தேடியோர் செய்த கொலை!

நீர்கொழும்பு மல்வத்தை புனித சூசையப்பர் ஆலய குருவான கொஸ்தா (வயது 76) போதைவஸ்துக்கு அடிமையான மூவராலேயே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த மூன்று சந்தேக நபர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் நீர்கொழும்பு, அலுத்வத்த பகுதியைச் சேர்ந்தவர். மற்றையவர் தலாதுவ பகுதியைச் சேர்ந்தவர். இருவரும் ஹெரோயின் போதைவஸ்துக்கு அடிமையானவர்கள். ஹெரோயின் வாங்கப் பணம் தேடவே இவர்கள் கொலையைச் செய்திருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலையாளிகளில் ஒருவர் குருமனையின் ஜன்னல் ஒன்றை உடைத்து உட்புகுந்துள்ளார். பின்னர் மனையின் கதவைத் திறக்கவே மற்றைய இருவரும் உள்ளே நுழைந் துள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் குரு வானவர் புத்தகம் படித்துக்கொண்டி ருந்துள்ளார். உள்ளே நுழைந்தவர் களை குருவானவர் அடையாளம் கண்டுகொண்டார்.

உடனே ஒருவன் குருவான வரைக் கத்தியால் குத்தியுள்ளான். மற்றைய இருவரும் அவரின் கழுத்தைப் பிடித்து நெரித்துள்ளனர்.

இந்த விவரங்கள் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளன.

# கல்முனை தனி மாவட்டம் ஜே.வி.பி. எதிர்ப்பு

கல்முனை தனி மாவட்டமாக்கப்பட வேண்டும் என்ற முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைக்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இது தொடர்பாக அறிக்கை விடுத்துள்ளார்.

''முஸ்லிம் மக்கள் நாடு முழுவதிலும் ஏனைய இனத்தவர்களுடன் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். இந்நிலையில் அம்பாறை மாவட்டத்தை இரண்டாகப் பிளந்து தனியான முஸ்லிம் மாவட்டம் அமைக்கும் இனவாத முயற்சியை தோல்வியடையச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




சுடர் ஒளி
நடத்திய
கேள்விக் கணைகளும்
விமர்சன மாலையும்
தங்கப் பதக்கப்
பரிசுப் போட்டி முடிவுகளும்
பரிசு பெற்றோர் விவரங்களும்
அடுத்த வார இதழில்
வெளிவரும்.




## சட்டி சுட்டதடா கை விட்டதடா

பச்சைக்கட்சிக்காரர்களுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டபோது தேசியப் பட்டியலுக்கு பிரேரிக்கப்பட்டு அதிகாரமன்றில் உறுப்பினராகிவிட்ட அந்த 'டுப்ளிகேட்' ராஜா தடாலடி நடவடிக்கையில் இறங்கி விட்டதனால் அவர் பற்றி உறுதியான தீர்மானம் எடுக்க முடியாமல் மலையகத்தின் முன்னணி பந்தை திசை திருப்பி விட்டிருக்கிறதாம்.

கட்சிக் கொள்கைக்கு கட்டுப்படவும் அதிகாரமன்றப் பதவியிலிருந்து விலகவும் மறுத்து விட்ட அந்த டுப்ளிகேட் ராஜாவை அந்த முன்னணி தனது கட்சியில் இருந்து வெளியேற்றி விட்டதாம். ஆனால் அந்த ராஜாவுக்கு பொகவந்தலாவையில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து டுப்ளிகேட்டுக்கு ஆதரவாக பொகவந்தலாவையில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஆதரவாளர்களை திசை திருப்பிவிட முன்னணியின் சேகரனாரும், லிங்கத்தாரும் தோட்டப்பகுதித் தலைவர்களைச் சந்தித்து வருகிறார்களாம்.

டுப்ளிகேட்டுக்கு எதிரான நடவடிக்கைகள் இவ்வளவு தானா? என்று அரசியல் அம்பலத்தார் தேடி விசாரித்த போது முன்னணியில் இருந்து அசமந்தமான பதில்களே கிடைக்கின்றன.

''எமக்குத் தெரியாது களவாக சத்தியப் பிரமாணம் செய்த போதும் நாம் பொறுமையைக் கடைப்பிடித்தோம். அவரின் கோரிக்கைகளைக் கவனத்தில் கொண்டு செயற்படவிருந்தோம். இப்போது கட்சிக்கு எதிராகச் செயற்பட்டு ஆர்ப்பாட்டமும் நடத்துகிறார்'' என்று சோகமாகத் தெரிவிக்கிறார்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள்.

அப்படியானால் தேசியப்பட்டியலுக்கு டுப்ளிகேட்டாகப் போடப்பட்டவரின் அதிகார மன்றுப் பதவியை இல்லா தொழிக்க நடவடிக்கை இல்லையா?

''இதுபற்றி பச்சைக் கட்சி தான் முடிவு செய்ய வேண்டும்'' என்று முன்னணியின் உயர் குழுவில் அங்கம் வகிக்கும் சிலர் தெரிவிக்கின்றனர்.

பச்சைக் கட்சி ஏன் இதுவரை முடிவு எடுக்கவில்லை? என்று கேட்டால், ''எமது தலைவர் விரைவில் பச்சைக் கட்சியுடன் பேசுவார்'' என்கிறார்கள்.

பந்தை திசைமாற்றி, ராஜா பற்றித் தீர்மானம் எடுக்கும் உரிமையை பச்சைக் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப் போகிறார்கள். சட்டி சுட்டதடா கைவிட்டதடா என்ற நிலைதானாம் முன்னணிக்கு.

அதே நேரம் இந்த விவகாரத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கும் முயற்சிகளும் மறை முகமாக நடக்கின்றனவாம். பச்சைக் கட்சியும் கடும் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என கதை அடிபடுகிறது.

## ஏன் இந்தக் கோபம்?

வடக்குத் தமிழ் அமைச்சரின் கட்சி மீது நீண்ட காலத்துக்குப் பின் சீறிப்பாய்ந்திருக்கிறார் ராஜஸ்தான்காரர். வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கும், கொழும்பிலுள்ள ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கும் அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் சீறிப்பாய்ந்திருக்கிறார்.

மேதினத்தைக் கொண்டாடுவதற்கும், தொழிலாளர் உரிமை பற்றிப் பேசுவதற்கும் அந்தத் தமிழ் அமைச்சரின் கட்சிக்கு உரிமை இல்லை என்பது தான் அவரது வாதம்.

வடக்குத் தமிழ் அமைச்சர் வெறும் எம்.பியாக இருந்த காலத்தில் அவருடன் மிக நட்பாக இருந்த இந்த ராஜஸ்தான்காரர் திடீர் என்று இப்படிச் சீறிப் பாய்ந்த காரணத்தைத் தேடினால் அவரின் மனப்புழுக்கத்தை அவர் கட்சிக்காரர்களிடம் இருந்து அறிய முடியுமாம்.

ராஜஸ்தான்காரரின் கட்சியிலுள்ள முக்கிய புள்ளிகள் சிலர் அண்மைக்காலமாக வடக்குத் தமிழ் அமைச்சர் மீது அதிக பிரேமை செலுத்தி வருகிறார்கள். வேறு சில புள்ளிகள் கட்சியை விட்டு விலகி, அந்த அமைச்சருடன் இணைந்தும் கொண்டார்கள்.

அண்மையில் இந்த வடக்குத் தமிழ் அமைச்சரை, ராஜஸ்தான்காரரின் அணியைச் சேர்ந்த சூனாகூனாவும், சுபமானவரும் அந்தரங்கமாகச் சந்தித்துப் பேசினார்களாம்.

இது எதற்காக என்பது இன்னும் தெளிவாக்கப்படாத நிலையில், இப்படி அந்தரங்கமாகப் பேசியது ராஜஸ்தான்காரர்களுக்குப் பிடிக்கவில்லையாம். அதன் விளைவுதான் இப்படிக் காரசாரமாக ராஜஸ்தான்காரர் பேட்டி கொடுத்தார் என்று அவர் தரப்பு ஆட்கள் மத்தியில் கிசுகிசுக்கப்படுகிறது.

## டாக்டரின் அரசியல் ஆர்வம்

தீவிரமான அரசியல் ஆர்வம் இன்றித் தனது தெய்வீகமான தொழிலில் மட்டும் ஆர்வம் காட்டியவர் அந்த அம்மணி.

மாமனிதரின் மறைவுக்குப் பின் தீவிர அரசியலில் குதிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அவரது அப்போதைய நாட்டம் வேறு மாதிரித்தான் இருந்தது.

ஆனால் அந்த அம்மணி இப்போது தீவிர அரசியல் பற்றி யோசிக்கிறாராம். அடுத்த மாதம் கொழும்பு மாநகரில் தனது, சுகாதாரத்துறை மருத்துவ அதிகாரி பதவியில் இருந்து ஓய்வு பெறப் போகிறாராம்.

அரசியலில் ஈடுபடத் தகுதியும் திறமையும், பக்கப்பின் பலமும் இருக்கும் இவரை எப்படியும் இதில் இழுத்து விடவேண்டும் என்று கூறிவருகிறார்களாம் சில முக்கியஸ்தர்கள்.

எடுக்கும் முடிவு உறுதியானால் அட்வான்ஸாக வாழ்த்துக்கள்.

இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் கூட்டுப் பொறுப்பு, பொறுப்புணர்ச்சி என்ற பெயரில் முதுகெலும்பில்லாமல் நடந்து கொள்ளும் சில முசல்மான் அமைச்சர்கள், தனித்துவ தலைவர்மீது இன்னும் எரிச்சலுடன் தான் இருக்கிறார்களாம்.

இவர்களில் ஒருவருக்கு, முசல்மான்கள் தொடர்பான திணைக்களம், உயர் அமைப்பு போன்றவை தனக்குக் கிடைக்கவில்லையே என்ற கோபம் தணியவே இல்லையாம். இத்தனை வருடங்களாகியும் அண்மையில் இதுபற்றி முக்கியஸ்தர்கள் சிலரிடம் எரிச்சலோடு பேசியிருக்கிறாராம்.

தனித்துவத் தலைவருக்கு எதிராக அதிகார அம்மணியிடம் நன்றாக மூட்டிவிட்ட திருப்பணியைச் செய்தது இவர்தான் என்று கிசுகிசுக்கப்படுகிறது.

இதனால் தனித்துவத் தலைவரும் அதிகார அம்மணியும் மாவனல்லை விவகாரம் தொடர்பாக பேசியபோது அதிகார அம்மணி தனது நிலைமையையும் மறந்து தனித்துவத் தலைவருக்கு உரத்த குரலில் திட்டிப் பேசத் தொடங்கினார். அதற்குச் சமமாக உரத்த குரலில் தனித்துவத் தலைவர் எதிர்த்துப் பேசிய போது அதிகார அம்மணி உடனடியாக குரலைத் தாழ்த்திக் கொண்டாராம்.

இப்போது தனித்துவக் கட்சியின் போக்கு அதிகார அம்மணிக்கு சவால் விடுவது மாதிரி அமைந்திருக்கிறதாம். அபாய அறிவிப்புகளும் விடுக்கப்படுகிறதாம்.

ஆட்சி மாற்றத்துக்கு காரணகர்த்தாவாக இத்தலைவர் செயற்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்று பேசுவது காதில் விழுகிறது.

பச்சைக் கட்சித் தரப்பு உறுதியான முடிவுடனும், சரியான அணுகுமுறையுடனும் தனித்துவத் தலைவருடன் பேச்சு நடத்தினால், இதுபற்றி கட்சி உயர்மட்டத்தில் பேசி உறுதியான முடிவை எடுக்க முடியும் என்றே பெரும்பாலான தனித்துவக்கட்சி முக்கியஸ்தர்கள் கருதுகிறார்களாம்.

''அதிகார அம்மணியின் பேச்சுக்கள், செயற்பாடுகளினால் நாம் மனம் புண்ணாகியிருக்கிறோம். எங்களை ஏமாற்ற முடியாது. கூட்டுப்பொறுப்பு எமக்குச் செல்லுபடியாகாது. இதை அவர்கள் மனதில் வைத்துக் கொண்டு செயற்பட வேண்டும். பல விடயங்களில் எம்மிடம்தான் துரும்புச் சீட்டு இருக்கின்றது. எதுவும் அரசியலில் நடக்கலாம்'' என்று பொரிந்து தள்ளுகிறார் தனித்துவக் கட்சித் தலைவரின் செயலாளர்.

## நகர பிதாவுக்கு விசாரணை வருமா?

சில காலத்துக்கு முன்பு ஊழல் விவகாரம் பற்றி ஆராயச் சென்ற கணக்குப் பரிசோதகர்களைத் தாக்கியதாகக் கூறப்படும் ஒரு நகரபிதாவுக்கு எதிராக ஆரம்பத்தில் அதிகார உயர்மட்டத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக இருந்தது.

ஆனால் பின்பு அரசியலில் ஆட்சி ஸ்திரத்தைப் பேணுவதற்காக அதிகார உயர் மட்டத்தில் எல்லாம் மூடிமறைக்கப்பட்டன. என்றாலும் கணக்குப் பரிசோதகர்கள் இவ் விடயத்தில் விட்டுக்கொடுக்கத் தயார் இல்லை என்று இப்போது தெரிகிறது.

கணக்கு வழக்கு விவரங்களையும் செய்த ஊழல்களையும் பகிரங்கமாக்கி அச்சிட்டு வெளியிட அந்தரங்கமாக முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவாம்.

அதிகார உயர்மட்டத்தினர் நகர பிதாவை பாதுகாத்து எமக்கு அநீதி இழைத்துவிட்டனர். உரிய விசாரணைக்கு வரும்வரை 'ஸ்ரைக்'' பண்ணவும் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கவும் முயற்சிகள் செய்து வருகிறோம் என்று மாகாண சபையொன்றின் கணக்குப் பரிசோதகர்கள் பகுதியில் பேசிக் கொள்கிறார்களாம்.



## கருவோடும் திருவோடும்

கருவோடு, திருவோடு பிறந்தீர்கள்; நன்று
நல் உருவோடு உலகோடு ஒட்டீரோ இன்று?
ஊரோட ஒத்தோடு என்றவ்வை
சொன்னாளேயன்று;
ஆனாலும் நீவிர் இன்று;
வீட்டோட்டில் நடுவோடு கழட்டி நின்று
ஊர் வீட்டில் புகுவீரே!
புகுந்தெழும்பி உள்ளூரான்
பொருளெல்லாம் அடிப்பீரே!
தோன்றில் புகழொடு தோன்றுதலாய்
தோன்றுவீரே தொன்று தொட்டு:
பொன்னோடு, புகழோடு நீர்தோன்ற
கூனன், குருடன் செலவினத்தில்
வட்டியெல்லாம் புரட்டுவீரே வல்வினத்தில்!
ஊர் வீட்டாள் கதவுகளைக் கழற்றிட்டீரே!
அதன் பின்பு அக்கதவு 'பெயின்ற்' அடித்து
உங்கவூட்டில் ஆட்டிநீரே கல சாரத் தொட்டில்
என ஆட்டிடுங்கள் ஆனமட்டும்
ஆட்டத்தின் முடிவினிலே
பேரினத்தார் முடித்திடுவார் இவ்வாட்டம்
பெருப்பினத்தார் அவரென்று!

— கவிஞன் 'திக்கவயல்'

## விநோத மொழி

*இலக்கியமாயலில்லா!*
*இன்சொல் மொழியில்லா!*
*விழியால் மொழி பேசும்,*
*விநோத மொழி காதல்*

— பி. பானுகோபன்

## வசந்தங்கள் உதிக்குமோ?

இனித்திடும் தென்றல்கள்
இன்பமாய்த் தவழ்ந்துமே;
அகிலத்தின் விடிவினை
புதியதாய் சமைக்குமோ?
பனித்துளிப் புஷ்பங்கள்
மாலையாய் ஆகியெம்;
பெருமிதம் கூறிய
தோள்களில் ஏறுமோ?
வான்மதி தினந்தினம்
வாழ்வினில் தோன்றியே;
வேரூன்றி எரிகின்ற
சோகங்கள் தீர்க்குமோ?
புண்பட்டு அழுகின்ற
மானிட நெஞ்சிற்குள்;
கவிதைகள் தோன்றியே
துன்பத்தை ஆற்றுமோ?
மின்னிடும் மழைத்துகள்
ஒன்றாக ஆகியெம்;
மிளிராத பாதையின்
தூசினைத் துடைக்குமோ?
கண்ணீரில் நனைகின்ற
காலத்தைப் போக்கிட
வாழ்வினில் புதுப்புது
வசந்தங்கள் உதிக்குமோ?

—இ. விஜயசுமன்

## நீருக்கு ஈடேது?

மலையில் சுரக்கும் நதியை
தாய் மார்பில் சுரக்கும்
பாலைப் போலென நினைத்து
நல்வழியில் அதனை செலுத்து
நாடும் — வீடும் — நாமும் நலம்பெற
ஓடும் இந்த நதிக்கு
ஈடாய் என்ன இருக்கு?
வீண் விரயம் ஆவதைத் தடுத்து
நல்வழியில் அதனைச் செலுத்து

— ரா. சேகர்

## தேடுகின்றோம்

இரவிலும் பகலிலும் அழுகின்றேன்
இறைவன் துணைக்கு தொழுகின்றோம்
உறவுகள் பிரிந்து வாழ்கின்றோம்
ஊர்களில் அகதியாய் மாள்கின்றோம்

கால்கள் கைகள் இழக்கின்றோம்
கடும்பனி கொட்டிட வாழ்கின்றோம்
சூழ்கவி முட்டிட வாழ்கின்றோம்
சோதனைச் சாவடிகளில் நடிக்கின்றோம்

கண்ணியம் தேடி அலைகின்றோம்
காமுகர்களால் வாடி உலைகின்றோம்
பெண்ணிய விடுதலைக்கு எழுகின்றோம்
பொதுவுடைமை மலைக்கு எழுதுகின்றோம்
எங்கும் சக்தியைத் தேடுகின்றோம்
எல்லாம் பொதுவாக ஆடுகின்றோம்
பொங்கும் பூமிக்கு வாடுகின்றோம்
புரட்சி நதிக்கு பாடுகின்றோம்.

— புலேந்தி — திலீப்காந்

## ஒற்றுமை

சாதனை பலபுரிந்து சரித்திரம்
காணும் மனிதா —
என்ன விசித்திரமிங்கே?
எம்மிடையில்லை ஒற்றுமை!

விண்ணுயர் கோபுரமோ கண்கவர்
மாளிகையோ மண்ணில் மாந்தருக்கு
வேண்டியதில்லை! பண்பாக நாம்வாழ
வேண்டும் ஒற்றுமை!

வன்செயல் வன்சொல் கொலை,
கொள்ளை
புவிதனில் வேண்டவே வேண்டாம்!
சாதிமத வேற்றுமை விரட்டுவோம் --
ஒற்றுமைகொண்டு
பகைமாற வகைசெய்வோம்!

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

## கௌரவப் பிச்சைக்காரன்!

அவ்வையின் நூல்கள் கற்றேன்
ஆம், திருக் குறளும் கற்றேன்!
செவ்வையாய் நிகண்டு கற்றேன்
சீறாப்பு ராணம் கற்றேன்!
எவ்விடம் எல்லாம் தேடி
ஏற்றநன் நூல்கள் கற்றேன்!
செவ்வையாய் பட்டம் பெற்றும்
செகத்தில் நான் பிச்சைக் காரன்!

தெய்வீக மறையாம் அந்தத்
''திருக்குர்ஆன்'' முழுவதும் கற்றேன்!
உய்வடை வழிகள் காட்டும்
உயரிய ''பைபிள்'' கற்றேன்
ஐம்பெரும் காப்பி யங்கள்
அடிநுனி வரையும் கற்றேன்
வையகம் மீதில் பாடல்
வடிக்கும் நான் பிச்சைக்காரன்!

ஆங்கில நல்ல றி(ஞ்)ஞர்
ஆக்கிய நூல்கள் கற்றேன்!
தீங்கிலாக் குரவர் செய்த
திருமுறை அனைத்தும் கற்றேன்!
பாங்கியைத் திருப்தி செய்யும்
பாலியல் முறைகள் கற்றேன்!
ஓங்கியான் ஒலித்து மென்ன
உலகில்நான் பிச்சைக்காரன்!

ஐவரின் சரிதம் காட்டும்
அரியபா ரதமும் கற்றேன்!
கௌதம புத்தன் வாழ்வின்
கருணையைத் தேர்ந்து கற்றேன்!
உய்விலா வாழ்வில் நொந்து
உலவிடும் நடைப்பிணம் தான்!
செய்தொழில் இழந்து பின்பு
செகத்தில் நான், பிச்சைக்காரன்!

— அ. கௌரிதாசன்.

ஆறறிவு மனிதா அறிந்ததில்லையா..?
ஓரறிவு குறைந்தவைகளிலுண்டு
ஓராயிரம்பாடம்
பேராசை நீக்கி புவிதனில்! பேரறிவு
பெற்றிடு

— கிஷ்ஜனா — நந்தகுமார்

# அழகான வீடமைப்புத் திட்டம்
# குறைகளோ ஏராளம்! ஏராளம்!!

## தரணியகுளத்தில் குடியேறியோர் மனம் சலிப்பு; குறை நீங்கும் என்கிறார்கள் அதிகாரிகள்

வவுனியாவில் நலன்புரி நிலையங்களில் இருந்த அகதிகளுக்கு சொந்தமாகக் காணி கொடுத்து, வீடு கட்டிக் கொடுத்து குடியிருக்க வைத்த கதை. பிள்ளையார் பிடிக்கப் போக, குரங்காகிப் போன கதையாக முடிந்து விட்டது.

நலன்புரி நிலையங்களில் இருந்த அகதிகளுக்கு வழமையாக வழங்கப்படும் மீளக்குடியமர்வு நிதி. உற்பத்தி முயற்சி நன்கொடை, வீட்டு மானியம் ஆகிய கொடுப்பனவு களை பணமாகக் கொடுத்து ஏதோ உங்கள் பாட்டை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று விட்டிருக்கலாம்.

ஆனால் இங்குள்ள அதிகாரிகள் சிறிது சேவை மனப்பான்மையாக சிந்திக்கப்போய் –

கொடுக்கப்படும் பணம் கசிப்பாகவும், சாராயமாகவும் மாறி விடாமல் ஏதாவது ஆக்க பூர்வமாக நடக்கட்டுமே என்று செயல்படப் போய் – அது அவர்களை சிக்கலில் மாட்டிவிட்டிருக்கிறது.

வவுனியாவில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்குக் காணி வழங்கி, வீடு கட்டிக் கொடுத்து அவர் களை நிரந்தரமாகக் குடியேற்ற திட்டமிடப்பட்டு அதற்கென தரணியகுளமென்ற பகுதி தெரிவு செய்யப்பட்டது.

வவுனியாவுக்கு வடமேற்காக 15 கிலோ மீற்றர் தொலை வில் தரணியகுளம் இருக்கிறது. காடாக இருந்த பகுதி துப்புரவு செய்யப்பட்டு மட்டப்படுத்தப்பட்டு 213 வீடுகள் அமைக்கப்பட்டு அங்கு அகதிகள் குடியமர்த்தப்பட்டனர்.

விளையாட்டு மைதானம், சிறுவர் பாடசாலை, பாலர் பாடசாலை என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டன. ஒரு கிராம சேவகர் இந்த வீடமைப்பு திட்டத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு, அகதிகளின் நலன்களைக் கவனித்து வருகிறார்.

தரணியகுளத்திலிருந்து வவுனியா வுக்கு தனியார் வாகனப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடியேறியுள்ள அகதிகளுக்கு தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட உள்ளது. வீடுகளுக்கு மின்சாரம் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவை தவிர வவுனியா அரச அதிபர் முதல் பிரதேச செயலர் வரை பல்வேறு அதிகாரி களும் அடிக்கடி. இந்தப் பகுதிகளுக்குச் சென்று வருகின்றனர். அகதிகளின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்து வருகின்றனர்.

கடந்த 8ஆம் திகதி கூட அந்தப் பகுதிக்கு அரச அதிபர் சென்றார். அங்குள்ள கழிப்பறைகள் தகரத்தால் மறைக்கப் பட்டிருப்பதால் அசௌகரியமாக இருப்பதாக அகதிகள் குறைபட்டனர். உடனடியாக சகல கழிப்பறைகளுக்கும் சிமெந்துச் சுவர் கட்டும்படி அரச அதிபர் உத்தரவிட்டார். இது தவிர காணிகளில் நடுவதற்கு மா, பலா, எலுமிச்சை போன்ற கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

போரூட் நிறுவனம் வீட்டுப் பாவனைக்குத் தேவையான பாய், வாளி, கத்தி, கோடரி, சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்கி உள்ளது.

இவ்வாறாக அரச அதிபர் முதல் அதிகாரிகள் வரை பார்த்துப் பார்த்து பராமரிக்கும் போது இதற்கு மேலே என்ன குறை என்ற கேள்வி எம்மைக் குடைய, தரணியகுளம் வீடமைப்புத் திட்டத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

தாண்டிக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், புதுக்குளம் ஆகிய கிராமங்களைத் தாண்டிச் சென்றதும் தரணியகுளம் வந்தது.

அடுத்து இருப்பது ஈச்சங்குளம். ஈச்சங்குளத்தை அடுத்து இராணுவ முன்னரங்க காவல் நிலைகள். அவற்றுக்கு அப்பால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி.

ஈச்சங்குளம் முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி யாக இருந்ததாகவும் புலிகளின் மாவீரர் துயிலும் இல்ல மொன்று அங்கு இன்னமும் இருப்பதாகவும் அறிந்தோம்.

தரணியகுளம் வீடமைப்புத் திட்டத்தை அடைந்ததும் வரிசையாக அமைக்கப்பட்டிருந்த வீடுகள் எம்மைக் கவர்ந்தன.

காடுகள் வெட்டப்பட்டு சமதரையாக கிடந்த நிலத்தில் வரிசையாக வீடுகள் கட்டப்பட்டு, கோடுபோட்டது போன்று ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் பாதை போடப்பட்டிருந்த நேர்த்தி எம்மைக் கவர்ந்தது.

அங்கே நின்ற அகதிகளில் ஒருவரின் அருகில் சென்று, ''முகாமிலே 10க்கு 10அடி இடத்திலேயிருந்து நெரிபட்ட உங்களுக்கு இது மிகுந்த வசதிதானே'' என்றோம்.

எம்மை யார் எவர் என்றுவிசாரித்து விட்டு எம்மை தனக்கு பின்னே வரும்படி கூறிவிட்டு முன்னால் சைக்கிளில் சிட்டாகப் பறந்தார் அந்த அகதி. அவரைத் தொடர்ந்தபடி நாமும் பறந்தோம்.

ஓர் இடத்தில் சைக்கிளை ஸ்ராண்ட் போட்டு நிறுத்தி விட்டு எம்மை மறித்து பேசத் தொடங்கினார் அவர்.

''முகாமிலே நாம் இருந்ததை விட இங்கு வசதியாக இருக்கிறோம் என்பது உண்மைதான். இங்கே சுதந்திரமாக இருக்கிறோம். பிள்ளைகளை எமது கட்டுப்பாட்டில் வளர்க்க முடிகிறது. முகாமிலே 15–16 வயது வந்துவிட்டால் பிள்ளை களைக் கட்டுப்படுத்த முடியாது. தாங்களே திருமணம் செய்து கொண்டு விடும் நிலை. இங்கு அதெல்லாம் இல்லை தான். ஆனால் இங்கே எதுவும் முழுமையாக இல்லையே!''

இப்படிச் சொன்னபடி அருகே இருந்த சில வீடுகளை அவர் காட்டினார்.

அவர் தொடர்ந்து கூறினார்.

''அண்மையில் பெய்த மழையில் இந்த வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து விட்டது. இவ்வாறாக 12க்கு மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மிதந்தன. அந்த வீடுகளிலே உள்ளவர்களின் நிவாரண அரிசி உட்பட அனைத்துப் பொருட் களும் நனைந்து விட்டன. சிறிய மழைக்கே இப்படியென்றால் மாரிகாலப் பெரு மழைக்கு என்ன நடக்குமோ என்று பயந்து கொண்டிருக்கிறோம்''.

''கட்டித்தந்த வீட்டின் கட்டுமாணத்துக்கு பயன்படுத்தப்பட்ட சிமெந்துக் கற்கள் உறுதியானவையாக இல்லை. கையால் பிசைந்தால் உதிர்ந்து விடுகிறது. இந்த நிலையில் வீடு கட்டப்பட்டிருக்கிறதே தவிர மேலே சிமெந்தினால் பூசப்பட வில்லை. ஆனால் அதற்கு வெள்ளை அடிக்கிறார்கள்''

''ஓர் அறையையும் ஒரு விறாந்தையையும் மட்டுமே வீடு கொண்டுள்ளது. குசினி என்று எதுவும் இல்லை. கேட்டால் நீங்களே பத்தி ஒன்றை இறக்கி குசினியாக்கிக் கொள்ளுங்கள் என்கிறார்கள்''.

''எம்மிடம் பணமென்று எதுவும் இல்லை. இந்த நிலையில் நாம் என்ன செய்வது? மீளக் குடியமர்ந்ததும் 6 ஆயிரம் ரூபா தருவதாகச் சொன்னார்கள். ஆனால் இப்போது அந்தப் பணத்திற்கு வீடுகளுக்கு மின்சார வசதி செய்து தருவதாகச் சொல்கிறார்கள்''.



தரணியகுளம் வீடமைப்புத் திட்டம்

''நாங்கள் எங்களுக்கு மின்சாரம் வேண்டாம். அந்தப் பணத்தைத் தாருங்கள் என்று கேட்டோம். தோட்டம் செய்ய, கடைபோட, அல்லது வீடுகளை சிமெந்தினால் பூச எமக்குப் பணம் தேவை. ஆனால் அதற்கும் மறுத்துவிட்டார்கள்''.

''எம்மை குடியேற்றும் போது அரை ஏக்கர் காணி தருவதாகச் சொன்னார்கள். ஆனால் இப்போது கால் ஏக்கர் தான் தரப்படும் என்று சொல்லப்படுகிறது''.

''எமக்கு கட்டித் தந்த கழிப்பறைக்குக் கூட 4 ஆயிரம் ரூபா செலவானதாகக் கூறுகிறார்கள். ஆனால் ஒரு மண்ணெண்ணெய் பரல் அளவு ஆழமுள்ள குழியும், அருகே கூடமும் கொண்டது கழிப்பறை. சுற்றிவர தகரத்தால் மறைக்கப் பட்டுள்ளது. இதற்கு 4 ஆயிரம் செலவாகியதா என்பது சந்தேகமாக இருக்கிறது'' என்றார்.

''தண்ணீருக்கும் பிரச்சினை. தூரம், தூரமாக குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கே தண்ணீர் எடுக்க, குளிக்க கியூவிலே நிற்க வேண்டும். கிணறுகள் இருந்தாலும் அவையும் போதாததாகவே உள்ளன''.

''எமக்கு வருமானத்துக்கு எதுவித வழியும் செய்து தரப்படவில்லை. இங்கிருந்து வவுனியாவுக்கு சென்றே உழைப்புத் தேட வேண்டியுள்ளது''.

இப்படி அடுக்கிக் கொண்டே அவர் போனார்.

அவரது தகவல்களுடன் இந்த வீடமைப்புத் திட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த கிராம சேவையாளர் எஸ். ஞானேஸ்வரனைச் சந்தித்தோம்.

''புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட 30 கோடி ரூபா பணத்தைக் கொண்டு இந்த வீடமைப்புத் திட்டம் அமைக்கப்பட்டது. 125 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த வீடமைப்புத் திட்டத்தில் இன்னமும் பல்வேறு வசதிகள் செய்து முடிக்கப்படவில்லை.''

''இன்னமும் குழாய்க் கிணறுகளும், கிணறுகளும் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றன. தேசிய வீடமைப்பு அதிகார சபை தான் கட்டடங்களை அமைத்துத் தந்தது. அவர்கள் தங்கள் வரைமுறைகளுக்கு அமைவாகத்தான் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள்.''

''வீடுகளுக்குள் தண்ணீர் வருவது தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். அணைகட்டி தண்ணீரை வேறு பக்கம் திசை திருப்பப் போகிறோம்'' என்றார்.

இவர்களைச் சந்தித்துவிட்டு புறப்பட்ட எம்மை ஒருவர் மறித்து ஓரமாகத் தள்ளிக் கொண்டு போனார்.

அந்த வீட்டுத் திட்டத்திலே வசிப்பவராம். கொஞ்சம் விவரமான ஆளாகத் தெரிந்தார்.

அவர் சொன்னார் ''இந்த வீடமைப்பில் நாங்கள் இங்குள்ள அதிகாரிகள் எவரையும் குறை சொல்லமுடியாது. அரசாங்கத்தைத்தான் குறை சொல்ல வேண்டும். இற்றைக்கு 10–15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வீட்டு மானியமாக 25 ஆயிரம் ரூபாவும், மீளக்குடியமர்வு நிதியாக 7 ஆயிரம் ரூபாவும் தான் அரசு வழங்கி வருகிறது.

''அப்போதிருந்த பொருட்களின் விலை என்ன? இப்போதைய விலை என்ன? இந்த நிலையில் எமக்கு வழங்கப்பட இருந்த இந்த மீளக் குடியமர்வு நிதி, வீட்டுமானியம் இரண்டையும் சேர்த்து 32 ஆயிரம் ரூபாவைக் கொடுத்து வீடுகட்டிக் கொடு என்றால் அதிகார சபை என்ன செய்யும்?''

''இது தவிர இங்கே குறிப்பிட வேண்டிய குறைகள் பல இருக்கின்றன. இங்குள்ள பிள்ளைகளுக்கு ஈச்சங்குளத்தில் தான் பாடசாலை கட்டியிருக்கிறார்கள். இராணுவம் – புலிகளின் எல்லைப் பகுதியில் ஈச்சம் குளம் உள்ளது. இங்கே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பதா?'' என்றார்.

''இந்த 125 ஏக்கர் நிலத்துக்காக இங்கி ருந்த காடுகள் அழிக்கப்பட்டன. மரங்கள் தறிக்கப்பட்டன. அந்த மரங்களை விறகுக்கும் வேறு தேவைகளுக்கும் எடுத்துச் சென்ற மக்கள் தடுக்கப்பட்டனர். அதனால் பாரிய மரக்குற்றிகள் எல்லாம் அப்படியே கிடந்தன.

''அவசரமாக வேலைகளை முடிக்கும்படி வந்த உத்தரவையடுத்து, அந்த மரங்களெல் லாம் கொளுத்தி எரிக்கப்பட்டன. உரிய முறையின்படி அரச மரக்கூட்டுத் தாபனத் துக்கு அவற்றை வழங்கி பல லட்சம் ரூபாவுக்கு விற்றிருக்கலாம். இவைகள் பற்றியும் எழுதுங்கள்'' என்றார்.

அடுத்து வீடமைப்பு அதிகார சபை கட்டுமாணப் பணிகளுக்கு பொறுப்பாக வுள்ள ஒருவரைச் சந்தித்தோம்.

நிதி போதாமையால் கட்டட வேலை களில் சமாளிப்புகள் மேற்கொள்ளப்பட்டதா என்று கேட்டபோது. அதனை அவர் மறுத்தார், ''ஒதுக்கப்பட்ட நிதிக்கு இந்த 20க்கு 14 அடி நீளமான வீட்டையே கட்டலாம் என திட்டமிடப்பட்டே கட்டப்பட்டது. வேறெந்த சமாளிப்புகளும் இல்லை'' என்றார்.

''அப்படி என்றால் கூரைக்கு பனம் சிலாகைகளும், பலகைகளும் மாறி மாறி அடிக்கப்பட்டுள்ளன, தகரத்திற்கு கம்பி ஆணி வைத்துப் பொருத்தப்பட்டுள்ளது. இதெல்லாம் சமாளிப்புகள் தானே'' என்றோம்.

''கொடுக்கப்பட்ட நிதிக்கு எவ்வளவு சிக்கனமாக வேலையை முடிக்க முடியுமோ அவ்வளவு சிக்கனமாக முடிக்கும் படி மேலிடத்து உத்தரவு. அப்படியே எமக்கு வழங்கப்பட்ட வரைபடம் மற்றும் திட்டங்களுக்கு அமைய செய்திருக்கிறோம்'' என்றார்.

நீங்கள் கட்டிய வீடுகளில் நீர் உட்புகுகிறதாமே என்று கேட்ட போது, ''எமக்கு நில அளவைத் திணைக்களத்தினர் தந்த வரைபடத்தின் படிதான் கட்டுமாணப்பணியை மேற்கொண்டோம்'' என்று அவர் பதில் அளித்தார். அருகே நின்ற ஒருவர் குறுக்கிட்டார், தன்னை அந்தப் பகுதியின் கம விதானை தில்லையம்பலம் என்று அவர் அறிமுகப்படுத்தி விட்டு சொன்னார். ''இந்த வீடுகள் ஆரம்பிக்கும் போதே நான் சொன்னேன். இது தண்ணீர் தேங்கும் இடம் என்று எவரும் எனது பேச்சைக் கேட்கவில்லை 5 ஏக்கர் காட்டை அழித்து விட்டோம். இதை இனி அநியாயமாக விட்டால் நட்டம் என்று சொல்லி வீட்டைக் கட்டினார்கள் இப்போது என்ன நடந்திருக்குது பார்த்தியளே'' என்றார்.

இவை எல்லாவற்றையும் கேட்டுவந்த பின் இதற்கெல்லாம் பொறுப்பாக உள்ள ஓர் அதிகாரியுடன் வவுனியா செயலகத்தில் வைத்துப் பேசினோம். ''இந்த அகதிகளுக்கு குறை சொல்வது ஒரு கலை. முகாமிலே இருக்கும் போது நிவாரணம் கேட்பார்கள். கொடுத்தால் அதனைக் காசாகக் கேட்பார்கள். காசாகக் கொடுத்தால் பொருளாகத் தந்தால் என்ன என்பார்கள். முகாமில் இருந்தால் ஐயோ அடைத்து வைத்தி ருக்கிறார்களே என்று சொல்லுவார்கள். வெளியே கொண்டு வந்து விட்டால் விட்ட இடம் சரியில்லை என்பார்கள். இதுவே இவர்களுக்கு வாழ்க்கையாகி விட்டது. மின்சாரம் வேண்டாம் காசைத் தா என்று கேட்பார்கள். காசு செலவாகியதும் மின்சாரம் தா என்பார்கள். பலருடைய திட்டமுமே மின்சாரம் வேண்டாம் பணத்தைத் தா என்று வாங்கி விட்டு களவாக வீடுகளுக்கு மின்சாரம் எடுப்பதுதான்'' என்றார்.

வவுனியா நலன்புரி நிலையங்களுக்கும் தற்போதைய மீளக்குடியேற்றங்கள் அனைத்துக்கும் பொறுப்பாக இருக்கும் திட்டப் பணிப்பாளர் விஜய லட்சுமியை சந்தித்தோம்.

''மீளக் குடியேற்றத்திட்டத்தில் நாம் அமைத்த முதலாவது கிராமம் தரணிய குளம். ஆகவே குறைநிறைகள் இருக்கத்தான் செய்யும். அவைகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. வீடுகளுக்குள் தண்ணீர் வந்ததையடுத்து அந்தப்பகுதிகளில் மேலதிக மதகுகள் அமைத்துத் தண்ணீரை வேறு பக்கம் திருப்ப வேலைகள் நடக்கின்றன.

''இன்னும் தரணியகுளத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள அகதிகளுக்கு உதவ பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. எனினும் ஆரம்பத்தில் அவர்களின் மீளக் குடியமர்வு தொடர்பான சகல வசதிகளையும் அரசே செய்ய வேண்டுமென்றதற்கமைய நாமே எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறோம். 2–3 மாதங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களும் அகதிகளுக்கு உதவ முன்வரும்போது சகல பிரச்சினைகளும் தீர்ந்து விடும்'' என்றார்.

எது எப்படியோ மீளக்குடியேற்றப் பட்டவர்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உண்மை. அது விரைவிலே தீர்க்கப்பட வேண்டியதும் அவசியம்.

–வன்னிமைந்தன்

# பொங்கி எழுந்தது கிழக்கு!

மாவனல்லையில் முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு கும்பல் நடத்திய வெறியாட்டம் கிழக்கிலும் முஸ்லிம்களை ஆத்திரமடையச் செய்துள்ளது.

முஸ்லிம்களின் உயிர், உடமைகளை அழித்தும் பள்ளிவாசல்களை உடைத்தும் நடத்திய் இந்த


மாவனல்லையில் சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்களில் ஒன்று

இனவெறித்தர்பார் முஸ்லிம் மக்களை மட்டுமின்றி சிறுபான்மைச் சமூகங்களையே பெரும்பான்மையினர் மீது சந்தேகம் கொள்ள வைத்து விட்டது.

மாவனல்லைச் சம்பவங்களைக் கண்டித்தும், அங்கு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இரு தினங்கள் பூரண ஹர்த்தாலும் அனுஷ்டித்தனர்.

அதே சமயம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் ஏற்பாட்டில் முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் ஏ.ஆர்.எம். ஜெமீல் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அறுநூறுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

''கடைகளை எரிக்கும் காடையர்களே கறுப்பு ஜுலையை உருவாக்காதீர்''— ''பள்ளிவாசல்களை எரிப்பதை நிறுத்து''— ''மாவனல்லை சம்பவத்தின் பின்னணியை அரசே


சம்மாந்துறையில் 'மெஸ்றோ' அமைப்பின் ஏறபாட்டில் நடந்த ஆர்ப்பாட்டம்

கண்டுபிடி''— ''பொலிஸாரே பாதுகாப்பில் பாரபட்சம் ஏன்?'' — ''அரசே சிங்கள— முஸ்லிம் ஒற்றுமையைச் சீரழிக்காதே''— என்பன போன்ற வாசகங்களை கொண்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்ததுடன், கண்டனக் கோஷங்களையும் எழுப்பினர்.

பொங்கி எழுந்த மாணவர் ஆர்ப்பாட்டம் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகச் சுற்றாடலை வியக்க வைத்தது.

## சம்மாந்துறையில்

ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் சம்மாந்துறையிலும் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சம்மாந்துறை ஹிஜ்ராபள்ளி வாசலில் ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றிய பின்னர் அங்கிருந்து பிரதானவீதியூடாக ஹிஜ்ரா சந்திவரை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை, உலமாசபை, மஜ்லிஸ் அஷ்ஷூறா, ஹிஜ்ரா ஐக்கிய நலன்புரி அமைப்பு என்பவற்றின் அனுசரணையுடன் முஸ்லிம் கல்வி சமூக ஆய்வுகள் நிறுவனத்தின் (மெஸ்றோ) சம்மாந்துறைக்கிளை இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

'மெஸ்றோ' அமைப்பின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி அன்வர் ஸியாத் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


ஹர்த்தால் தினத்தன்று கல்முனை நகர வீதி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

''முஸ்லிம்களை ஆயுதம் ஏந்தவையாதே''— ''முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிக்கத் திட்டமிட்ட சதியா?''— ''சிங்களப் பேரினவாதமே இனவெறியைக் கக்காதே''— ''மாவனல்லையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு முழு நஷ்டஈடு வழங்கு'' என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்ததுடன், அதனைக் கோஷமாகவும் எழுப்பினர்.

## அம்பாறையில்

இதே வேளை மாவனல்லைச் சம்பவங்களைக் கண்டித்து இருதினங்கள் அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தால் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது.

கல்முனை, நிந்தவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், மாவடிப்பள்ளி, சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மருதமுனை, நற்பிட்டிமுனை, பொத்துவில், மாளிகைக்காடு முதலான பிரதேசங்களில் இந்த ஹர்த்தால் நடைபெற்றது.

ஹர்த்தால் தினங்களில் பாதைகளெங்கும் டயர்கள், மரக்குற்றிகள் போடப்பட்டு எரிக்கப்பட்டதால் எவ்வித போக்குவரத்துக்களும் நடைபெறவில்லை.

கண்டன ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால் என்பன முஸ்லிம்களின் ஒற்றுமைக்கும், மானசீக உணர்வுக்கும்


எரிக்கப்பட்டு அலங்கோலமாகக் காணப்படும். பள்ளிவாசலின் உள்புறம்

பெரும் எடுத்துக்காட்டாக அமைந்ததுடன், அம்பாறை மாவட்டத்தையே இருதினங்கள் ஸ்தம்பிக்கவும் செய்து விட்டன.

அதே சமயம் மாவனல்லைச் சம்பவங்கள் மூதூரிலும் எதிரொலித்தன. கடந்த 5ஆம் திகதி நடு இரவு மக்கள் தூக்கத்தில் ஆழ்ந்தவேளை தீச்சுவாலை மூதூர் நகர மக்களைத் தட்டி எழுப்பிக் கலங்கவைத்தது.

கடைகள் சில எரிந்து சாம்பலாகின.

இவற்றுள் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று முற்றாக சேதமடைந்தது.

மேலும் பெறுமதிமிக்க புகைப்படக்கருவிகளையுடைய ஸ்ரூடியோ, சைக்கிள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் கடை என முஸ்லிம் தனியார் வர்த்தகர்களின் உடைமைகள் திட்டமிட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன.

இதில் ஆச்சரியம் என்ன என்றால்

முஸ்லிம்களின் கடைகள் தீக்கிரையானதைத் தொடர்ந்து பெரும்பான்மை இன மக்களின் சில கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டதுதான்.

இத்தீவைப்புச் சம்பவங்கள் தொடர்பாக பலவிதமான ஊகங்கள் தற்பொழுது எழுந்துள்ளன.

முஸ்லிம்களின் கடைகளை எரித்தவர்களே ஒரு


சம்மாந்துறையில் ஆர்ப்பாட்டம் நடத்தியோரில் மற்றும் ஒரு பகுதியினர்.


சாரார்மீது மட்டும் சந்தேகம் ஏற்படாமல் இருப்பதற்காக பெரும்பான்மை இனத்தவர்களின் கடைகள் சில வற்றையும் எரித்தார்கள் என்று கூறப்படுகிறது.

சம்பவம் நிகழ்ந்த மூதூர் ஆதார வைத்திய சாலைக்கும் வலய பணிமனைக்கும் இடைப்பட்ட பகுதி இப்போது சுமூக நிலைக்கு வந்துள்ளது.

— ஏ.எல்.எம். சலீம்







கல்முனையில் ஹர்த்தால் தினத்தில் வீதியின் நடுவில் டயர் போட்டு எரிக்கப்படுகிறது.






இப்பத்திரிகை கொழும்பு -06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 மே 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.